பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 | 03 ஜூன் 2017 | விதி : 51



பாலையும் பாலையும்



எட்டாப் பொருளாகும் மாட்டிறைச்சி



முகமூடிகளைக் கழற்றிக் கொண்ட ஊடகவியலாளர்கள்



யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்

# தொடரும் சாபக்கேடுகள்



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடிகளைக் கழற்றிக்கொண்ட ஊடகவியலாளர்கள் – பிரமுகர்கள்

கூட்டமைப்பும் புலிகளும் 11

● தயாளன்




சுரேஷ்


செல்வம்


துரைரத்தினம்


ஜனா

புலிகளைப் பொறுத்த வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கான பணிகளை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்புக்களைச் சிவராமிடம் ஒப்படைத்தமை ஓர் அரசியல் ரீதியான முன்னெடுப்பு. இதனை விட ஏனைய இயக்கங்களைக் கையாளுவதற்கெனச் சில உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆரம்பத்தில் மாதவன் மாஸ்டரிடம் இப் பொறுப்புக் கையளிக்கப்பட்டிருந்தது. தமக்குச் சாதகமாக நிலைமைகளை உருவாக்குவதே இவர்களது பொறுப்பு. ஈ.பி.ஆர்.எல்.எவ்வைக் கையாள வவுனியாவிலுள்ள அதன் முக்கியஸ்தர் ஒருவர் மூலம் தொடர்பு கொண்டனர். தமிழன்பன் போன்றோர் இவ்வாறான பணிகளை மேற்கொண்டனர். ஆபத்தான இடங்களில் பயணம் செய்து இவ் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் உயிர் இழப்புக்களும் ஏற்பட்டன. சிவராமின் முயற்சிகள் கனிந்து வரும் வேளை ரெலோவினர் புலிகளை மட்டக்களப்பில் சந்தித்தனர்.

**ஜனா-இரா.துரைரத்தினம் விடயத்தில் இறுக்கமாக இருந்த புலிகள்!**

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பிரசன்னாஆகியோர் கொக்கட்டிச்சோலையில் கரிகாலன், சிறப்புத் தளபதி ரமேஷ் முதலான புலிகளின் பிரதி நிதிகளுடன் கலந்துரையாடினர். சண்.தவராஜா என்ற ஊடகவியலாளர் செல்வத்தின் செயலர் என்றோ உதவியாளர் என்றோ ஏதோ ஒரு விதத்தில் கலந்து கொண்டார். நடேசன், தராக்கி ஆகிய பத்திரிகையாளர்களும் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஆகியோரும் அங்கு சென்றிருந்தனர். அவசரகாலச் சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களித்தமையால் மட்டக்களப்பில் இருந்த புலிகளுக்கும் அவர்கள் மீது நல்லபிப்பிராயம் ஏற்கெனவே ஏற்பட்டிருந்தது. சுமுகமான முறையில் நடைபெற்ற இப்பேச்சில் எக்காலத்திலும் ஜனாவை ( கோவிந்தன் கருணாகரன் ) வேட்பாளராக நிறுத்தக் கூடாது என்பதை வலியுறுத்தக் கரிகாலன் தவறவில்லை. அதே போல் அடுத்து நடைபெற்ற சுரேஷ் பிரேமச்சந்திரனுடனான சந்திப்பில் இரா.துரைரத்தினத்தை வேட்பாளராக நிறுத்தக் கூடாது என்ற விடயம் வலியுறுத்தப்பட்டது. எல்லாவற்றுக்கும் தலையாட்டினார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.எனினும் இறுதி யுத்தத்தின் பின் 2010 தேர்தலில் புலிகள் சார்பானோரை வேட்பாளர் பட்டியலிலிருந்து நீக்கியமையை நியாயப்படுத்தியிருந்தார். வெளிநாட்டிலிருந்தோர், அரசுடன் இணைந்து செயல்பட்டோரைத் தவிர ஏனையோருக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்கப்பட்டுள்ளதாக பி.பி. சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். ஜெயானந்தமூர்த்தி, கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், போன்றோரின் கடவுச் சீட்டுகளுடன் இவரதும், சம்பந்தன் ஐயா, மாவை, செல்வம் போன்றோரினதும் கடவுச் சீட்டுக்களை ஒப்பிட்டிருந்தால் உண்மை புரிந்திருக்கும். அத்துடன் எந்த நாட்டுக்குமே போகாத சொலமன் சூ சிறிலையும் இந்தப் பட்டியலுக்குள் கொண்டுவந்து விட்டார். புலிகளின் தீர்மானத்துக்கு மாறாக இரா. துரைரத்தினத்தை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வந்து விட்டார். அதே போல் ரெலோ செல்வமும் ஜனாவை மீண்டும் தமது கட்சிக்குள் கொண்டுவந்து விட்டார். 2009 இறுதி யுத்தம் முடிந்ததும் மட்டக்களப்பில் வெடி கொளுத்தி மகிழ்ந்தவர் இரா.துரைரத்தினம். 2011 மாமனிதர் என்ற கௌரவத்துடன் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவு நிகழ்வை நடத்துவதை ஆட்சேபித்தவர். மாமனிதர் என்பதெல்லாம் முடிந்து போன கதை என்பது இவரது வாதம்.

**போராட்டத்தைப் பயங்கரவாதம் என வர்ணித்த தமிழ் எம்.பி !**

ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல். எவ்வுடனான சந்திப்புக்களின் போது போது சமுகமளித்திருந்த ஒருவர் நாடாளுமன்றத்தில் 09.06.2011 அன்று விலங்குகள் தொடர்பான சட்ட மூலத்தில் உரையாற்றியபோது “பயங்கரவாதத்தை அழித்த இந்த அரசாங்கத்துக்கு விசர் நாய்களைக் கொல்வது என்பது கடினமான செயல் அல்ல” எனக் குறிப்பிட்டதாக ஹன்சாட்டில் பிரசுரமாகியுள்ளது. மற்றொருவர் தமிழகத்தில் ஈழத்தின் பிரபல அரசியல் ஆய்வாளராக இருந்த ஒருவரைச் சந்தித்தார். அப்போது அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக இவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது “இவங்கள் கொஞ்சக் காலம் உள்ளுக்க இருக்கட்டும். வெளியில வந்தால் அரசியலைக் குழப்பிப் போடுவாங்கள்” எனப் பதிலளித்தார் இவர். தற்போது புலிகள் களத்தில் இல்லாததால் எல்லோருமே தமது முக மூடிகளைக் கழற்றி விட்டனர்.

• • •

**வரலாற்றைத் திரிபுபடுத்தும் ஊடகவியலாளர்கள்!**

இக்கட்டுரைத் தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல தவறான புரிதல் ஒன்று புலம்பெயர் தமிழர்களிடையே உள்ளது. ஒருவர் கருணா ஒரு துரோகி என்பதைச் சொன்னாலே போதும் அவர் ஒரு தேசியவாதி. அதன் பின்னால் மறைமுகமாகப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவத்தைக் கண்டுகொள்ள மாட்டார்கள். வரலாற்றைத் திரிபுபடுத்துவத்தைக் கவனிக்கவே மாட்டார்கள்.

முக்கியமான ஒரு விடயம் - கருணா தலைமைக்குத் தெரியாமல் வன்னியிலிருந்து தனது படையணிகளை மட்டக்களப்புக்குக் கொண்டு சென்றார் என்று நிறுவ முயன்றார் நிராஜ் டேவிட் என்ற ஊடகவியலாளர். பார்ப்பவர்களை இப்படியெல்லாம் துரோகம் செய்தாரா கருணா ? என்ற சிந்தனையில் ஆழ்த்தினார். வரலாற்றைத் திரிபுபடுத்துவத்தை எவரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. தமிழரின் ஆறாவது அறிவைக் கேள்விக்குள்ளாக்கும் விடயம் இது.

கருணா துரோகிதான் ! அதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொண்ட படையணியைப் பிரபாகரனுக்குத் தெரியாமல் நகர்த்த முடியுமா? பொட்டம்மான் தலைமையிலான புலனாய்வுப் பிரிவு இப்படி நடக்கப் போகிறது என்று பிரபாகரனுக்குத் தகவல் அனுப்பவில்லையா ? என்றெல் லாம் கேள்வி வருமே - புலிகளின் தலைமையைப் பற்றிய நிராஜின் கணிப்பு என்ன ?

**பெயர் சொல்லி அழைத்த கப்டன் கொத்தலாவல!**

ஒரு விடயம் குறிப்பிட்டாக வேண்டும்.- அது கைதிகள் பரிமாற்றம் தொடர்பானது. இந்த விடயத்தைக் கையாள சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவரும் சந்திரிகாவின் கணவருமான விஜேகுமாரணதுங்கா யாழ்ப்பாணத்துக்கு வந்தார். யாழ் கோட்டையிலிருந்து வெளியேவந்த சமயம் அவரைப் புலிகள் வரவேற்றனர் - அதே வேளை அவருடன் கூட வந்த புகைப்படப்பிடிப்பாளரைச் சுட்டிக் காட்டி, அவரது பெயரையும் சொல்லி, அவர் அரச புலனாய்வாளர் என்றும் அவரை உள்ளே அனுமதிக்க முடியாதெனவும் கூறினார்கள் புலிகள். அவரை அங்கேயே தங்கவைத்து விட்டு விஜேகுமாரணதுங்கவும் கூட வந்த ஏனையோரையும் அழைத்துச் சென்றனர். அது போலவே கப்டன்.கொத்தலாவல வந்த போதும் ஒரு சம்பவம் நடந்தது.முதன் முதலாக சிறிலங்கா இராணுவமும் புலிகளும் நேரில் சந்தித்துக் கொண்டார்கள். இதில் கிட்டுவின் புகைப்படம் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும் - குள்ளம் - சற்று மொட்டை என்ற தகவல் போயிருக்கலாம். ஆனால் “ஆ .... ரவி, ஆ ... கேடி” எனத் தனக்கு முன்பின் அறிமுகமில்லாதவர்களைப் பெயர் சொல்லி அழைக்க கொத்தலாவலவால் எப்படி முடிந்தது ?

யுத்தத்தை நடத்திச் செல்பவர்கள் தங்கள் எதிரியைப் பற்றி முற்றாக அறிந்திருக்காவிட்டாலும் முக்கியமான சில விடயங்களை மனதில் வைத்திருப்பார்கள். கொத்தலாவல புலிகளில் முக்கியமானவர்களின் படங்களை எப்படியோ சேகரித்து வைத்திருந்திருப்பார். ஒவ்வொருவரது முகமும் அவரது மனதில் பதிந்திருக்கும். இதெல்லாம் போராட்டங்களையும் சமர்களையும் கண்டவர்களுக்குத்தான் புரியும். அப்படியிருக்கையில் தமது இயக்கத்தின் தலைமைக்குத் தெரியாமல் நிராஜ் 2000 என்றும் இரா.துரைரத்தினம் 3000 என்றும் சொல்லும் வீரர்களை எப்படி மட்டக்களப்புக்குக் கொண்டு போயிருக்க முடியும் ?

படையை நகர்த்திச் செல்கையில் ஒவ்வொரு வீரருக்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கும்? இவர்கள் சொல்லும் தொகையில் நகர்ந்தால் அதன் நீளம் எவ்வளவு இருக்கும்? சிங்கள இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளால் ஆயுதங்களுடன் இவ்வளவு தொகையினர் நகர எவ்வளவு நேரம் பிடிக்கும்? என்னென்ன பிரச்சினைகளைச் சந்திக்க நேரும்? என்பதெல்லாம் இவர்களுக்குப் புரியாத விடயம்.

**உண்மை நிலவரம் என்ன ?**

1) இப்படையணிகளை வழியனுப்பி வைத்த புலிகளின் பிரமுகர்களான தயாமோகன், ஜிகாத்தன் போன்றோர் தற்போது புலம்பெயர் தேசங்களில் தான் இருக்கிறார்கள் .

2) எந்தப் படையணியாக இருந்தாலும் அவர்களின் உணர்வுகள் - எதிர்பார்ப்புக்களைத் தலைவர் பிரபாகரன் அறிந்து விடுவார். அந்த வகையில் மட்டு. படையணிகளின் எதிர்பார்ப்புக்களை அவர் அறிந்தே வைத்திருந்தார். அவர்களது பயணம் தாமதமாகவே “இவர்கள் போகவேண்டும் - போக வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் போகவில்லையா ?” என்று கேட்டிருக்கிறார்.

3) மட்டு. படையணிப் போராளிகளுக்கு அவர்களின் பயணத்துக்கு முன்பாக பல பிரிவினரும் விருந்தளித்துக் கௌரவித்திருக் கின்றனர்.

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் சாபக்கேடுகள்



கடந்த சில தினங்களாகப் பெய்து கொண்டிருக்கின்ற மழையினால் இலங்கையிலுள்ள 7 மாவட்டங்களில் ஏறத்தாழ 5 லட்சம் மக்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றனர். அவற்றுள் இரத்தினபுரி மாவட்டமே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. இங்கு 20 ஆயிரம் மக்கள் நேரடியாக வெள்ளப் பாதிப்புக்கு முகம் கொடுத்திருக்கிறார்கள். காலி, நெலுவ, தவலம, நியகம, பட்டேகம ஆகிய பகுதிகளே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்திருக்கிறது. இதுவரை 200 அதிகமானோர் இறந்திருப்பதோடு 111பேர் வரை காணாமல் போயிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. வரும் நாள்களில் இத்தொகை இன்னும் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாகச் செய்திகள் சொல்லுகின்றன.

காலி மாவட்டத்தில் 36,314 குடும்பங்களைச் சேர்ந்த 142,149 பேர் வெள்ளத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக கம்பஹா, காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி என்பன அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் இரத்தினபுரி மாவட்டத்தில் மட்டும் 46 பேர் இறந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அனர்த்தத்திலிருந்து மக்களை மீட்டெடுக்கும் பணியில் உதவிடுமாறு இலங்கை அரசு ஐ.நாவைக் கோரியிருக்கிறது. ஐ. நா வைச் சேர்ந்த முகவர்கள் பலர் இந்த மீட்புப் பணியில் ஒத்து உதவுவதோடு, மீட்கப்பட்டோருக்கான முதல் உதவிகளையும், அவர்களுக்கான ஆகாரங்களையும் வழங்கி வருகிறது. UNICEF நீர்த்தாங்கிகளையும்,தண்ணீரைச் சுத்திகரிக்கக்கூடிய இரசாயன வில்லைகளையும் தற்காலிக வீடமைப்பதற்கான தறப்பாள் சீற்களையும் வழங்கவிருக்கிறது.

வட பகுதியிலும், குறிப்பாக யாழ். மாவட்டத்திலும் பல்கலைக் கழக மாணவர்கள் உட்படப் பலர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்காக நிவாரணங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு அனுப்ப வேண்டும் என்ற துடிப்புப் பலரிடமிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பலர் நேரடியாகவும், மறை முகமாகவும் துயரில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதற்கு சமூக வலைத்தளங்கள் சாட்சியாக இருக்கின்றன. மிகவும் துயர் தோய்ந்த நாள்களாகவே காலப்பதிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மனித மனம் எளியதென்பதற்குச் சான்றாகப் பல பழைய பதிவுகளை ஞாபகப்படுத்திக் கொண்டுதானிருக்கின்றது.

கடந்த வாரம் நண்பரொருவர் காலி மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் முன்பு தனியார் நிறுவனமொன்றின் பணியின்பேரில் வன்னிப் பகுதிக்குச் சென்று இறுதிப்போரின்போது வீடு திரும்ப முடியாது அங்கு நின்றவர். போரின் பின்பு விடுவிக்கப்பட்ட போதுதான் யாழ்ப்பாணம் வந்தவர். அவரைச் சந்தித்தபோது அவர் மிகவும் குழம்பிப்போயிருந்தார். தான் அங்கு சந்தித்த அவலங்கள் முள்ளிவாய்க்காலை ஒத்ததாகச் சொன்னார். ஆனாலும் இரண்டுக்கும் நிறைய வேறுபாடுகள் இருப்பதாகச் சொல்லி அரசையும், பொது நிறுவனங்களையும் சாடியிருந்தார். ஏனெனில் அங்கு அனர்த்தம் நடைபெற்ற உடன் அரசும், மக்களும், தனியார் நிறுவனங்களும் விரைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றரெனவும், இதே போன்று முள்ளிவாய்க்காலில் முன்னேற்பாடாகவே அரசு திட்டமிட்டு நடத்திய படுகொலைகளும், அதனால் ஏற்பட்ட அனர்த்தங்களும் இடம்பெற்ற வேளை இது போன்ற மனித நேயம் எங்கே சென்றிருந்ததெனவும் அவர் என்னைக் கேட்டபோது நானும் குழம்பிப் போய்த்தானிருந்தேன். இன்று அங்கு பாதிக்கப்பட்டிருப்பதுவும் மனிதர்களே. அன்று இங்கு அவலப்பட்டுப் போனவர்களும் மனிதர்களே. இங்கு மக்கள் கொன்று குவிக்கப்பட்டபோது அவர்கள் ஒன்றும் செய்திருக்க வேண்டாம். அரசுக்கெதிராக வீதிகளிலே இறங்கி தமது எதிர்ப்பையாவது தெரிவித்திருக்க வேண்டாமா? மாறாக அரசுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருந்த அத்தனைபேரும் - தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் மூவினத்து மக்களும் , பாற்சோறு பரிமாறி அந்த கொலைகளை கொண்டாடியதைப் பலர் கண்டும் காணாததுபோல இருந்திருக்கின்றனர்.

அன்று புலிகளுக்கெதிரான யுத்தம் என்று அறிவித்த அரசு நேராகவோ அல்லது குறுக்கு வழியாகவோ இந்த யுத்தத்தை நடத்தி முடித்திருந்தது. புலிகளை வென்றதென அரசு அறிவித்தவேளை உடனடியாகத் தமது நடவடிக்கைகளை மாற்றியிருக்க வேண்டும். போர் ஒரு மனிதாபிமான நடவடிக்கையாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். அதுவே போர் தர்மம். வரலாறு புகட்டுகின்ற பாடமும் அதுவே. எதிரியை நிராயுதபாணியாக்கிவிட்ட பின்பு தமது முன்னெச்சரிக்கையாக சில இராணுவ நடவடிக்கை என்பது தவிர்க்க முடியாததொன்றென இலங்கை அரசு தன்னை நியாயப்படுத்தலாம். அதன்படி கைதுகளையும் நியாயப் படுத்தலாம். ஆனால் நடந்தது வேறொன்றாகவெல்லவா இருக்கிறது. போர் முற்றுப்பெற்ற பின்னரேயே பலகொலைகளும், வன்புணர்வுகளும் நடைபெற்றிருக்கின்றன. பெரும்பாலான இராணுவத்தினர் மிருகங்களை விடக் கேவலமாக நடந்துகொண்டமை எல்லாம் போருக்குப் பின்னாலேயே பதிவாகியிருக்கிறன.

நேற்றைய தினம் கிளிநொச்சிக்கு அருகாமையில் ஏ-9 வீதியருகே தேநீர்க்கடை ஒன்றில் இருவர் சந்தித்துக் கொண்டனராம். இருவரும் நீண்டகால நண்பர்கள் எனவும் தமது விடயங்களைப் பரிமாறிக் கொண்டிருந்த வேளை பத்திரிகைச் செய்திபற்றிப் பேசத் தொடங்கியிருக்கின்றனர். அவற்றுள் மிக முக்கியமானது காலி மாவட்டம் மற்றும் அதைச் சார்ந்த பிரதேசங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வெள்ள அனர்த்தமும் அதன் மீட்புப் பணிகள் பற்றியதுமாக இருந்தது. அவர்களது பேச்சின் நடுவே அங்கு இருந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்த ஒருவர் குறுக்கிட்டாராம். அவர் தலை முடி வளர்த்திருந்தாராம். தாடி, மீசையுடன் காவி வேட்டியும் அணிந்திருந்தாராம். ஒரு புன்னகையுடன் அவர் சொன்ன வார்த்தைகள் எங்களையும் சற்றுச் சிந்திக்க வைத்திருக்கிறது. “உது தம்பிமார் இயற்கையின்ரை சீற்றம். அதோடை முள்ளிவாய்க்காலிலை செத்துப்போன ஆன்மாக்களின்ரை சாபம். அதுதான் 2009 இற்குப் பிறகு ஒவ்வொரு மே, ஜூன் மாதமும் இப்படி நடக்குது. வேணுமென்றால் பேப்பரை எடுத்துப் பாருங்கோவன்” என்று சொல்லிவிட்டு அவர் சென்றுவிட்டார். அவர் குறிப்புப்படி சில தகவல்கள் இதோ.

இதே மாதிரியாக கடந்த 2016 மே இல் நடைபெற்ற அனர்த்தங்கள் பற்றிய சில குறிப்புகள் கடந்த 2016 மே மாத ஐ.நாவின் மனிதநேயச் செயற்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையில், சில தினங்களுக்கு முன் அடித்த புயலால் ஏற்பட்ட இயற்கைச் சீற்றம் இலங்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தினாலும் மேற்கிலங்கையே பெருமளவில் பாதித்திருக்கிறது. 301,602 பேர் வரை வெள்ளத்தினாலும், அதைத் தொடர்ந்த நிலச் சரிவினாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். 104பேர் வரை மரணித்திருப்பதாகவும் 99பேர் வரை காணாமல் போயிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 21,484 பேர்வரை இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்திருக்கிறார்கள். 623 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டிருக்கின்றன. 4,414 வீடுகள் சேதமடைந்திருப்பதாக ஐ.நா. அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. கடந்த 25ஆண்டுகளில் இடம்பெற்ற மிக மோசமான இயற்கையழிவு இதுவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 வெள்ளமும் மாற்றமும்



தென்னிலங்கையரை உலுக்கிய வெள்ள அனர்த்தம்தான் கடந்த வாரம் சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்பட்டன. வெள்ள அனர்த்தம் தொடர்பான செய்திப் பரிமாறல்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண சேகரிப்புகள் மற்றும் அவை தொடர்பான தகவல்கள் எனப் பல விடயங்கள் சமூக வலைத்தளங்களில் பதிவாகின.

இவ்வாறான அழிவை மே மாதத்தில் தென்னிலங்கை ஒவ்வொரு வருடமும் சந்தித்து வருகின்றது. 2009 இல் முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டதன் சாபமே இதுவென்றும், அன்று எங்கள் சாவைக் கொண்டாடியவர்களுக்கு இந்தச் சாவுகள் தேவையே என்ற பதிவுகளும் கணிசமாகக் காணப்பட்டன. எனினும் இவ்வாறான பதிவுகளை தவறு என்று சுட்டிக்காட்டும் பதிவுகளையும் சமூக வலைத்தளங்களில் காண முடிந்தது.

சில பதிவுகள் அரசியல்வாதிகளை குறிப்பாக நாமல் ராஜபக்ஷவை எள்ளி நகையாடுவதாக இருந்தன. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் பதிவுகளுக்கும் பஞ்சமிருக்கவில்லை.

## 2 கொதிக்கும் போராளிகள்

திருகோணமலை மல்லிகைத்தீவில் 3 சிறுமிகளை நால்வர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை பலருக்கும் அதிர்ச்சியையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. சிறுமிகளைக்கூட விட்டு வைக்காத வெறியர்களாகிப் போய்விட்டவர்களை பேஸ்புக் போராளிகள் வறுத்தெடுத்து விட்டார்கள்.

நீளும் வித்தியா படுகொலை வழக்கையும் இதையும் சம்பந்தப்படுத்திய பதிவுகளும் இடம்பெற்றன. அப்பாவி சிறுமிகளின் துயரம் சமூக வலைத்தளத்தில் அகலவே எதிரொலித்தது. இவ்வாறான நடத்தைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ள இத்தருணத்திலும் சிலர் பேஸ்புக்கில் பொங்கி எழுந்து விட்டு அடுத்த சம்பவத்துக்காக பொங்குதவற்காக தணிந்திருக்கிறார்கள்.

கிரிஷாந்தி தொடக்கம் வித்தியா இப்போது திருமலையில் 3 சிறுமிகள் எனப் பட்டியல்கள் நீள்கின்றன. பேஸ்புக் போராளிகளும் போராடுகின்றனர். இரண்டும் சமனிலிகளாக தொடர்கின்றன.



## 3 அறிவுக்கோவிலின் எரிப்பு



யாழ். பொது நூலகம் சிங்கள குண்டர்களால் எரியூட்டப்பட்ட 36 ஆம் ஆண்டு நினைவு நாள் கடந்த வாரம் கடந்தது. தமிழர்களின் அடையாளமாக இருந்த நூலகத்தின் அழிவும் - அதன் பின்னர் தொடர்ந்த தமிழின அழிப்பும் உலகம் அறிந்தவையே.

1981 மே 31 நாளில் நடந்தவைகள், அது தொடர்பான செய்தி, காட்சிப் பதிவுகளை பலரும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்தனர். தமிழினத்தின் வரலாற்றழிப்பாக பலரும் கருதிய நூலக எரிப்பு தொடர்பான பதிவுகளும் படங்களும் மூலமாக மீண்டும் ஒரு செய்தியையும் பல கருத்துக்களையும் வலைத்தளப் பதிபவர்கள் கூறிச் சென்றனர்.

## இந்தவார மீம் (Meme)

நானும் பேஸ்புக்க ஒரு
கலக்கு கலக்கலாம்னு
தான் காலைல வந்தா



ஆனா கரண்டி
எங்க இருக்குன்னு தா
தெரியல!!!!!

---

தற்காப்புக்காக நீங்க
என்னென்ன கத்து
வெச்சிருக்கீங்க?



மாவு ஆட்டறது, தோசை சுடறது,
அடிக்க வந்தா ஓடறது..!

---

முடி வெட்ட வந்தா பேசியல்
பண்ணிக்கிறிங்களான்னு
கேட்கிறான்..
சரி எவ்வளவுடான்னு கேட்டா
800 ஆம்...



நான் போட்டோஷாப்பே
பண்ணிக்கிறேன் டா..

---


ஆண்டி,அம்மா ஒரு கப்
சர்க்கரை கேட்டாங்க..
தர்றேன் குட்டி,வேற என்ன
சொன்னாங்க?



அந்த கிறுக்கி தரலேன்னா
எதிர் வீட்டு சிறுக்கிகிட்ட
கேளுன்னாங்க..

---

தண்ணி கிடைக்காம
நிலத்தடியில ஓராயிரம் அடி
தோண்டி போர் போட தெரிஞ்ச
நமக்கு...



அதே நிலத்துல ஒரு அடி
தோண்டி ஒரு மர செடிய நட
தெரியாதது ஏனோ!

---

ஞாயிற்றுக்கிழமை மட்டும் 4G
ஸ்பீடுல, பொழுது வேகமா
போயிருது....



வேலைக்கு போற மத்த
நாளெல்லாம் 2G ஸ்பீடுல,
மெதுவா போற மாதிரி
டிசைன்ல இருக்குது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com


## குழந்தைகளுக்கான குரல்

மூதூர் மல்லிகைத்தீவில் மூன்று பாடசாலைச் சிறுமிகள் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். நாடே வெள்ள அனர்த்தத்தால் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது இப்படியொரு கொடுமை கிழக்கு மாகாணத்தில் நடந்திருக்கிறது.

குறித்த சிறுமிகள் மூவரும் வெறும் பத்து வயது நிரம்பியவர்கள். ஒரே பாடசாலையில் கற்பவர்கள். பாலியல் தொடுகைகள் பற்றிய அரிவரி கூட அறியாத பிஞ்சுகள். அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் பள்ளிகூடமும், பாடங்களும்,புத்தகங்களும், சக நண்பர்களும், விளையாட்டுக்களும், தின்பண்டங்களும், விளையாட்டுப் பொருள்களுமே. இவையே அவர்களின் உலகம். இவையே அவர்களின் மகிழ்வைத் தீர்மானிப்பவையாகவும் இருந்தன. அதைத்தாண்டிய உலகின் கொடூரமுகம் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இந்த அப்பாவித்தனம்தான் பாலியல் வேட்கை கொண்ட மிருகங்களுக்கு வசதியாகப் போய்விட்டது. அந்தப் பாடசாலையில் கட்டட நிர்மாணப் பணிகளுக்காக வந்திருந்தவர்களில் இருவர் இத்தகைய பாலியல் மிருகக் குணம் கொண்டவர்களாக இருந்துவிட்டார்கள். குருத்துகளைக் குறிவைத்தார்கள். அவர்களின் வலையில் 3 குழந்தைகளும் வீழ்ந்து போனார்கள்.

எப்படியோ விடயம் வெளியில் வந்ததால், அந்த மிருகங்களின் தொடர்வேட்டைக்கு முற்றுப்புள்ளி வீழ்ந்துவிட்டது. கட்டட நிர்மாணப்பணிக்கு வந்தவர்களில் இரு முஸ்லிம் இளைஞர்களே இந்த அக்கிரமத்தைச் செய்தனர் என்று கூறப்பட்டது.

உடனேயே இந்த பாலியல் வதை ஒரு இனரீதியான தாக்குதலாக மாறத் தொடங்கிவிட்டது. இப்படி குழந்தைகள் மீதான பாலியல் வதை, இனவாதத்தின் பக்கம் திசைதிரும்பிய தருணத்தில் திரைமறைவில் பல காரியங்கள் நடந்து முடிந்துவிட்டன. குழந்தைகளைச் சிதைத்த இருவரும் கைது செய்யப்பட்டது பற்றி எந்தத் தகவலும் இல்லை. அரசியல்வாதிகளின் துணையோடு தப்பித்துவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

எப்போதும் இப்படித்தான். வித்தியாவின் கொலை வழக்கிலும் பிரதான சந்தேகநபர் மக்களால் பிடித்துப் பொலிஸாரிடம் கொடுக்கப்பட்ட பின்னரும், எவருக்கும் தெரியாமல் விடுவிக்கப்பட்டு, சுவிஸ்"க்கு தப்பிக்க இருந்தார். நல்லவேளையாக மீண்டும் கொழும்பில் வைத்துப் பிடிபட்டதால், அவர் தண்டிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் உண்டு.

வித்தியாவின் வழக்கு பொதுவெளிக்கு வந்து, மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை உண்டாக்கியதால் தான் இந்தளவு தூரத்துக்கு நீதிக்கான நடவடிக்கைகள் நிகழ்ந்தேறின. பெரும்பாலும் குடும்பமானம், பெண் குழந்தைகளின் எதிர்காலம், பணபலம் என்பவற்றால் இதுபோன்ற பாலியல் வதைகள் பலவும் வெளியே வராமல் அமுங்கிப் போய்விட்டன.

மல்லிகைத்தீவில் அவ்வாறு அமுங்கிப் போய்விடாமல் , அந்த மூன்று குழந்தைகளுக்கும் நேர்ந்த அநீதி பொதுவெளியின் முன்னால் கொண்டுவரப்பட்டுள்ளது. அந்தக் கொடுமையைச் செய்தவர்கள் யாரென்று தான் பார்க்கவேண்டுமே தவிர, அதைச் செய்தது முஸ்லிமா, சிங்களவனா, தமிழனா என்று பார்க்கும் நேரமல்ல இது.

எவராயிருந்தாலும் நீதி ஒன்றே. அந்த நீதியை, பாதிக்கப்பட்ட மூன்று குழந்தைகளுக்கும் பெற்றுக் கொடுக்க எமது குரல்கள் இன்னும் பலம் பெறவேண்டும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# பாலையும் பாலையும்

**கிஷோகர் ஸ்ரெனிஸ்லஸ்**

வன்னிக் காடுகளின் அடர்த்தி பற்றியும், உயிர்ப்பல்வகைமையில் அதன் பங்களிப்பு பற்றியும் அறிந்திருப்போம். அறிந்திராவிட்டால் இப்போது சொல்கிறேன் வன்னிக்காடுகள் முக்கியமானவை.

பாலைப்பழம் இப்போது பெரும் வியாபாரப் பண்மாடகியிருக்கிறது. எம் சுதேச பழங்களை நுகர்வது பற்றியும் , அதை எங்கள் சனங்களே விற்று பிழைப்புத் தேடுவது பற்றியும் எனக்கு கிஞ்சித்தும் அபிப்பிராய பேதமில்லை. ஆனால் இதற்காக பாலை மரங்கள் படும் பாடுதான் பிரச்சினை.

பாலைப்பழம் ஆய்வதற்காக செல்லுவோர் - வியாபார நோக்கத்திலும் அல்லது சொந்த தேவைக்கும் - பழம் ஆயும் பஞ்சியில் கிளைகளை வெட்டி கீழே போட்டு ஆய்கின்றனர். முன்பெல்லாம் கொக்கைகளைக் கொண்டு போய் முன்பக்கமாகப் பழம் காய்த்திருக்கும் சிறு கொப்புக்களாக வெட்டிப் போட்ட காலம் போய் இப்போது மரத்தில் ஏறி ஒரு பெரும் கிளையை வெட்டித் தூக்கிப் போட்டு வேலை முடிந்தது என்று வந்துவிடுகிறார்கள். கேட்டால் " முன்பு போல பதிவில் பழம் ஆய முடிவதில்லை. அதனால் கிளைகளாக வெட்டவேண்டியிருக்கிறது" என்கிறார்கள்.

எப்படிப் பதிவில் ஆய முடியும்? தாழ்வாக மரம் இருந்தபோதே ஒவ்வொன்றாக ஆயும் சோம்பேறித்தனத்தில் கொப்பாக வெட்டி வீட்டில் கொண்டு வந்து ஆயும் பழக்கத்தை வைத்திருந்ததால் தாழ்வான கொப்புகள் இல்லாது மரம் மேலே ஏறியது. இப்போது மேலே ஏறி கிளைகளை வெட்டித் தூக்கிப் போட்டுக்கொண்டிருக்கிறோம்.

நீங்கள் வெட்டிய இடத்தில் ஒரு இணுக்கு திரும்ப வளர்ந்து தண்டாக முற்றுவதற்குள் அடுத்த வருடம் பாலைப்பழ சீசன் வந்துவிடும். நீங்கள் இன்னொரு கிளையை வெட்டிச் சாய்ப்பீர்கள். ஐந்தோ எட்டோ வருடத்தில் பட்டுப்போன ஒரு பாலையை விறகுக்காகக் கொத்திகொண்டிருப்பீர்கள். இப்படி ஆயிரக்கணக்கான பட்டுப்போன பாலைகள் வருடாவருடம் விறகுக்காக கொத்தப்படப் போகின்றன.

யுத்தம் நடந்தகொண்டிருந்த போது காட்டுக்குள் போகப் பயம். பாலைகள் பத்திரமாக இருந்தன. இப்போது அவைகள் பாவம். யுத்தம் ஏன் முடிந்தது என்று கவலைப்படும் முதல் ஜீவன்கள் பாலை மரங்களாகத்தான் இருக்கும். சட்டவிரோதமாக மரம் வெட்டும் ஒருவர் அழிப்பதை விட பிழையான உணர்வு நுகர்வுகளால் மரங்களும் காடுகளும் கணிசமாக அழிந்துபோகின்றன.


இதைப் படித்துவிட்டு சிரிப்பீர்கள்.

"இந்த விசரனுக்கு இப்ப என்னவாம்? பாலைப்பழம் புடுங்கிறது அவளவு பெரிய பிரச்சினையா? அவனவன் தமிழ் தேசியம் கிடைக்குமா ? சுயநிர்ணயம் கிடைக்குமா? எண்டு அல்லாடுறான். இவன் இருந்து பாலை மரம், காடு எண்டு விசர்க் கதை கதைச்சுக்கொண்டு இருக்கிறானே" என்று யோசிப்பீர்கள்.

முயற்சி செய்தால் எங்களால் எதை அடைய முடியுமோ நான் அதைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். இன்னும் பத்தோ பதினைந்தோ வருடங்களில் காடுகளை கணிசமாக தொலைத்துவிடுவோமே என்று தொற்றிக்கொண்ட பயத்தில் பேசிக்கொண்டிருக்கிறேன். யாரேனும் தகுந்த நடவடிக்கைகளோ , முறையான கட்டுப்பாடுகளோ விதிக்கமாட்டார்களா என்று ஆதங்கப்படுகிறேன்.

எங்கள் சனங்களுக்கு கணுக்காலில் தண்ணி நிற்கும் போதே கவனித்து எதிர்வினையாற்றிப் பழக்கம் இல்லை. அது வெள்ளமாக வந்து மூக்கை நிரப்பும்போது தான் குய்யோ முறையோ என்று கதறி அரசாங்கத்தையும் அலுவலர்களையும் திட்டப் பழகிக்கொண்டிருக்கிறோம்.

பாலைப்பழங்கள் இல்லாமல் வாழ்ந்துவிடலாம். ஆனால் மரங்கள் இல்லாமல்....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்காவில்: பயிர்களை மேயும் வேலிகள்

■ சிக்மலிங்கம் ரெஜினோல்ட்

"கொக்காவிலில் அப்படியொரு புயல் வீசும் என்று நாங்கள் யாருக்குத்தெரியும். ஏற்கனவே மிக மோசமான நிலையில் சுற்றிவளைக்கப்பட்டிருக்கிறோம் என்று தெரிந்திருந்தாலும் அது ஒரு மீள முடியாத மரணக்குழியாக மாறி விடும் என்று நாங்கள் நம்பவேயில்லை. காட்டின் நடுவேயிருக்கும் ஒரு தொலைத் தொடர்புக் கோபுரத்தைக் காப்பாற்றுவதற்காக 80 பேர் ஆயுதங்களோடு நிறுத்தப்பட்டிருக்கிறோம். அதற்காக ஒரு இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் எங்களுக்கு இப்போது பாதுகாப்பில்லாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சுற்றிவரக் காடு. காடு முழுவதும் புலிகள் போலவே தெரிகிறது. அப்படியென்றால் நாங்கள் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறோமா? ஆம். அதுதான் உண்மை. புலிகளிடமிருந்து தப்புவதற்கு வழி கிடைக்குமென்று தெரியவில்லை...."

இப்படியொரு குறிப்பு சிங்களத்தில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டெடுத்தான் அருள். இது நடந்தது 1990 இல். அப்போது கொக்காவிலில் இருந்த படைமுகாமைப் புலிகள் தாக்கியழித்திருந்தனர். 1990 இல் பிரேமதாசவுக்கும் புலிகளுக்குமிடையில் நடந்துகொண்டிருந்த தேன்நிலவு முடிவுக்கு வந்த பிறகு யாழ்ப்பாணக் கோட்டை, மாங்குளத்திலிருந்த படைமுகாம், கொக்காவில் படைமுகாம் என அடுத்தடுத்துப் படைமுகாம்கள் புலிகளின் கைகளில் வீழ்ந்தன. வீழ்ச்சியடைந்த படைமுகாம்களைப் புலிகள் கைப்பற்றினார்கள். போரிலே தோற்றவரின் உடைமைகளும் கைப்பற்றும் பொருள்களும் வென்றவர்களுக்குப் பரிசு. அதில் ஒன்று இந்தக் குறிப்பு எழுதப்பட்ட Note Book. இதை ஒரு படையினன்தான் எழுதியிருக்கிறார். இன்னும் பல விசயங்கள் அந்த Note Book இல் எழுதப்பட்டிருந்தன.

அருளுக்குச் சிங்களமும் வாசித்துப் புரிந்து கொள்ளத் தெரியும் என்பதால், இதை வாசித்து மற்றவர்களுக்குச் சொன்னான். அந்த Note Book ஐ புலிகள் பிறகு மொழிபெயர்த்தனர். இப்படிப் போரிலே கைப்பற்றப்படும் பல டயறிகளையும் Note Book களையும் கடிதங்களையும் புலிகள் மொழிபெயர்த்ததுண்டு. அவற்றில் கிடைக்கும் தகவல்களும் இரகசியங்களும் கோடி பொன்னிலும் மேலானவை. வைரத்துக்கு நிகர்.

கொக்காவில் படைமுகாம் தாக்குதலுக்குத் தலைமை தாங்கியது பால்ராஜ். அப்போது பால்ராஜ் இளநிலைத்தளபதி. கொக்காவில், மாங்குளம் படைமுகாம்களை வெற்றி கொண்டதே பால்ராஜூக்குப் பெரும் பேரைக் கொடுத்தது. அதற்குப் பிறகு பால்ராஜ் நினைத்ததை முடிப்பவன் ஆனார்.

கொக்காவில் படைமுகாமைப்பற்றி, அந்தத் தாக்குதலின் அனுபவங்களை வைத்து கப்டன் மலரவன் 'போர் உலா" என்ற நாவலை எழுதினார். தமிழில் வெளியான போர் குறித்த நாவல்களில் அது முக்கியமான ஒன்று. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அந்த நாவல் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு வெளியானது.

கொக்காவிலில் 1990 இற்குப் பிறகு படையினர் இருக்கவில்லை. அங்கே இருந்த தொலைத்தொடர்புக் கோபுரத்துக்கும் அவசியமில்லாமல் போய் விட்டது. அது இலங்கை அரச தொலைக்காட்சி அலைவரிசையைப் பரப்புவதற்கான கோபுரம். பின்னாளில் இலங்கை அரசாங்கத்தின் ஊடகங்களைத் தமிழ் மக்கள் நம்புவதில்லை. 'லங்கா புவத்' அந்த நம்பிக்கையைக் கெடுத்ததில் முதல் பாத்திரத்தை வகித்தது. ஆகவே கொக்காவிலில் இருந்த கோபுரத்தை இழந்ததையிட்டு பெரும்பாலான தமிழர்கள் கவலைப்படவில்லை. ஆனால், அது ஒரு ஊடகத்துறை மீதான அச்சுறுத்தல் என்பது மறுக்க முடியாத உண்மை. அதைச் சமன் செய்வதற்காகவோ என்னவோ தெரியாது, பிறகு புலிகள் அங்கே தங்களுடைய தொலைத் தொடர்புக் கோபுரத்தை நிர்மாணித்தனர். இது நடந்தது 1996 இல். 'புலிகளின் குரல்' வானொலி இந்தக் கோபுரத்தின் வழியாகவே அஞ்சல் செய்யப்பட்டது.

இப்போது காட்சி மாற்றம். புலிகளின் கோபுரத்தை இலக்கு வைத்து சிறிலங்கா வான்படை தாக்குதல் நடத்தத் தொடங்கியது. அநேகமாகத் தினமும் தவறாமல் குண்டு வீச்சுகள் நடத்தப்பட்டன. இருந்தாலும் புலிகளின் கோபுரத்தைத் தகர்க்க முடியவில்லை. அந்த ஒலிபரப்புச் சேவையையும் நிறுத்தவியலாமல் போய்விட்டது. இதேவேளை, இங்கே நடந்த ஒரு சங்கதியைக் குறிப்பிடவேணும். ஒருநாள் காலைச் செய்தியை இந்தக் கோபுரத்தின் கீழிருந்த ஒலிபரப்புக் கூடத்திலிருந்து வாசித்தளித்துக் கொண்டிருந்தார் அறிவிப்பாளர். அது நேரடி ஒலிபரப்பு. ஆச்சரியமென்னவென்றால், அவர் செய்தியை வாசித்தளித்துக் கொண்டிருக்கும் ஒலிவாங்கியில் ஏறிப்படமெடுத்தது நாகபாம்பு. அது காட்டுப்பகுதி என்பதால் பாம்பு இலகுவாக அங்கே நுழைந்து விட்டது. செய்தியை வாசித்தளித்துக் கொண்டிருந்த அறிவிப்பாளருக்கு அதிர்ச்சி. அந்தக் கணத்தில் "ஐயோ பாம்பு" என்று துள்ளிக் குதித்து ஓடி விடமுடியுமா? அவர் ஒரு கணம் தடுமாறிவிட்டார். ஆனாலும் சுதாகரித்துக் கொண்டு அருகிலிருந்த ஒலிச் சீராக்குநரைப் பார்த்தார். அவர் நிலைமையைப் புரிந்து கொண்டு, "நீங்கள் தொடர்ந்து பயப்படாமல் செய்தியை வாசியுங்கள். இதற்கு மேல் பாம்பு அசைந்து உங்களை நோக்கி வருமாக இருந்தால் அதை நான் பார்த்துக் கொள்கிறேன்" எனத் தன்னுடைய கையில் இருந்த துப்பாக்கியைக் காண்பித்துச் சமிக்ஞை காட்டினார். செய்தி தடைப்படாமல் வாசிக்கப்பட்டது. எல்லாம் முடியப் பாம்பும் சுட்டுக் கொல்லப்பட்டது.

கிளிநொச்சியை 'சத்ஜெய' நடவடிக்கை மூலமாகப் படையினர் கைப்பற்றித் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும் கொக்காவிலில்தான் புலிகளின் ஒலிபரப்பு நடந்தது சிலகாலம். 'ஜெயசிக்குறு' நடவடிக்கையால் அது ஒட்டுசுட்டான் வெள்ளைமடுவுக்கு இடம்பெயர்ந்தது. 'ஓயாத அலைகள்' நடவடிக்கை மூலமாக 'ஜெயசிக்குறுப்' படைகளையும் விரட்டி, கிளிநொச்சியையும் மீட்டதற்குப் பிறகு, மீண்டும் கொக்காவிலில் புலிகளின் தொலைத்தொடர்புக் கோபுரம் உயர்ந்தது. விடாக்கண்டனும் கொடாக்கண்டனும் என்ற மாதிரி மறுபடியும் விமானத்தாக்குதல்கள். என்றாலும் இறுதிவரை அங்கேயே புலிகளின் ஒலிபரப்பு நடந்தது.

இறுதி யுத்தத்துக்குப் பிறகு இன்னொரு காட்சி மாற்றம். இப்போது கொக்காவிலில் இருப்பது இலங்கை அரசாங்கத்தின் தொலைத்தொடர்புக் கோபுரம். முன்னரை விட உயர்ந்த கோபுரம். அது அமைக்கப்பட்டிருக்கும் பரப்பளவும் அதிகம். அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் அதிகமே. முன்பு அந்த இடத்தில் தொலைத் தொடர்புக் கோபுரத்தைப் பாதுகாப்பதற்கு என அங்கே இருந்து புலிகளிடம் பலியாகிய படையினரின் பெயர்கள் அடங்கிய ஒரு நினைவுக் கல்லையும் அங்கே பதித்திருக்கிறார்கள். இப்போதைய பாதுகாப்பு ஏற்பாடுகளில் இரணைமடுக்காடு முழுவதும் படையினரால் நிரப்பப்பட்டுள்ளது. ஒரு காலம் காடு முழுவதும் புலிகள் என்றிருந்த நிலை போய், இப்போது காடு நிரம்பவும் சிங்கங்கள் என்றாகியுள்ளது. காட்டின் உள்ளே மிகப் பெரிய படைமுகாம்கள். அதற்கான பெருவீதிகள், மின்னிணைப்புகள் என அது ஒரு இராணுவ நகரம். எதிர்காலத்தில் ஒரு இராணுவக்குடியிருப்பாகக் கூட மாறலாம்.

கடல் மட்டத்திலிருந்து 300 அடிக்கும் மேல் உயரமான இடம் என்பதால் கொக்காவிலில் தொலைத்தொடர்புக் கோபுரத்தை அங்கே அமைத்தன புலிகளும் அரசாங்கமும். வன்னியில் இதுதான் மிக உயரமான இடம். அருகிலே உள்ளது பதினெட்டாம் போர். அதுவும் உயர்ந்த மேட்டுப்பகுதியே. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வன்னியில் நடந்த போரின்போது அந்த இடம் மிகப்பெரிய போர்க்களமாக இருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் சொல்கின்றன. பதினெட்டாவது போர் நடந்த களம் அது என்பதால் அந்த இடத்தைப் பதினெட்டாம் போர் என்கிறார்கள் இப்போது.


கொக்காவில் புதிதாக ஒரு புகையிரத நிலையத்தையும் அமைத்திருக்கிறார்கள். இந்த நிலையம் எதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது? யார் இதிலே ஏறி, இறங்குகிறார்கள் என்று நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆசையாய், அபூர்வமாக மெயில் ரெயினில் யாராவது ஒன்றிரண்டு ஊர்வாசிகள் எப்போதாவது இருந்து விட்டு ஏறி இறங்குவார்கள். மற்றப்படி எல்லாமே படையினர்தான் போய் வருகிறார்கள். கொக்காவிலில் இந்த நிலையத்தை அமைத்ததை விட முறிகண்டியில் இதை அமைத்திருக்கலாம். அங்கே ஏராளம் குடும்பங்கள் இருக்கின்றன. அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரி, ஜெயபுரம், கிராஞ்சி, வலைப்பாடு, இரணைமாதாநகர், முழங்காவில், கரியாலை நாகபடுவான், குமுழமுனை என்றெல்லாம் ஏராளம் ஊர்ச்சனங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு முறிகண்டி நிலையம் பயன்படும். ஆனால் இதை அரசாங்கம் பொருட்படுத்த வேண்டுமே. இராணுவ வாதக் கண்களுக்குத் தெரிவதெல்லாம் வேறு காட்சிகள்தானே.

கொக்காவிலில் இருந்து மேற்கே சென்றால் புத்துவெட்டுவான், ஐயங்கன் குளம், புதுக்குளம், தேராங்கண்டல், துணுக்காய் என கிராமங்கள் வரும். இதில் துணுக்காய் ஒரு நிர்வாக மையம். இடைப்பட்ட இடங்கள் முழுவதும் காடு. இந்தக் காட்டில் வேண்டிய அளவுக்கு கிறவல் எடுக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பகுதியிலிருந்த செழிப்பான காடு அழிந்து விட்டது. எதிர்காலத்தில் இங்கே மிகப் பெரிய மண்ணரிப்பு நடப்பதற்கான சாத்தியங்களே அதிகமுண்டு. இந்தப் பகுதியில் உள்ள ஆறுகளின் நிலையும் இதுதான். அக்கராயன்குளம், முறிப்புக்குளம், ஐயங்கன்குளம் போன்றவற்றுக்குத் தண்ணீரைக் கொண்டு போய்ச் சேர்க்கும் ஆற்றுப் படுக்கையிலிருந்து மணலை அகழ்ந்தெடுத்திருக்கிறார்கள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாப் பொருளாகும் மாட்டிறைச்சி




வி.மணிகண்டன்

**சைவ** உணவுக்காரனாக நான் மாறி பல மாதங்களாகிவிட்டன. இது நானாக விரும்பிய மாற்றம். ஒருவேளை யாரேனும் யாரேனும் அந்தச் சமயத்தில் கட்டாயப்படுத்தியிருந்தால் 'மூடிட்டு போ' என்று சொல்லியிருப்பேன். ஒருவரின் உணவுப்பழக்கம் என்பது அவரது தனிமனித சுதந்திரம். அதை அவரவர்தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர 'இதை நீ உண்ணலாம். இதை நீ உண்ணக் கூடாது' என்று சொல்கிற உரிமையை அடுத்தவன் எடுத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டியதில்லை.

இன்றைக்கு மத்திய அரசாங்கம் தேசத்தின் உணவுப்பழக்கத்தில் கை வைக்கிறது. வெறும் மூன்றாண்டுகளாக ஆட்சியில் இருக்கும் ஒரு கட்சி மூவாயிரம் வருடங்களுக்கும் மேலாகத் தொடர்கிற உணவுப்பழக்கத்தை அதிரடியாக மாற்ற முயல்வது என்பது பச்சையான சர்வாதிகாரம். சில ஆண்டுகளுக்கு முன்பாக தம்மை அசைக்க ஆளே இல்லை என்ற நினைப்பில் ஆடு மாடுகளைக் கோவில்களில் பலியிடக் கூடாது என்று ஜெயலலிதா அறிவித்தார். தமிழக மக்கள் அடுத்த தேர்தலில் பொடனி அடியாக அடித்தார்கள். ஆட்சியாளர்களின் தவறான முடிவுகளால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டால் கூட மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடும். ஆனால் தமது பண்பாட்டு விழுமியங்களின் மீது கை வைத்தால் அதை எந்தச் சமூகமும் பொறுத்துக் கொள்ளாது. ஒரு சமூகம் காலங்காலமாக பின்பற்றி வரக் கூடிய ஒரு பழக்கத்தை தமது உத்தரவின் வழியாக ஓரிரவில் மாற்றிவிடலாம் என்று ஆட்சியாளர் நினைப்பார் என்றால் அதைவிடவும் முட்டாள்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. துரதிர்ஷ்டவசமாக நம்மை ஆளுகிற பா.ஜ.க. அரசாங்கம் அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறது.

இதுவொன்றும் காட்டுமிராண்டிகளின் தேசமில்லை. ஏதோ திடுதிப்பென்று உருவாகிய சமூகமும் இல்லை. ஐந்தாயிரமாண்டுகளாக மெல்ல மெல்ல உருமாறி உணவு, பண்பாடு, வாழ்க்கை முறை, கல்வி என நெகிழ்ந்து பக்குவப்பட்ட சமூகமாக மாறியிருக்கிறது. எது சரி, எது தவறு என்று முடிவெடுக்கிற திறம் இந்த தேசத்து மக்களிடம் இருக்கிறது. அவர்களிடம் தமது காவி வேட்டியைத் தூக்கிக்காட்டி 'நீங்க எல்லாம் காட்டுமிராண்டிகள்..நாங்க சொல்லுறதைச் செய்யுங்க' என்று உரக்கப் பேசினால் மக்கள் எரிச்சல் அடையத்தான் செய்வார்கள்.

'மான்கறிக்குத் தடை இருக்கே... யானைக்கறியைச் சாப்பிடுவீங்களா?' என்றெல்லாம் கிளம்பி வருகிறார்கள். ஓர் உயிரினம் எண்ணிக்கையில் குறைகிறது என்கிற போது சூழலியல் நோக்கில் அதைக் கொல்லத் தடை விதிப்பது என்பது வேறு. மாட்டுக்கு பூணூல் பூட்டி புனிதப்படுத்தி அதைக் கொல்லக் கூடாது என்பது வேறு. பா.ஜ.க. அரசாங்கம் தேர்ந்தெடுத்திருப்பது இரண்டாவதை.

மாடுகளைப் புனிதப்படுத்த விரும்பினால் அதை மக்களின் மனதளவில் உருவாக்க வேண்டியதுதானே? பா.ஜ.கவும் ஆர்.எஸ்.எஸ்ஸும் பிரச்சாரம் செய்து மக்களை மாற்றலாமே? அது சாத்தியமில்லை என்று அவர்களுக்குத் தெரியும். காலங்காலமாக பின்பற்றுகிற உணவுப் பழக்கத்தை மாற்றச் சொன்னால் தமது வாலில் வற ஓலையைக் கட்டி விரட்டியடிப்பார்கள் என்று அவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால் மக்கள் வழங்கிய அதிகாரத்தை அவர்களுக்கு எதிராகவே பிரயோகப்படுத்துகிறார்கள்.

மூக்கணாங்கயிறு கட்டக் கூடாது, மாடுகளை வெறும் தரையில் படுக்க வைக்கக் கூடாது என்றெல்லாம் உத்தரவிட்டிருக்கிறார்கள். எப்படி சாத்தியம் என்று புரியவில்லை. அப்படியே சாணம் போடுவதற்காக மாடுகளுக்குத் தனித்தனி கழிவறைகளைக் கட்டித் தர வேண்டும். காளையும் பசுவும் இணை சேர்வதற்காக தனிப் படுக்கையறை கட்டித் தர வேண்டும் என்ற இன்னபிற உத்தரவுகளைப் பிறப்பித்துவிடுவார்களோ என்று பயமாக இருக்கிறது.

'மாட்டுக்கறி தின்னக் கூடாது' என்று நேரடியாகச் சொல்லவில்லையே என்று மத்திய அரசாங்கத்தின் வக்கீல்கள் வருவார்கள். நேரடியாகச் சொல்லவில்லைதான். ஆனால் இத்தகைய உத்தரவுகளின் நோக்கம் அப்படிச் சொல்வதுதான். இனி சந்தைக்கடையிலும் ஊர் காலனிகளிலும் கசாப்புக்கடை நடத்த முடியாது. மாறனும் சரசாளும் மாட்டுக்கறிக்காகக் டவுன் இறைச்சிக் கடைக்குப் போகப் போவதில்லை. அவர்களுக்கு சுலபத்தில் சிக்காத வஸ்தாக மாட்டுக்கறியை மாற்றுகிறது இந்த அரசாங்கம்.

மாட்டுப்பண்ணைகள், இறைச்சிக் கூடங்கள், விற்பனையாளர்கள் உள்ளிட்ட மாமிச வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதிலும் நோய்வாய்ப்பட்ட கால்நடைகள் உணவுக்காக வருவதைத் தடுப்பதிலும் தவறில்லை. அவற்றையெல்லாம் படிப்படியாகச் செய்ய வேண்டும். திடுதிப்பென்று மொத்தச் சமூகத்தின் உணவுப்பழக்கம் மீது மறைமுகமாகத் தடையை விதிப்பது மதவாதம் இல்லாமல் வேறு என்ன? இன்றைக்குச் சந்தைக்கடையிலும் காலனியிலும் கொல்லுகிற மாடுகளை விட இறைச்சி ஏற்றுமதியாளர்கள் கொல்கிற மாடுகளின் எண்ணிக்கை அதிகம். உலகின் மாட்டுக்கறிக்கான தேவையில் கிட்டத்தட்ட இருபது சதவீதத்தை நம் நாடுதான் ஏற்றுமதி செய்கிறது. மாடுகளைக் கொன்று வெட்டி பதப்படுத்தி பெட்டியில் நிரப்பி அனுப்பி வைக்கிறார்கள். அதைத் தடுத்தால் தேசத்தின் வருமானம் போய்விடும் என்று விட்டுவிட்டு சாமானியனின் உணவுப்பழக்கத்தில் கை வைப்பது என்ன நியாயம்?

மாடுகளைக் கறிக்காக விற்கக் கூடாது என்று சட்டம் இயற்றுவது உழவனையும் நேரடியாகப் பாதிக்கும். கிடாரிக் கன்று என்றால் உழவன் வளர்க்கிறான். காளை மாட்டுக் கன்று என்றால் வைத்துக் கொண்டு இனி என்ன செய்வான்? வயதான மாடுகளை வைத்துக் கொண்டு என்ன செய்வான்? மழையில்லாக் காலத்தில் தன்னுடைய செலவுக்கே கஷ்டப்படுகிற விவசாயிக்கு கூடுதல் சுமை இல்லையா?. 'உங்களுக்கு வேணும்ன்னா வெச்சுக்கு வீங்க..வேண்டாம்ன்னா கொல்லு வீங்களா?' என்று கேட்கலாம் தான். இப்படி எல்லாவற்றிலும் செண்டிமெண்ட் பார்ப்பதாக இருந்தால் ஆடு, கோழியிலிருந்து மீன் வரைக்கும் எதையும் சாப்பிடக்கூடாது. நிலத்துக்கு அடியில் விளையும் வெங்காயம் கிழங்குகளைத் கூடத் தின்னக் கூடாது. வருடாவருடம் கறவை வற்றும் போது சினை ஊசி மூலமாக வயிற்றில் கரு உண்டாக்கி கன்றுகளுக்குக் கூட விடாமல் பாலைக் கறந்து குடிப்பது கூட அயோக்கியத்தனம்தான். வெண்ணெய், தயிர் என்று எல்லாமே விலங்குகள் மீதாக நாம் செய்கிற சித்திரவதைகள்தான். கொம்புக்கு வர்ணப் பூசுவது தவறென்றால் மாடுகளின் பாதம் தேயாமல் இருக்கவும், கூரான பொருகள் ஏறாமல் இருக்கவும் லாடம் கட்டுவது அதைவிடத் தவறுதான். அதையும் தடை செய்வார்களா? நம் தேசத்து விவசாயியை விடவும் 'எங்களுக்குத்தான் மாடுகளின் மீது அக்கறை' என்று யாராவது கூறினால் அவர்களைப் பார்த்து எப்படி வேண்டுமானாலும் சிரிக்கலாம்.

மாட்டுக்கறிக்கு மட்டுமில்லை- அசைவத்துக்கு எதிரான மனநிலை கொண்டவன் நான். அதில் இருக்கும் சாதக பாதகங்களை சக மனிதர்களிடம் பேசலாமே தவிர 'சாப்பிடாத' என்று சொல்கிற உரிமை மனைவி பிள்ளையிடத்தும் கூட இல்லை. அதேதான் அரசாங்கத்துக்கும்.

'முன்னேற்றம், வளர்ச்சி' என்றெல்லாம் சொல்லி ஆட்சிக்கு வந்துவிட்டு மாட்டுச் சாணத்தில் வறட்டி செய்து விற்றுக் கொண்டிருக்காதீர்கள். இந்த தேசத்தில் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கின்றன. குறைந்து வரும் வேலை வாய்ப்பு, சமூகப் பொருளாதார முன்னேற்றம், சீனாவின் ஆதிக்கம், அமெரிக்க அதிபரின் மறைமுக இந்திய எதிர்ப்புணர்வு, கிராமப்புற மேம்பாடு, நீர்வள மேலாண்மை என்று வரிசையாகப் பட்டியலிட முடியும். இதையெல்லாம் விட்டுவிட்டு ரம்ஜான் மாதம் தொடங்குகிற தினத்தில் மாட்டுக்கறி மீதான கட்டுப்பாடுகளை இறுக்குவது, மனிதர்களுக்கும் மாடுகளுக்கும் மதச்சாயம் பூசுவது என்று எல்லாவற்றிலும் குதர்க்கமாகச் செயற்படுவது பன்முகக் கலாசாரம் கொண்ட இந்திய தேசியத்துக்கு எதிரானது, முரண்பாடானது.

தேன் கூட்டைக் கலைத்துக் கொண்டேயிருக்கிறீர்கள். ஆட்சியதிகாரம் என்பது ஐந்தாண்டுகள்தான். மக்களின் அதிகாரமே நிரந்தரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூண்டெழும் பெரும் தீ!

- அனேகன்

கண்ணீரேந்திகளின் பொறுமைக்கும் ஒரு எல்லையிருக்கத்தானே செய்யும். ஒன்றல்ல,இரண்டல்ல... நூறு நாட்கள். தங்கள் உறவுகளின் கதி என்னவென்று அறிய வீதிக்கு வந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு வேறு வழியில்லை.இதுதான் கடைசி ஆயுதம்,கிட்டத்தட்ட கர்ணனின் நாகாஸ்திரம் போல. இதுவும் பொய்த்துப் போனால் அவர்களின் இத்தனை நாள் காத்திருப்புக் கனவும் பொய்த்துப் போய்விடும்.

அறுந்து தொங்கும் நம்பிக்கை இழைகளை ஒருவாறு இழுத்துப் பிடித்துத் தொடுத்தபடி ஊசலாடிக் கொண்டிருக்கும் கனவுகளைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கனவுகள் தான் உறவுகளின் பிரிவை, அவர்களைக் காணாமல் இருப்பதன் தகிப்பை கொஞ்சமேனும் தணிக்கச் செய்திருந்தன. வெறுமனே கனவுகளுக்கான காவலோடு இருப்பதால் மட்டும் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. எனவே அடிக்கடி அவர்கள் கைகளில் புகைப்படங்களோடு, கண்ணீரின் துணையோடு வீதிகளில் இறங்குவார்கள். அழுவார்கள். குளறுவார்கள். " எங்கட பிள்ளையளைத் தாங்கோ" என்று கத்துவார்கள். வானமே கசிந்துருக அவர்கள் கதறினாலும், கேட்போர் யாவருமில்லை இருப்பவர்களும் இந்தக் கதறல்களைக் காதில் போட்டுக் கொள்வதில்லை.கண்ணீரையும் கதறலையும் காலில் மிதித்தபடி நகர்ந்துவிடுவார்கள்.

மீண்டும் ஏதும் நல்ல செய்தி வருமென்று கனவுகளை அடைகாப்பார்கள். போராடினால் தான் கனவுக்குஞ்சு பொரிக்கும் என்ற நிலை வர மீண்டும் வீதி. கதறல். கண்ணீர். புகைப்படம்.உறுதிமொழிகள். கண்டுகொள்ளாக் கனவான்கள். கனவுகளை மீண்டும் அடைகாத்தல்.

இப்படியான ஒரு வட்டத்துக்குள்ளேயே அவர்களின் வாழ்வியல் குறுகிப் போனது. இந்தமுறை வழமையைப் போலல்லாது "ஒரு முடிவு அறியும் வரை போராடியே தீருவது" என உறுதியெடுத்துக் கொண்டார்கள். சிறுபொறியாய் கிளிநொச்சியில் கூடாரத்துக்குள் கூடினார்கள். தீர்வின்றி இங்கிருந்து நகரோம் என்று அங்கேயே குடியிருக்கத் தொடங்கினார்கள்.

ஒவ்வொரு நாள்களையும் குறித்துக் கொண்டே மௌனமாய்ப் போராடினார்கள். யாரும் கத்திக் குளறவில்லை. வாகனங்களைத் தடுக்கவில்லை. வாகனங்களின் கண்ணாடிகளுக்கு கல்லெறியவில்லை. ரயர் எரிக்கவில்லை. கடையைப் பூட்டச் சொல்லி வற்புறுத்தவில்லை.அவ்வளவு ஏன், அவர்கள் அந்தக் கூடாரத்தில் இருந்ததை வீதியால் செல்வோர் கூட உற்றுப் பார்த்தால்தான் தெரியும். அமைதியாக நடந்தது போராட்டம். ஆனால் அமைதிக்கு யார் மதிப்புக் கொடுக்கிறார்கள்?

100 நாள்வரை பொறுத்துப் பார்த்தார்கள். எந்தச் சலனமும் அரசிடம் இல்லை. " காணாமல் போனோர் பிரச்சினைக்கு எப்படி நாங்கள் தீர்வு தரமுடியும்? வேண்டுமானால் எங்கு உங்கள் உறவுகள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லுங்கள். அங்கு தேடிப்பார்க்கிறோம்" என்ற பதிலை மட்டுமே அலட்சியமாக வீசியெறிந்தது அதிகாரம்.

உண்மையில் அரசு நினைத்திருந்தால் காணாமல் போனோர் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்க முடியும். களத்தில் நின்ற இராணுவ வீரர்களின் விபரம் அரசிடம் உண்டு. அதனை வைத்து யார் இந்தக் காணாமல் போதலின் பின்னணியில் இருந்தார்கள் என்பதைக் கண்டறிந்து, அவர்களிடம் விசாரித்தாலே போதும். காணாமல் போனவர்களின் கதி என்னவென்று தெரிந்துவிடும். இப்படி மிகச் சுலபமான வழியை பொதுமக்களே சொல்லியும் கூட அரசு அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

இப்படியான நிலையில் தான் தமது போராட்டத்தின் நூறாவது நாளில் சாதுவாய் இருந்தவர்கள் மிரண்டெழுந்தார்கள். அந்த நூறு நாள்களும் அடக்கி வைத்திருந்த கண்ணீரையும், ஆத்திரத்தையும் காட்டினார்கள். ஏ-9 வீதியின் நடுவாக உட்கார்ந்துவிட்டார்கள்.

வவுனியாப் பக்கத்திலிருந்து வந்த வாகனங்களும், யாழ்ப்பாணப் பக்கத்தில் இருந்து வந்த வாகனங்களும் ஸ்தம்பித்துப் போய் நின்றன. குறுக்கறுத்து மனிதச் சங்கிலியாக மக்கள் அந்த வீதியைத் துண்டித்திருந்தார்கள். நேரம் செல்லச் செல்ல காத்திருக்கும் வாகனங்களின் வரிசை நீண்டுகொண்டு சென்றது.

ஏற்கனவே மக்களின் இந்தப் போராட்டத்துக்கு தடை வாங்கி, அதை நடத்தவிடாமல் செய்வதற்குப் பொலிஸார் முயன்றனர். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைப் போல, இதற்கும் நீதிமன்றம் தடைவிதிக்கும் எனப் பொலிஸார் நினைத்தனர். ஆனால் நீதிமன்றம் நியாயமாக நடந்து கொண்டது. 'ஜனநாயக ரீதியில் போராடும் மக்களின் உரிமையை மதிப்பதாகவும், எவருக்கும் இடையூறு செய்யாமல் போராட்டத்தை நடத்தலாம் எனவும்' நீதிமன்றம் சொன்னதால், வேறுவழியின்றி தலையைத் தொங்கப்போட்டபடி நீதிமன்ற உத்தரவை போராட்டக்காரர்கள் தங்கியிருந்த கூடாரத்தில் ஒட்டியிருந்தார்கள் பொலிஸ்காரர்கள்.

மக்கள் வீதியை இப்படி மறிப்பது நீதிமன்ற உத்தரவை மீறும் செயல் என பொலிஸார் வரிந்து கட்டிக் கொண்டு வந்தபோதும், மக்களின் போராட்ட அனலின் தகிப்பில் எதையும் செய்யமுடியாமல் கையைப் பிசைந்து கொண்டார்கள். கடைசியில் பதில் நீதவான், அரச அதிபர், ஆளுநர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வந்தனர். "பிரதமரிடம் உங்கள் பிரச்சினைகளைச் சொல்ல நேரம் வாங்கித் தருகிறோம்" என்று பழக்கமான தூண்டிலைப் போட்டு போராட்டத்தை முடிக்க எண்ணினார்கள்.

ஆனால் மக்கள் அசரவில்லை. " எங்கள் உறவுகள் எல்லோரும் செத்துவிட்டார்கள் என்று சொன்ன பிரதமரோடு என்ன பேச்சு எங்களுக்கு?" என்று போராட்டக் குரலை இன்னும் உயர்த்தினார்கள். அடுத்த தூண்டில்." ஜனாதிபதியுடன் பேச நேரம் வாங்கித் தருகிறோம்"

"இந்த வார்த்தைகளை நம்பி மக்கள் கலைந்து சென்றுவிடுவார்கள், பின்னர் அந்த வார்த்தைகள் காற்றோடு போய்விடும், மக்களும் மறந்துவிடுவார்கள்" என ஆளுநர் எண்ணியிருக்க வேண்டும். ஆனால் அதற்கும் மக்கள் மசியவில்லை.

"இதையெல்லாம் நம்பத் தயாராகவில்லை. வேண்டுமானால் எழுத்தில் தாருங்கள்" என்று மக்கள் பதிலுக்கு பேரம் பேசினார்கள். இதை ஆளுநர் எதிர்பார்க்கவில்லை. திருடனுக்கு தேள் கொட்டிவிட்டது. வெளிக்காட்டினால் அவ்வளவுதான். எல்லாமே பாழாகிவிடும். எனவே வேறுவழியின்றி, உடனடியாக ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்பு கொண்டு, கெஞ்சிக் கூத்தாடி, ஒரு நேரம் வாங்கி, அதை எழுத்தில் கொடுத்தார். அதன் பின்னரே பாதை திறந்தது. இப்போதைக்கு மக்களின் போராட்டக் கனல் கொஞ்சம் அடங்கியிருக்கிறது, ஜனாதிபதியைச் சந்தித்த பின்னே தான் அது மீண்டும் மூளுமா, அல்லது தணியுமா என்று தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
தியாகம்.
தனித்த நிலை.
தருமசிந்தனை

**ரிஷபம்**
வேலைப்பளு.
மனிதநேயம்.
தேகசுகம்.

**மிதுனம்**
பூர்வபுண்ணி
யம். தேகமெலிவு.
சிந்தனை

**கடகம்**
கல்விவிருத்தி.
தாகம்.
சந்தோஷம்.

**சிம்மம்**
தனித்த நிலை.
மனைச்சுகம்.
வெற்றி.

**கன்னி**
தியாக சிந்தனை.
பிணக்கு.
தனித்தநிலை.

**துலாம்**
சம சுகம்.
தாழ்ந்த நிலை.
தெளிவு. பலம்.

**விருச்சிகம்**
மனச்சுமை.
மக்களால் கவலை.
தெளிவு.

**தனுசு**
தெளிந்த நிலை.
வைராக்கியம்.
மிகு சுகம்

**மகரம்**
பெருமை.
தேக ஆரோக்கியம்.
வெகுமதி

**கும்பம்**
இல்லாள் பெருமை.
இனச்சேர்க்கை.
கடன்.

**மீனம்**
ஆலய தரிசனம்.
புதிய உறவு.
பெருமை.

# புதுவிதியின் அஞ்சலிகள்



யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி கடந்த 28.05.2017 அன்று காலமானார்.

இவர் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் முன்னர் செயற்பட்டவர். உள்நாட்டுப் போர் தீவிரமாக இடம்பெற்ற காலப்பகுதியில் துணிச்சல் மிக்க செயற்பாட்டால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த பலருக்காக வழக்குகளில் முன்னிலையாகி விடுதலை பெற்றுக் கொடுத்தவர்.

எளிமையான அரசியல் ஆளுமைக்கு புதுவிதியின் அஞ்சலிகள்.







மட்டக்களப்பில் கடந்த 21.05.2017 ஞாயிறு மாலை நடைபெற்ற "மகுடம் பேராசிரியர் சி.மௌனகுரு" இரட்டைச் சிறப்பிதழ் வெளியீடு இடம்பெற்றது. நிகழ்வில் மௌனகுருவின் நெறிப்படுத்தலில் ஆற்றுகையும் இடம்பெற்றது.





மண்டூர் கலை, இலக்கிய அவையின் ஏற்பாட்டில், மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ண கலாசார மண்டபத்தில் கடந்த 28.05.2017 நடைபெற்ற கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையின் "பலதுறை அறிவுசார் கட்டுரைகள் (கணித, விஞ்ஞான, கல்வியற் கட்டுரைகள்)" என்னும் நூல் வெளியிடப்பட்டது.







கடந்த வாரம் நெல்லண்டை பத்திரகாளியம்மன் கோவிலில் (பருத்தித்துறை) இடம்பெற்ற திருவிழாவில், பல்வேறு கிராமியச் சடங்குகள் பழமை மாறாமல் இடம்பெற்றன. அவற்றின் சில காட்சிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய் குட்டீஸ்...!



உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## வானில் பறந்த பல்லி

முன்னொரு காலத்தில், 'ஸ்கைனோசர்ஸ்' என்ற பல்லி இனம் பூமியில் வாழ்ந்து வந்தது. ஸ்கைனோசர்ஸ் பல்லிகள் உருவத்தில் மிகவும் சிறியவை. ஓர் அங்குலம் மட்டுமே நீளமாக இருந்தன. சிறு சிறு பூச்சிகளையும் உண்ணிகளையும் உணவாக உண்டன. ஒருநாள் ஒரு காட்டில் ஸ்கைனோசரஸ் இனத்தைச் சேர்ந்த ஒரு பல்லி தனியாகச் சுற்றிக்கொண்டிருந்தது. அதன் பெயர் லிச்சா. அது, ஒரு குறும்புக்காரப் பல்லி. அது மரங்களையும் மணல் பகுதியையும் சுற்றி இரை தேடிக்கொண்டிருந்தது. ஆனால், எங்கும் சிறு பூச்சிகூடக் கண்களுக்குத் தட்டுப்படவில்லை. தட்டான்களும் பட்டாம்பூச்சிகளும் செடிகொடிகளைச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன. மாலையில் சூரியன் மறைகிற நேரமாகியும் லிச்சா எதையும் சாப்பிடவில்லை. பசி வயிற்றைக் கிள்ளியது. பசி மயக்கத்தில் களைத்துப்போன பல்லி, ஒரு மரத்தின் அடியில் தலை சாய்த்துப் படுத்தது.

திடீரென்று கண் விழித்துப் பார்த்தபோது காடெங்கும் இருள். லிச்சா, சட்டெனத் தலையை உயர்த்திப் பார்த்தது. ஆயிரக்கணக்கான வெண்ணிறப் பூச்சிகள் வானத்தில் விளையாடிக்கொண்டிருந்தன. ஒன்றிரண்டு ஆகாயப்பூச்சிகள் தரையில் விழுந்தால் நன்றாக இருக்குமே என ஏக்கத்தோடு காத்திருந்தது பல்லி. சில மணி நேரங்கள் கடந்தன. இனி, ஆகாயப் பூச்சிகளுக்காகக் காத்திருப்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தது பல்லி. அடுத்த சில நொடிகளில், அங்கு ஓர் அழகான தட்டான் வந்து சேர்ந்தது. லிச்சா பல்லிக்கு அருகில் இறங்கிவந்த தட்டானைப் பார்த்து ஓர் உதவி கேட்டது.

"தட்டானே! வானத்தில் தெரியும் பூச்சிகளை நீ எனக்குப் பிடித்துத் தருகிறாயா? நான், அவற்றைச் சாப்பிட்டுப் பசியாறுவேன்" என்று ஆசையோடு கேட்டது.

"பல்லியே, உன்னிடம் இறகுகள் இருந்தால், நீயே வானத்துக்குப் பறந்து செல்லலாம் அல்லவா? சரி, கவலை வேண்டாம்" என்று பதிலளித்த தட்டான் மேலும் சொன்னது. "என்னிடம் நான்கு இறக்கைகள் உள்ளன. அதில் இரண்டு இறகுகளை உனக்கு இரவலாகத் தருகிறேன். இறகுகளை உன் முதுகோடு ஒட்டவைத்துக்கொள். நீ நினைத்த இடத்துக்கெல்லாம் பறக்கலாம்" என்ற தட்டான், இரண்டு இறகுகளை உடனடியாகக் கழற்றித் தந்தது.

தட்டான் செய்த உதவியை எண்ணி லிச்சா மகிழ்ந்தது. அதே நேரத்தில் இருவருக்கும் மத்தியில் நடந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு பட்டாம் பூச்சி அருகில் வந்தது. அழகான அந்தப் பட்டாம்பூச்சியும் பல்லிக்கு உதவியது. "லிச்சா! வானத்தை நெருங்க நெருங்க குளிர் அதிகமாகும். மேகக் கூட்டங்களைக் கடந்து செல்வதற்குள், குளிரைத் தாங்க முடியாது" என்று அறிவுரை சொன்ன பட்டாம்பூச்சியின் பேச்சைக்கேட்டுக் கொஞ்சம் பயந்தது பல்லி.

"ஐயோ! நான் எப்படி வானத்துக்குப் போவேன்? சரியான வழி தெரிந்தால் சொல்லேன்" என்று பட்டாம்பூச்சியிடம் கேட்டது பல்லி. "கவலைப்படாதே. நான், சற்று நேரத்துக்கு முன்புவரை லார்வா கூட்டில் தங்கியிருந்தேன். கூட்டில் இருந்தபடி வளர்ச்சி அடைந்து, பட்டாம்பூச்சியாக வெளியே வந்தேன். அந்தக் கூடு, என்னிடம் பத்திரமாக உள்ளது. நான் அதை உனக்குத் தருகிறேன். நீ அந்தக் கூட்டைப் பிரித்து, உடலைச் சுற்றிக் கவசமாக அணிந்து கொள். அந்தக் கூடு உறுதியானதால், கடுமையான குளிரைக்கூடத் தாங்கும்" என்ற பட்டாம்பூச்சி, தன்னிடமிருந்த கூட்டைப் பல்லிக்கு கொடுத்தது.

பல்லி, பட்டாம்பூச்சிக்கு நன்றி சொன்னது. பறப்பதற்கு இறக்கையும் குளிர் தாங்கும் அங்கியும் கிடைத்து விட்டன. பல்லி, மிகுந்த மகிழ்ச்சி



அடைந்தது. இனி பறக்கலாம் என்று தயாரான நேரத்தில், ஒரு கரும்புள்ளி வண்டு அங்கு வந்து சேர்ந்தது. கரும்புள்ளி வண்டின் முதுகு, சிவப்பு நிறத்தில் இருந்தது. பாதி முந்திரிக்கொட்டையை முதுகில் கவிழ்த்தியது போல ஒரு ஓடு வைத்திருந்தது. சிவப்பு நிற ஓட்டுக்கு மேலே நிறைய கறுப்பு நிறப் புள்ளிகள் தெரிந்தன. பல்லியைப் பார்த்துப் பரிதாபப்பட்ட வண்டு பரிவோடு சொன்னது.

"வானத்தில் பறப்பது அவ்வளவு எளிதான காரியமில்லை. வானத்தில் பறப்பதென்றால், நீ தலைக்கவசம் அணிய வேண்டியது அவசியம். தலைக்கவசம் அணியாவிட்டால், நீல வானத்தில் முட்டி மோத நேரிடும். தலையில் காயம் உண்டாகும். என்னிடம், தேவையான ஓடுகள் உள்ளன. அதில் ஒன்றை உனக்குத் தருகிறேன். அதை நீ, தலைக்கவசமாக அணிந்து கொள். ஆகாயத்தில் எந்த விபத்தும் நேராமல் தப்பலாம்" என்றது.

"அப்படியே ஆகட்டும்" என்ற பல்லி, கரும்புள்ளி வண்டு தந்த ஹெல்மெட்டை வாங்கி அணிந்துகொண்டது. கடைசியில், லிச்சா பல்லி பறக்கத் தயாரானது. நண்பர்கள் மூவரிடமிருந்தும் விடைபெற்ற பல்லி, மேலே தாவிப் பறக்கத் தொடங்கியது. ஆனால் அந்தப் பல்லி, ஒரு பெரிய மரத்தின் உச்சியைக்கூடத் தொடவில்லை. சீக்கிரம் களைத்துப்போனது. இறகை அசைக்கப் பழக்கமில்லாத பல்லியால் வானத்தை எப்படித் தொடமுடியும்? மரக்கிளையில் சோர்ந்து உட்கார்ந்த பல்லி, காடு முழுவதும் எதிரொலிக்கும்படி கத்தியது.

"ஐயோ! யாராவது என்னைக் காப்பாற்றுங்களேன்". பெருமரத்தின் உச்சிக் கிளையில் உட்கார்ந்திருந்த பல்லியை, ஓர் ஆந்தை பார்த்துப் பரிதாபப்பட்டது. "வா! சிறிது தூரம் வரை உனக்குத் துணையாக வருகிறேன். அதற்குள், நீ நன்றாகப் பறப்பதற்கான பயிற்சி பெற்று விடுவாய். பிறகு, நீ வானத்தை நோக்கிப் பறந்து செல். நானோ, பொந்துக்குத் திரும்பிவிடுவேன்" என்ற ஆந்தை தொடர்ந்து சொன்னது "வானத்தைச் சென்றடைந்த மகிழ்ச்சியில் பூச்சிகளைத் தின்று பசியாறியவுடன் அமைதியாக இருந்துவிடாதே. அதில் சில பூச்சிகளை எனக்காகக் கீழே தள்ளிவிடு. நானும் எனது குடும்பமும், ஆகாயப் பூச்சிகளைச் சாப்பிட்டுப் பசியாற உதவி செய்" என்றது.

"சரி, அப்படியே ஆகட்டும்." என்ற பல்லிக்குத் துணையாக, ஆந்தை கொஞ்சத் தூரம் பறந்துவிட்டுத் திரும்பியது. ஆகாயத்தில் இறகு அசைக்கக் கற்றுக்கொண்ட லிச்சா, ஆந்தைக்கு நன்றி சொன்னபடி வானத்தை நோக்கிப் பறந்துபோனது. ஆகாயத்தைச் சென்றடைந்த பல்லி, நட்சத்திரங்களுக்கு அப்பால் இருந்தபடி பூச்சிகளைப் பிடித்துச் சாப்பிட்டது. வயிறு நிறையப் பூச்சிகளைச் சாப்பிட்டதால், ஸ்கைனோசரஸ் பல்லியின் உடல் டைனோசர் அளவுக்குப் பெரிதானது. கடைசியில், பூமிக்குத் திரும்ப வழியில்லாமல் ஆகாயத்திலேயே தங்கிப்போனது. பாவம் ஆந்தை! ஸ்கைனோசர்ஸ் பல்லி ஆகாயப் பூச்சிகளைக் கீழே தள்ளிவிடுமென்ற ஆசையில் காத்திருக்கிறது. ஆந்தைக்குத் துணையாக அதன் குடும்ப உறுப்பினர்களும் நம்பிக்கை தளராமல் இரவு முழுவதும் கண் விழித்திருக்கின்றன.

## தகவல்கள் அறிவோம்

ஒரு பொருளை வைத்துவிட்டு அதை நினைவில் கொண்டு மீண்டும் எடுக்கப் போதும் போதுமென்றாகி விடுகிறது எமக்கு. ஆனால் ஒரு பறவை ஆயிரக்கணக்கான இடங்களில் தான் சேகரித்து வைத்த விதைகளை பாதுகாப்பதுடன் மீண்டும் எடுத்து உணவாக்கிக் கொள்கிறது என்றால் நம்புவீர்களா..? நம்பித்தான் ஆக வேண்டும் அந்தப் பறவையின் பெயர் கிளார்க் நட்கிரேக்கர்.

வட அமெரிக்காவின் மேற்கு மலைச் சரிவுகளிலும் மெக்ஸிக்கோ நாட்டின் சில பகுதிகளிலும் இப்பறவைகள் வாழ்கின்றன. உயரமான இடங்களில் கூடு கட்டி வாழும் இந்தப் பறவைகளைக் கண்டறிந்து ஆராய்ந்தவர் வில்லியம்



கிளார்க். இதனால் அவரின் பெயரையே இந்தப் பறவைக்கும் சூட்டி விட்டனர். சில நாடுகளில் இப்பறவையை கிளார்க் காகம், கிளார்க் மரங்கொத்தி என்றும் அழைக்கிறார்கள்.

ஊசியிலைக் காடுகளில் வாழும் இப்பறவை இனப்பெருக்க காலத்தில் உயரமான இடங்களுக்குச் செல்லும் இப்பறவை, ஏனைய காலங்களில் உணவுக்காக தாழ்ந்த பகுதிகளிலேயே பறக்கும். அத்துடன் உணவுக்காக ஆயிரக்கணக்கான கிலோமீற்றரைக் கடக்கும்.

சிறு பூச்சிகள், பழங்களை உணவாகக் கொண்டாலும் இப்பறவையின் பிரதான உணவு பைன் மரத்தின் விதைகள்தான். பல கிலோமீற்றர் பறக்கும் இந்தப் பறவை தனது வாயில் 50 தொடக்கம் 150 வரையான விதைகளை சேகரித்துக் கொண்டு தன்னிடத்துக்கு வந்து ஓரிடத்தில் 15 விதைகள் வீதம் சுமார் 30 ஆயிரம் இடங்களில் புதைத்து வைத்துவிடும்.

தான் வைத்த இடங்களை நினைவில் கொண்டு குளிர்காலத்தில் இந்த விதைகளை எடுத்து உணவாக உட்கொள்ளும். குளிர்காலம் முழுவதும் இதற்கு சுமார் ஒரு இலட்சம் விதைகள் தேவை. அவை அனைத்தையும் இந்த சேமிப்பில் இருந்தே கிளார்க் பறவை பெறுகிறது. பல மாதங்கள் கழித்தும் விதை இருக்கும் இடத்தை நினைவில் கொண்டு அதை உணவாக்கும் இந்தப் பறவையால்தான் பைன் மரங்கள் இன்றளவும் உள்ளன. இல்லையானால் இயற்கை சீற்றங்களும் மனிதனும் இந்த மரங்களை அழித்திருக்கும்.

## 5 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னை நீயே அறிவாய்

16

நிறைய வியாபார வாய்ப்புகளும், வியாபாரத்தில் அதிக இலாபமும் கிடைக்க வேண்டுமெனில், கடல் தாண்டி வணிகம் செய்ய வேண்டியது அவசியம் என்பதைக் கடந்த இதழில் கூறியிருந்தேன். கடல் கடந்து வாணிபம் செய்வதை நாம் இன்று, நேற்றல்ல, பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செய்துவருகிறோம். விமான சேவைகள், நாடுகளுக்கிடையே ஆரம்பிப்பதற்கு முன், கப்பல்தான் பிற நாடுகளுடனான வர்த்தகத்துக்குப் பெரும் உதவியாக இருந்தது. இன்றும் விமானத்தைக் காட்டிலும், கடல் அல்லது கப்பல் மூலமான வர்த்தகம்தான் முன்னிலையில் இருக்கிறது.

இலங்கை கடலால் சூழப்பட்டிருப்பதுதான் ஏற்றுமதி வியாபாரம் செய்பவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம். ஏற்றுமதி செய்வதற்கான அனைத்து வசதிகளும், உள்கட்டமைப்பு அம்சங்களும் சிறப்பாக உள்ளன. புதிய தொழில் வாய்ப்புகளுக்கு இங்கு பஞ்சமே இல்லை. இதனைத் தமிழர்கள் பயன்படுத்திக்கொண்டு முன்னேற வேண்டும் என்பதே என் வேண்டுகோள். இனி ஏற்றுமதித் தொழிலை எப்படித் தொடங்குவது என்று பார்ப்போம். ஏற்றுமதித் தொழில் செய்ய, உங்களிடம் அரசின் உரிமம் அவசியம் என்றும், அதை ஒரு நிறுவனத்தின் பெயரில்தான் வாங்க முடியும் என்றும் கூறியிருந்தேன்.

### பெயர் முக்கியம்

ஏற்றுமதி மட்டும்தான் செய்யப் போகிறேன் என்று நினைப்பவர்களுக்கு இந்த உரிமம் கிடைக்கும். இந்த எண்ணை வாங்குவதற்கு முன், பிற நாட்டின் இறக்குமதியாளர்களுக்கு எளிதில் புரியும் வகையில் ஒரு பெயரைத் தெரிந்து நிறுவனத்தைப் பதிவு செய்ய வேண்டும். அத்துடன் உங்கள் நிறுவனத்துக்கென்று ஈ-மெயில், விசிற்றிங் கார்ட், லெற்றர் பாட், முத்திரை இலட்சினை, டிஜிற்றல் சிக்னேட்சர் என்பவற்றை வைத்திருக்க வேண்டும். உங்கள் தொழில் பற்றி நீங்கள் மற்றவர்களுக்கு எடுத்துரைக்க இவை உதவுவதுடன், அரசின் நடைமுறைகளைச் சரியாகச் செயற்படுத்தவும் இவை தேவைப்படுகின்றன.

### நீங்களும் வெல்லலாம்

ஏற்றுமதிக்கான அனுமதி மட்டும் வாங்கிவிட்டால் மட்டும் போதாது. ஏற்றுமதியில் ஜெயிப்பதற்கான விடயங்களை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். என்னால் முடியுமா என்கிற சந்தேகம் உங்களுக்கு வேண்டும். இதற்குத் தேவை, முன் அனுபவமும் ஏற்றுமதி குறித்த அடிப்படை அறிவும்தான். இவற்றைப் பெறவேண்டுமென்றால் பின்வரும் நான்கு விடயங்களைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அவை, கற்றல் அவசியம், பயிற்சி வகுப்புகள், முதல் முயற்சி, உள்ளூரில் ஒரு வெற்றி. இந்த நான்கு விடயங்களைப் பற்றி சுருக்கமாகச் சொல்கிறேன்.

### கற்றல் அவசியம்

ஏற்றுமதித் தொழில் குறித்த அடிப் படை விடயங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். ஏற்றுமதித் தொழில் என்றால் என்ன, அதில் உள்ள சாதக, பாதகங்கள் என்ன, என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக்கூடாது, பொருளை எப்படித் தேர்ந்தெடுப்பது, நாடுகளை எப்படித் தேர்ந்தெடுப்பது, இறக்குமதியாளரை எப்படி அணுகுவது, பொருளை எப்படிப் பாதுகாப்பாக அனுப்புவது, அனுப்பிய பொருளுக்கு எப்படிப் பணத்தை வாங்குவது என்று பல விடயங்கள் குறித்தும் தெரிந்திருக்க வேண்டும்.

### பயிற்சி வகுப்புகள்

பயிற்சி வகுப்புகள் மூலமாகவும், மேலே சொன்ன அடிப்படை விடயங்களைப் பற்றி ஏற்றுமதித் துறையில் அனுபவம் பெற்றவர்கள் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். ஆனால், அனைத்து விடயங்களையும் எல்லோரும் சொல்லித் தந்துவிட மாட்டார்கள். மேலும், ஏற்றுமதி செய்பவர்கள் எல்லோருமே அனைத்து விடயங்களையும் தெரிந்து வைத்திருக்கவும் மாட்டார்கள். ஏற்றுமதி குறித்த நுணுக்கங்களைக் கற்றுக் கொடுக்க அரசு ஏற்றுமதி அமைப்புகள், பயிற்சி வகுப்புகள் எடுக்கின்றன. இந்தப் பயிற்சி வகுப்புகள் முழுக்க முழுக்க நடைமுறை சார்ந்து மிக வெளிப்படையாக, அனைத்துச் சாதக, பாதகங் களையும், தவிர்க்கவேண்டிய விடயங்களையும் சொல்லித் தருகின்றன.

### முதல் முயற்சி

ஏற்றுமதித் தொழிலைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்வதால் மட்டுமே ஒருவர் ஏற்றுமதியாளராகிவிட முடியாது. முயற்சி மிகவும் முக்கியம். தனியாக நாமே களத்தில் இறங்கி, நம்முடைய முதல் ஓடரைப் பிடிக்க வேண்டும். பிறருடைய உதவியை நாடுவதில் தவறில்லை. ஆனால், அதையே நம்பி இருக்கக் கூடாது. நம்முடைய பொருள் யாருக்குத் தேவைப்படுகிறது என்பதை பிறரின் மூலம் தெரிந்துகொள்ள முடியும். வியாபார ஓடரைப் பொறுத்தவரை, பிறரையே நாம் சார்ந்திருந்தால் அது நமக்கு தோல்வியைத்தான் தரும். நம்முடைய சொந்த முயற்சிதான் நம்முடைய வெற்றியைத் தீர்மானிக்கும்.

### உள்ளூரில் ஒரு வெற்றி

ஏற்றுமதித் தொழிலில், தரம் என்பது தவிர்க்க முடியாத ஒரு விடயம். அதற்காகத்தான் 'ஏற்றுமதித் தரம்' என்றே தனியாகப் பொருள்களின் தரம் பிரிக்கப்படுகின்றன. இதேபோல், நம்முடைய தரமான பொருளை இறக்குமதியாளரிடம் விற்கத் தெரிய வேண்டும். அதற்காக முதலில் நம்முடைய பொருளை உள்ளூரில் விற்பனை செய்து பார்க்க வேண்டும். அப்போதுதான் அங்கு அது எந்தளவுக்கு வரவேற்பு பெறுகிறது, மக்களைச் சென்றடைய என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும், நாம் விற்க நினைக்கும் பொருளின் ப்ளஸ், மைனஸ் என்ன என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்ள முடியும்.

உள்ளூரில் செய்யும் விற்பனை மூலம் நீங்கள் அடையும் வெற்றி, உங்களுக்கு ஏற்றுமதி செய்யும்போது கைகொடுக்கும். ஏற்கெனவே உள்ளூரில் வியாபாரம் செய்பவர்களுக்குப் பிரச்சினை இல்லை. புதிதாக நேரடியாக ஏற்றுமதி வியாபாரத்தில் இறங்குபவர்கள் இதைக் கட்டாயம் செய்ய வேண்டும்.

ஏற்றுமதித் தொழில் பெரும்பாலானோருக்கு அறிமுகம் ஆகியிருந்தாலும், அதில் பல குழப்பங்கள் நீடிக்கவே செய்கின்றன. பலர் ஏதாவது ஒன்றை செய்து வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஏற்றுமதித் தொழிலைத் தெரிவு செய்கிறார்கள். இப்படி நினைப்பதில் தவறில்லை. ஆனால், ஏற்றுமதித் தொழிலைப் பற்றி தெளிவான பார்வையும், அதுகுறித்த போதுமான அறிவும் இருந்தால்தான், அதில் வெல்ல முடியும். ஏற்றுமதி / இறக்குமதித் தொழில் செய்வதற்கான ஆரம்பப் புள்ளி என்பது, அனுமதியைப் பெறுவதுதான் என்றால் அது தவறு. அனுமதி அவசியம்தான். ஆனால், அதை வாங்கிவிட்டு ஏற்றுமதித் தொழிலைச் செய்வதற்கான எந்த முயற்சியையும் எடுக்காமல் ஆயிரக்கணக்கானோர் இருக்கிறார்கள். ஆகவே, அனுமதி மட்டும் வைத்திருப்ப தல்ல, ஏற்றுமதித் தொழிலுக்கான ஆரம்பப் புள்ளி. ஏற்றுமதித் தொழிலின் தொடக்கப் புள்ளி என்பது தொழிலை முடிவுசெய்வது. அதாவது, என்னென்ன பொருள்களை ஏற்றுமதி செய்யப்போகிறீர்கள் என்று முடிவு செய்வதுதான்.

அட, இவ்வளவுதானா... எனக் கேட்பதற்குச் சாதாரணமாக இருந்தாலும், ஏற்றுமதித் தொழிலின் இரகசியமே எந்தப் பொருள் என்று முடிவு செய்வதில் தான் இருக்கிறது என்பது, ஏற்றுமதிச் சந்தையைப் புரிந்துகொண்டவர்களுக்கு மட்டுமே தெரியும். ஏற்றுமதித் தொழிலைப்பற்றி தெரிந்துகொள்ள வரும் பலரும், "இறக்குமதியாளர் (Buyer) குறித்த விவரங்களைத் தருவீர்களா?" என்ற கேள்வியைத்தான் முதலில் கேட்கிறார்கள். "உங்களிடம் என்ன பொருள் இருக்கிறது என்று சொல்லுங்கள்?" என்று கேட்டால், "என்ன பொருள் கேட்டாலும் தருவேன்" என்பார்கள். "என்ன பொருள் கேட்டாலும் தருவீர்கள் என்றால், உங்களுக்கு ஏன் இறக்குமதியாளர் கிடைக்க வில்லை?" என்று கேட்டால், அவர்களிடம் எந்தப் பதிலும் இருக்காது.

ஏற்றுமதித் தொழிலில் இருக்கும் எல்லோருக்கும் வரும் குழப்பம், முதலில் நாட்டைத் தேர்ந்தெடுப்பதா அல்லது பொருளைத் தேர்ந்தெடுப்பதா என்பதுதான். ஏற்றுமதித் தொழில் செய்ய வருபவர்கள் முதலில், தங்களிடம் என்ன பொருள் அல்லது சேவை இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதாவது, ஒரு பொருளை வாங்கி ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளராக இருந்தால், எந்தப் பொருளைத் தேர்ந்தெடுப்பது என்று பார்க்க வேண்டும். முதலில், பொருளைத் தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும், எந்த நாட்டுக்கு என்ன பொருள் தேவைப்படுகிறது என்று ஒரு பட்டியல் போட்டு வைத்துக்கொண்டு, அதில் நாம் எந்தப் பொருள்களையெல்லாம் ஏற்றுமதி செய்ய முடியும் என்று பார்க்க வேண்டும்.

ஒரு நாடு மூன்று காரணங்களுக்காகப் பொருள்களை இறக்குமதி செய்யும். ஒன்று, பொருள் உற்பத்தி ஆகாமல் இருக்கும். இரண்டு, உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கும். மூன்று, அதற்கான தொழில்நுட்பம், மனிதவளம் போன்றவை இல்லாமல் இருக்கும். ஒரு பொருளை உற்பத்தி செய்ய தொழில்நுட்பம், மனிதவளம், மூலப்பொருள்கள் என அனைத்தும் தேவை. இவற்றில் ஏதோவொரு விடயம் இல்லாவிட்டாலும், அங்கு உற்பத்தி என்பது சாத்தியமில்லை. அதனால்தான் ஒரு நாடு, தனக்குத் தேவையான பொருள்களை இன்னொரு நாட்டிலிருந்து வாங்குகிறது.

இதேபோல், ஒரு பொருளை உற்பத்தி செய்யும் செலவு ஒவ்வொரு நாட்டுக்கும் வித்தியாசப்படுகிறது. எனவே, ஒரு பொருளை உற்பத்தி செய்வதைக் காட்டிலும் இன்னொரு நாட்டிலிருந்து வாங்கிவிடுவது மேல் என்றும் நினைக்கிறார்கள். அப்படி ஒவ்வொரு நாடும் பிற நாடுகளிலிருந்து வாங்க விரும்பும் பொருள்கள் என்னென்ன என்று பட்டியல் போட்டாலே நமக்கான பொருளை நாம் கண்டுபிடித்துவிட முடியும். பிறகு அந்தப் பொருள்களை எங்கு வாங்குவது என்று பார்க்க வேண்டும். எனவே, கையில் பொருள் எதுவும் இல்லாதவர்கள், முதலில் நாடுகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பொருள்களைத் தீர்மானிக்க வேண்டும்.

நம் நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு அதிகமாக தேயிலை, தைத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்...' என்று நாம் பெருமிதப்பட்டுக்கொள்ளும் அதே நேரம், எண்ணெய் வளம் நம் நாட்டில் இல்லாததால் அதனைப் பெருமளவில் இறக்குமதி செய்கிறோம். எனவே, ஒரு நாட்டின் தேவை என்ன என்பதை அறிந்து வைத்திருந்தால் ஏற்றுமதியின் முதல்படியை வெற்றிகரமாகக் கடந்துவிடலாம்.

மேலும், நாம் தேர்ந்தெடுத்த ஒரு பொருள் பிற நாடுகளில் என்ன விலைக்கு விற்பனையாகிறது, அங்கு உற்பத்திச் செலவு என்ன, அதிலிருந்து நம்முடைய உற்பத்திச் செலவும், விலையும் எவ்வளவு வித்தியாசப்படுகிறது என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு நம்மால் குறைவான விலையில் பொருளைத் தரமுடிகிறதோ, அதற்கேற்ப இறக்குமதியாளர்களை எளிதில் பிடித்துவிடலாம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கௌரவ் நாராயணன் இயக்கத்தில் உதயநிதி ஸ்ராலின், மஞ்சிமா மோகன் நடிக்கும் படம் 'இப்படை வெல்லும்'. இப்படத்தின் முதல் பார்வையை இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ் ருவிற்றரில் வெளியிட்டார்.

லைகா நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்தில் உதயநிதி, மஞ்சிமா இருவரும் மென்பொருள் பொறியியலாளர்களாக நடித்துள்ளனர். படப்பிடிப்பு நிறைவடைந்துள்ள நிலையில் டப்பிங் நடக்கிறது. இதைத் தொடர்ந்து பிரபுவின் இயக்கத்தில் 'பொதுவாக என் மனசு தங்கம்' படத்தில் நடிக்கிறார் உதயநிதி.

தென்னிந்தியப் படங்களில் தனக்கு நல்ல வேடங்கள் தரவில்லை என்ற கோபத்தில் ஹிந்தி படங்களில் நடிக்க சென்றவர் டாப்ஸி. தொடர்ந்து தென்னிந்தியப் படங்களில் நடிக்க மறுத்த அவர் தற்போது நடிக்கச் சம்மதித்து வருகிறார்.

தெலுங்குப் படத்தில் மீண்டும் நடிக்கவுள்ள அவருக்கு இரு நாயகிகள் போட்டியாகவுள்ளனராம். அதை சமாளிக்க படத்தின் பெயரை தனது ருவிற்றர் பக்கத்தில் பூடகமாக வெளியிட்டு அதை சரியாக கணித்துச் சொல்லும் ரசிகர் தன்னுடன் சேர்ந்து 'செல்பி' எடுக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

டாப்ஸியின் இந்த யுக்தி தென்னிந்தியப் படங்களில் அவருக்கெனத் தனியான இடம் ஒன்றைத் தக்க வைக்க உதவுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.




பிரபல கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் நடிக்கும் படம் "ரீம் 5" தமிழ், தெலுங்கு, மலையாளம் மொழிகளில் உருவாகும் இந்தப் படத்தில் நாயகியாக நிக்கிகல்ராணி நடிக்கிறார்.

பைக் ஸ்டண்ட் விளையாட்டை மையப்படுத்தியதே இப்படத்தின் கதை என இயக்குநர் சுரேஷ் கோவிந்த் தெரிவித்துள்ளார். விரைவில் இப்படம் வெளியாகும்.





'ரண்டாமூ
நாவலை மை
ஆயிரம் கோ
ரூபா செலவி
மையப்படுத்
மகாபாரதம் உ

2018 செப்
தொடங்கும் இ
படப்பிடிப்பு 2
இல் வெளியிட
திட்டமிடப்பட
தமிழ், கன்னடம்
ஹிந்தி, தெலுங்கு
ஆங்கில மொழிகள
வெளியாகவுள்ளது.

இப்படத்தில் பீமனாக ந
மோகன்லால் ஒப்பந்தமாகிய
கர்ணனாக நடிக்க நாகர்ஜுன
நடத்தியிருக்கிறார்கள். அவ
நடிப்பேன் எனக் கூறியிருக்கி



ஏ.ஆர்.முருகதாஸ் - மகேஷ்பாபு இணைந்துள்ள 'ஸ்பைடர்' படத்தின் வெளியீடு செப்ரெம்பர் மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

தமிழ், தெலுங்கு மொழிகளில் தயாராகும் ஸ்பைடர் படம் இம்மாதம் 23 ஆம் திகதி வெளியாகும் என ஆரம்பத்தில் கூறப்பட்டது. எனினும் அது பின்னர் ஒகஸ்ட் மாதத்துக்கு பிற்போடப்பட்டது. ஆனால் படத்தின் இறுதிக்கட்டப் பணிகள்முடியாததால் இப்போது செப்ரெம்பர் மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

ரஜினி - ரஞ்சித் மீண்டும் இணைந்துள்ள 'காலா' படத்தின் முதல்பார்வையை தயாரிப்பாளரான நடிகர் தனுஷ் தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

படத்தின் முதல்கட்டப் படப்பிடிப்பு கடந்த 28 ஆம் திகதி தொடங்கியது. இந்தப் படத்தில் சமுத்திரக்கனி, ஹியூமா குரேஷி ஆகியோரும் நடிக்கவுள்ளனர். சந்தோஷ் நாராயணன் இசையமைக்க முரளி ஒளிப்பதிவும், சண்டைப் பயிற்சியை திலீப் சுப்பராயன் ஆகியோர் பணியாற்றவுள்ளனர்.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழிகளிலான முதல் பார்வையே வெளியாகியுள்ளன. இதில் 'கரிகாலன்'னின் சுருக்கப்பெயராகவே காலா என்பது குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அஜித்தின் 'விவேகம்' படம் வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி வெளியாகும் எனக் கூறப்படுகின்றது.

இப்படத்தில் இடம்பெறும் 'தீம்ஷோங்' ஒன்று இடம்பெறவுள்ளது. இந்தப் பாடல் டீசரில் வெளியான 'நெவர் எவர் கிவ் அப்' என்ற பஞ்ச் வசனத்தை பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

கபில் வைரமுத்து எழுதி அனிருத்தின் இசையில் வெளிவரவுள்ள இப்பாடல் அஜித்தின் 25 ஆண்டு கால சினிமா பயணத்தை விவரிப்பதாக அமையும் என்பது கூடுதல் தகவல்.



வெளி உலகுக்கு பளபளப்பாகத் தெரியும் ஐ.ரி. நிறுவனங்களின் மறுபக்கத்தைக் காட்டும் படமாக உருவாகிறது 'விளையாட்டு ஆரம்பம்'. 'சாட்டை'யுவன், ஸ்ரவியா, ரியாஸ்கான், பானுசந்தர் உட்பட பலர் நடிக்கும் இப்படத்தை யுவனின் தந்தை பெரோஸ்கான் எழுதியுள்ளார். ஒளிப்பதிவை அருண்மொழி சோழன் செய்ய, ஸ்ரீகாந்த் தேவா இசையமைக்கிறார்.

ஐ.ரி. நிறுவனங்களில் வேலையில் சேரும்போது ஆரம்பத்தில் இலட்சங்களில் சம்பளம் வழங்கப்படுகின்றது. இதை நிரந்தரம் என்று நம்பி வீடு, கார் என வாங்கி ஆடம்பர வாழ்க்கைக்கு செல்கிறார்கள். வாழ்க்கை சந்தோசமாக செல்லும்போது ஆள்குறைப்பு, பொருளாதார நெருக்கடி எனக்கூறி வேலையை விட்டு நீக்கி விடுகிறார்கள் அல்லது நிறுவனமே மூடப்படுகின்றது. இது பின்னர் அவர்களை தற்கொலை வரை கொண்டுசெல்கிறது. இதை மையப்படுத்தியதே படத்தின் கதையாம்.

...மூலம்' என்ற
...மயப்படுத்தி
...ாடி இந்திய
...வில் பீமனை
...த்திய கதையாக
... உருவாகவுள்ளது.

...ப்ரெம்பரில்
... இப்படத்தின்
... 2020
...ட
...பட்டுள்ளது.
...ம், மலையாளம்,
...கு மற்றும்
...களில் இப்படம்

... நடிக்க
...கியுள்ளார்.
...னவிடம் பேச்சு
...வர் கண்டிப்பாக
...க்கிறார்.







சமந்தா 3 மாதங்களுக்கு நடிப்புக்கு ஓய்வு கொடுத்துள்ளார். நாக சைதன்யாவுக்கும் அவருக்கும் வரும் ஒக்ரோபர் மாதம் திருமணம் நடைபெறவுள்ளது.

விஜயுடன் நடித்து வரும் சமந்தா விஷாலுடன் இரும்புத்திரை, விஜய் சேதுபதியுடன் அநீதி கதைகள், சிவகார்த்திகேயனுடனும் தெலுங்குப் படங்கள் இரண்டிலும் தற்போது நடித்து வருகிறார்.

திருமணத்துக்காக ஒக்ரோபர் தொடக்கம் டிசம்பர் வரை படப்பிடிப்பில் கலந்து கொள்ள மாட்டேன் என தான் நடிக்கும் படங்களின் இயக்குநர்களுக்கு அவர் தெரிவித்துள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தினி சேவியரின் படைப்புக்கள் – ஈழத்து முற்போக்கு இலக்கியமும், முற்போக்குக் கட்சிகளும், அனைத்து உழைப்பாளி வர்க்கமும் ஒருங்கிணைந்து முன்னெடுக்கும் ஒரு புரட்சியைப் பற்றிய பிரமையைக் கொண்டிருந்தன. சீனச்சார்பு இலங்கை இடதுசாரிக் கட்சியின் உறுப்பினராக, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராளியாகக் களச் செயற்பாடுகளில் இவர் பங்கு கொண்டவர். அவரின் படைப்புலகம் அந்த மயக்கத்தைக் கொள்ளாதது ஒன்று. தலித் மக்களின் அன்றாட ஜீவிதத்துள் எதிர்பாராமல் துளிர்கின்ற துன்பியலையும், நம்பிக்கைகளையும், வாழ்வனுபவத்தின் இயங்கியலுடன் பதிவு செய்கின்றன அவரின் படைப்புகள்................ அதற்கே உரிய கால நீட்சியுடன் கண்டடையும் முயற்சியாக அவரின் படைப்புலகம் அமைகிறது........... அத்துடன் நேர்மையான தொரு இடதுசாரிப் பார்வையில் மனித நேயத்துடன் பதிவு செய்பவைகளாக அவரின் படைப்புகளைக் காணமுடிகிறது.



நந்தினி சேவியர்

# ஒற்றைத் தென்னை

பிரபஞ்சவெளியை ஊடுருவிக் கொண்டு நிமிர்ந்து நிற்கிறது அந்த ஒற்றைத் தென்னை.

தொலை தூரத்தில் தெரியும் தீவுக் கூட்டங்களுக்கும், எட்டத்திலே வரும் இயந்திர வள்ளங்களுக்கும், பாய் கட்டி ஓடும் படகுகளுக்கும் குருநகர் ஜெற்றி இறங்குதுறையைக் காட்டும் கலங்கரை விளக்கம் அந்த ஒற்றைத் தென்னை.

வரிசையாக இறங்குதுறையோரம் நிற்கும் இயந்திர வள்ளங்கள் நீர்ச்சுழிப்பில் நர்த்தனமிட்டுக் கொண்டிருந்தன.

கடலின் முள்ளந்தண்டாக நீண்டு கிளைவிட்டு சுத்தியல் அமைப்பில் மல்லாந்து கிடக்கும் அந்த இறங்குதுறை ரோட்டின் மருங்கில் குவிக்கப்பட்டு இருக்கும் மீனை ஒருவன் பிளந்து பிளந்து எறிய, குடல்களையும் கழிவுப்பதார்த்தங்களையும் அலசி அலசி வீசுகிறான் மற்றொருவன்.

எறியப்படும் மீனை ரோட்டில் சாக்கைப் பிரித்துக் கொட்டியிருக்கும் உப்புக் குவியலில் பிரட்டி எடுத்து அடுக்குகிறான் இன்னொருவன்.

தொலை தூரம் நீரைக் கிழித்துக் கொண்டு வரும் ஒரு வள்ளம் இறங்குதுறையை அண்மித்து நிற்கிறது. கயிற்றை எறிந்து இறங்குதுறையின் குத்துக் கல்லில் அதனைக் கட்டும் சத்தியாக் கிழவன். "மருமோன்..... மருமோன்" என்று குரல் கொடுத்தான். அவன் முகத்தில் பூரண திருப்தியின் சாயல்.

செவத்தி என்கிற செபத்தியாம் பிள்ளையும், அவனோடு வள்ளத்தைவிட்டு வெளியே வந்தான்.

"மிச்சம் நல்லா இருக்கு..... செவத்திக்கு நல்ல மலிவு"

இறங்குதுறையில் மீன் பிடிக்கும் அல்போண்சனைப் பார்த்து முனகினான் சத்தியாக் கிழவன்.

அந்த வள்ளத்தை அவர்கள் பருத்தித்துறையிலிருந்து வாங்கியிருந்தார்கள். வெள்ளோட்டத்துக்காக அந்த வள்ளத்தைக் கௌதாரி முனைவரை ஓட்டிச் சென்று அவர்கள் இருவரும் திரும்பியிருந்தார்கள்.

வள்ளத்தின் அமைப்பும் இயந்திரங்களின் பாவனையும் சத்தியாக் கிழவனுக்கு நன்றாகப் புரியும்.

அல்போன்ஸ் சத்தியாக் கிழவனைப் பார்த்து "அம்மான் ...... நீ போனால் என்ன சாதாரணமே........ எடுப்பாய்?" என்று சிரித்தான்.

வெய்யில் அகோர எறிப்பிலும் கிழவன் அவர்களோடு தொழிற்பாடுகளைப் பற்றியே பேசிக்கொண்டு இருக்கிறான்.

செவத்தியின் மனைவி தூரத்தில் நின்று குரல் கொடுப்பது கேட்கிறது. "ஓ...... அம்மான்...... உந்தாளையும் கூட்டிக்கொண்டு தேத்தண்ணி குடிக்க வா...." அவளின் குரல் மெதுவாக ஒலிக்கத் தொடங்குகிறது.

"அம்மான்தான் இந்த நேரம் தேத்தண்ணி குடிக்கும். அக்கா சும்மா சாட்டுக்குக் கூப்பிடுது......." என்றான் நீருள் மீனை அலசியபடி நிற்கும் ரொபேட்.

அவன் கூறியதில் நியாயம் இருப்பது போல் சிரித்த சந்தியா தலைப்பாகையை அவிழ்த்து முகத்தைத் தொடைத்தபடி பிரதான வீதியை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

இறங்குதுறையில் நிற்கும் அநேக கண்கள் அவனை அனுதாபத்தோடு நோக்கின. பெரு மூச்சுக்கள் வெடிச்சுத் திண றுகின்றன. அவன் நடக்கிறான்.

சத்தியாவுக்கு அறுபத்தைந்து வயது இருக்கும். ஆனாலும் கட்டுமஸ்தான தேகமும், வலிமைமிக்க மன உறுதியும் அவனை இன்னும் உசுப்பவில்லை.

குருநகர் வாழ் மீனவர்களுக்கும், மற்றைய சமூகத்தினருக்கும் அவனைப் பற்றி நன்றாகத் தெரியும். இன்றுவரை அவன் யாருக்குமே பயந்ததில்லை. இனியும் பணியப் போவதுமில்லை. சிறு வயதிலிருந்தே சுறாக்குட்டியைப்போல் சுறுசுறுப்பாக எதிர்நீச்சல் போட்டுப் பழகியவன் அவன். இன்றுவரை அவனை அசரப்பண்ணியவர்கள் எவருமில்லை.

குருநகரில், பெரிய சம்மாட்டிகள், முதலாளிகள் என்று எத்தனையோ பேரை எதிர்த்து எதிர்த்து நின்ற ஒரே ஒரு நேர்மையான தொழிலாளி என்றால் அது சத்தியாக் கிழவனேதான். எத்தனையோ முறை பொலிஸாரைக் கொண்டு அவனுக்கு எதிராகப் பலவித நடவடிக்கைகளைப் பணமுதலைகள் செய்தன. ஆனால் அவைகளால் அவனை ஒன்றுமே செய்ய முடியவில்லை.

நெஞ்சுரம் பெற்றவன் சத்தியாக்கிழவன். அவனது குடும்பமே அழிந்தொழிந்தபோதும் அவன் அசராதவன். சுமார் ஒரு வருடத்துக்கு முன் நிகழ்ந்துவிட்ட அந்த நிகழ்ச்சி....? அவன் இப்போது இருப்பது போலத்தான் அப்போதும் கலகலப்பாக இருந்தான். மீன்களைப் பிளந்தெறியும் கைங்கரியத்தில் லாவகமாக அவன் ஈடுபடும்போது அதைப் பார்க்கச் சிலருக்கு ஆச்சரியமாகக்கூட இருக்கும்.

என்ன வேகம்...... என்ன வேகம்....! இன்றும் அவன் இறங்குதுறையில் நிற்கிறான். ஆனால் அவனோடு கூட வேலைசெய்தவர்கள்.......?

விக்டர், டேவிட், அதிரியார்..............?? விக்ரரும், டேவிட்டனும் இன்று உயிரோடு இல்லை. அதிரியார்....?

"அம்மான்.... அம்மான்..! ஐயாவைக் கண்டியளே..." வேகமாக நடக்கும் சந்தியாக் கிழவன் முன் அலங்க மலங்க ஓடிவந்தாள் மாகிரற். "ஏனடி பிள்ளை ..... எங்கை போனவன்...?" பதறினான் கிழவன்.

"நான் கைவேலையாய் இருந்தன்.... அப்ப அந்தாள் படலையைத் திறந்து கொண்டு வெளியிலை வந்திட்டுது..." தூண்டிலில் சிக்கிய மீனைப்போல அவள் துடித்தாள்.

"பயப்படாதை. உங்கை கிட்டடி யிலை.... எங்கையேனும் நிற்பான். நான் பார்த்திட்டு வாறன். சந்தியா திரும்பி நடந்தான். அவன் நினைத்தது வீண்போகவில்லை.

கடற்கரையின் கிழக்குப்புற ஒற்றைத் தென்னையில் சாய்ந்து கொண்டு கடலை வெறிக்கப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் அதிரியார்க் கிழவன். சந்தியா அவனை அனுதாபத்தோடு பார்த்தான்.

அதிரியாரின் எலும்புகள் துருத்தும் உடலம், மேலும் காய்ந்து கருவாடாகியும் இருப்பது அவனுக்குப் புரிகிறது. அதிரியாருக்குச் சந்தியாவைவிட மூன்று நான்கு வயது குறைவாகத்தானிருக்கும். முன்பு அதிரியாரும் நல்ல வாளிப்பான தேகக்கட்டு உடையவனாகத்தான் இருந்தான். அதெல்லாம் சிதைந்து உருக்குலைந்தது...! இந்த ஒரு வருடத்திற்கு முன் நடந்த நிகழ்சியினால்தான்.......

அந்த நிகழ்ச்சி..?" என்னடா இப்படியே..... நெடுகலும் யோசிச்சு ...... கவலைப்பட்டு ..... சும்மா மனதை அலட்டாதை. பொடிச்சி உன்னைக் காணாமல் தவிக்கிறாள், எழும்பு" குரலில் சற்று அனுதாபமும் , கண்டிப்பும் தொனிக்க அலையாக அடித்தான் சந்தியா. உப்பு நீரைக் குடித்துவிட்டதுபோல் முகம் சுருங்கிக்கிடக்கும் அதிரியார் விம்மினான்.

"அண்ணை........... அண்ணை " அவனுக்குக் குரல் அடைத்தது.

"யோசியாதை மோனை, யோசியாதை ... நடந்தது நடந்திட்டுது... இனி என்ன...? " குரலில் எந்தவித சலனமுமின்றி உரத்த தொனியில் பேசினான் சத்தியாக் கிழவன். இரண்டு கிழங்களுமே ஒரே தாக்கத்துக்குள் சிக்குண்டவைதான். ஆனால் இரண்டும் இப்போது இருக்கும் நிலை மிகமிக வித்தியாசமானது. பெரிய கோவில் சவுக்காலையை வெறிக்கப்பார்த்து அதிரியார் பலத்து அழுதான்.

"பாலைத்தீவுப் படகு விபத்தில் அவனது மகன் விக்ரர் இறந்துபோகாதிருந்தால் அவன் இப்படி இருப்பானா....? "அழாதையெடா... தம்பி... அழாதை..." அதிரியாரைத் தேற்றும் சந்தியாவுக்கும் சற்று உடல் நடுங்குகிறது. ஆனால் அதை அவன் சமாளிக்கிறான்.

ஒரு மகனை இழந்து பைத்தியம் ஆகி விட்ட அதிரியாருக்கு அந்த விபத்திலே தனது குடும்பத்தையே இழந்து நிற்கும், அசையாது நிற்கும் அந்தத் தனிமரம் , அந்த ஒற்றை மரம் ஆறுதல் கூறுகிறது. படகுவிபத்தில் அவரது மனைவி, மக்கள், பேரக்குழந்தைகள் அனைத்தையும் இழந்துவிட்ட அந்த மனிதன் மற்றவனுக்கு ஆறுதல் கூறுகிறான்.

கல்லூரிக்குச் செல்லும் சிறுவர்களைக் காணும்போதும், கணவன் மனைவியாகச் சோடியாக நடக்கும் தம்பதிகளைக் காணும்போதும், சந்தியாவுக்கு மக்களின், மருமக்களின், பேரக் குழந்தைகளின் நினைவு வரத்தான் செய்யும். அவன் சமாளித்துக் கொள்வான்.

"உவற்றை நினைவுக்குத்தான் உப்பிடி வந்தது............ ஆள்பாடு தொப்பி..........!" சந்தியாவின் பழைய கம்பீரமான நடவடிக்கைகளைப்பார்த்து வலை பின்னிய சிலர் பொறாமை கூறத்தான் செய்தார்கள். ஆனால் கிழவன் இன்றும் பழைய சந்தியாவே!

பெரியகோயில் சவக்காலையைத் தாண்டி சாராயத் தவறணையை நோக்கி நடக்கும்போது கிழவன் கவலையோடு நடப்பதுண்டு. அதற்குள் உறங்கும் அவனது குடும்பம் சிலவேளை அவனை கெதிகலக்கும். ஆனால் கண நேரம்....! தவறணையிலிருந்து திரும்பும்போது சந்தியாக் கிழவன் பழைய மனிதாகி விடுவான்.

தனிச்சமையல் , தனித்தொழில் , எல்லோருக்கம் எதவி.... தொழில் ஆசான். மதிப்பிற்குரிய சீவன்.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஒரு கோடீஸ்வரனது இரண்டு கோடி ஸ்ரேலிங் பவுண்ஸ் - இலங்கை மதிப்பில் சுமார் 390 கோடி ரூபா- பெறுமதியான பெராரி - 458 மொடல் காரைப் பொலிஸார் பறிமுதல் செய்து நொறுக்கிய சம்பவம் மன்செஸ்டரில் நடைபெற்றிருக்கிறது.

'றூக்' ஸ்தாபனத்தின் உரிமையாளரான சகீட் கான் தனது பெராரி 458 மொடல் காரை பொலிஸார் பறிமுதல் செய்துவிட்டதாகச் சொல்லியிருக்கின்றார். அவர் அதை 2 கோடி ஸ்ரேலிங் பவுணுக்கு ஒரு ஏலத்தில் வாங்கியிருக்கிறார். "அதில் திருடப்பட்ட பாகங்கள் பல பொருத்தப்பட்டன" என்றும் உரிய முறையில் காப்புறுதி இல்லாததாலும் பொலிஸார் அவரைக் கைது செய்து கை விலங்கு மாட்டிச் சென்று நீதிமன்றில் ஒப்படைத்தனர்.

அவர் தனது காரை பெர்மிங்காம் கிறவுண் நீதிமன்றத்துக்கு வெளியே உள்ள நடைபாதையில் நிறுத்தி வைத்துள்ளார். மேல்முறையீடு ஒன்றின் காரணமாகவே அது அங்கு நிறுத்திவைக்கப்பட்டு இருந்ததாம். அது தெருவில் ஓடுவதற்கு ஏற்றதாக இல்லை என்பதால் அதைப் பொலிஸார் பறிமுதல் செய்து நொறுக்கியிருக்கிறார்கள்.

இருந்தும் பின்னர் அவர் அதைத் தனது கார்தான் என்று நிரூபிப்பதற்கான ஆதாரத்தோடு சென்றபோது கார் நொறுக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியுற்றதாக சொல்லியிருக்கிறார்.

• புதினப்பூங்கா •

# ஒலியை விஞ்சும் வேக விமானம்




தடையற்ற அதிவேகமுடைய பேரழிவை ஏற்படுத்தவல்ல அதிமீஒலி (ஹைபர் சொனிக்) தாக்குதல் விமானங்களை தயாரித்துள்ளது ரஷ்யா. ஒலி வேகத்திலும் பார்க்க 5 தொடக்கம் 6 மடங்கு வேகத்தில் பறக்கவல்ல இந்த விமானங்கள் மணிக்கு 3,800 - 4,600 மைல் வேகத்தில் பயணிக்க வல்லவை.

எந்த ஏவுகணைகளாலும் தாக்கி அழிக்க முடியாத இந்த விமானங்களை கண்டறிந்ததன் மூலம் ஏனைய நாடுகளை விட அரைநூற்றாண்டுகளுக்கு ரஷ்யா முன்னகர்ந்துள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பேரழிவை ஏற்படுத்தவல்ல இந்த விமானங்கள் 2018 - 2020 காலப்பகுதிக்குள் ரஷ்ய விமானப் படையுடன் இணைக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது. ரஷ்யாவின் இந்தப் புதிய தயாரிப்புகளைக் கண்டு உலகமே அதிர்ந்து போயுள்ளது.

"அழிக்கிறதென்டால் உடன கண்டுபிடிக்கிறாங்க.. காக்கிறதுக்குத்தான் எதுவுமே செய்யிறாங்களில்லை...!"





# சீனியை விரும்பும் நோய்க்கிருமிகள்


சீனிதான் பலவிதமான புற்று நோய்களுக்கு மூலகாரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. புற்று நோயைப் பெருப்பிக்கும் கட்டிகளை வளர்ப்பதற்கு சீனியிலிருந்து கிடைக்கப்பெறும் சக்தி பெருமளவில் பயன்படுகிறதாம்.

முன்னைய பரிசோதனைகள் புற்று நோய்கிருமிகளை இனிப்புவகை வளர்ப்பதாகச் சொல்லியிருந்தாலும் தற்போதைய பரிசோதனைகள் அதை மிகவும் உறுதிப்படுத்தியிருக்கிறது. அதாவது புற்று நோய்க் கிருமிகள் அதிகம் இனிப்புச் சுவையை விரும்புவதாகவும் கண்டுபிடித்திருக்கின்றனர்.

அதிகளவு சீனியை உட்கொள்ளுவது நீரிழிவை மட்டும் உண்டாக்குவதோடு நின்றுவிடாது, புற்று நோயையும் வளர்க்கிறது. அதில் நுரையீரல் புற்று நோயையே அதிகம் வளர்ப்பதாக ஆராய்ச்சி சொல்லுகிறது.

புற்றுநோயை ஏற்படுத்தும் கலங்கள் சீனியில் மட்டும் தங்கியிருப்பதில்லை. அவைகள் அமினோ அசிட் மற்றும் கொழுப்பினாலும் உண்டாகின்றன.

இரத்தத்தில் சீனி சத்தின் அளவு கூடினால் அது ஒருவித பதற்றத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்துகிறது. அது இதயம், ஈரல், சுரப்பிகள் மற்றும் சமிபாட்டுத்தொகுதி என்பனவற்றின் தொழிற்பாட்டையும் ஒழுங்கீனப்படுத்துகிறது. முக்கியமாகச் சிறு குடலில் வீக்கத்தை உண்டு பண்ணுவதோடு. அமிலச் சுரப்பையும் வாயுவையும் அதிகரிப்பதுடன் வயிற்று வலியையும் ஏற்படுத்துகிறது.



# ஒரே கல்லில் இரண்டு மாங்காய்



"பிளாஸ்ரிக்... பெயரைக் கேட்டாலே சும்மா அதிருதில்ல..." என்பதாக மனிதர்களுக்குக் கலக்கத்தைக் கொடுக்கிறது பிளாஸ்ரிக். கடந்த காலங்களில் மண்ணுக்குள் புதையுண்டுபோன பிளாஸ்ரிக்குகளை நூறாண்டுகளுக்குப் பின்னர் தோண்டி எடுத்தாலும் மக்காது அப்படியே வெளிவரும். இந்தப் பிளாஸ்ரிக் மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகள், இயற்கைக்கும் பெரும் சவால்தான்.

"பிளாஸ்ரிக்கையும் பொலித்தீனையும் அழிப்பது ஒரு வேலையா? எல்லாவற்றையும் ஒரு இடத்தில் குவித்து எரித்தால் போகிறது" என்று சிந்திப்போரும் இருக்கிறார்கள். ஆனால் அது முடியாத காரியம் பிளாஸ்ரிக்கை எரிப்பதால் வளி மாசடையும் அதுமட்டுமல்ல பிளாஸ்ரிக்கை எரித்தாலும் அது முழுதாக அழியாது. ஆபத்தான இந்தப் பிளாஸ்ரிக், பொலித்தீனை சூழலுக்குப் பாதிப்பின்றி அழிப்பதற்கான ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் ஜேர்மன் விஞ்ஞானிகள் ஒரு வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அது வேறொன்றுமில்லை. பிளாஸ்ரிக்கை மீண்டும் அதன் பழைய வடிவத்துக்கே மாற்றி விடுவதுதான். அது என்னவென்று யோசிக்கிறீர்களா...? பிளாஸ்ரிக் முன்னர் நிலக்கரி, வேதி உப்புகள், கச்சா எண்ணெய், செலுலோஸ் போன்றவற்றில் இருந்தே உருவாக்கப்பட்டது. எனவே பிளாஸ்ரிக்கை ஹைட்ரஜனுடன் சேர்த்து அதிக அழுத்தம் கொடுக்கும் போது தன்னிலை கெட்டு பழைய வடிவமான எண்ணெயாக (குரூட் ஒயில்) மாறும். இது பலனளித்தால் இரு நன்மைகள் கிடைக்கும் பிளாஸ்ரிக் அழியும் : பெற்றோல் கிடைக்கும்.

இதுதான் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பதோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்




## சவால்கள்

விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், ஆசிரியர் ஓய்வறை, பிரிக்கப்பட்ட வகுப்பறைகள், விளையாட்டு மைதானம், கணினி அறை என்பவற்றுக்கு வளப்பற்றாக்குறை காணப்படுகின்றன.

நிதிப் பற்றாக்குறை காணப்படுவதால் பாடசாலையை விஸ்தீரணப்படுத்த முடியாதுள்ளது.

ஆரம்பப் பிரிவில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவு. பெற்றோர்களின் ஒத்துழைப்பும் மிகக் குறைவு.

இப்பாடசாலையில் உடற்கல்வி விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு இடவசதி இல்லாததுடன் ஆள்வளம் மற்றும் நிதி வசதியும் இல்லாமை பெரும் சவாலாகவுள்ளது.


அதிபர் திருமதி வ.கதிரேசபிள்ளை

தொகுப்பு:
அ.றொக்ஷன்

## வரலாறு

யாழ். நகரை அண்மித்து, பாரம்பரியம் மிக்க வண்ணார்பண்ணையில் நாச்சிமார் கோவிலுக்கு அண்மையாக அமைந்துள்ளது இளையதம்பி இந்து வித்தியாலயம். சைவச் சிறார்களின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு 1902 ஆம் ஆண்டு செல்லையா இளையதம்பி என்பவர் தனக்குச் சொந்தமான இரண்டேகால் பரப்புக் காணியில் ஓலைக்கொட்டகையில் இப்பாடசாலையை ஆரம்பித்தார். இந்து சமயப் பேரவையும் பொதுமக்களும் இந்த முயற்சிக்குப் பெரும் ஆதரவு வழங்கினர். ஆரம்பிக்கப்பட்டபோது ஞானானந்த வித்தியாசாலை எனப் பெயரிடப்பட்டது.

1911 ஆம் ஆண்டுவரை பாடசாலையை நிர்வகித்து வந்தார் இளையதம்பி. இதன் பின்னர் அரசின் நன்கொடை பெறும் பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டது. இதையடுத்து 1912 ஆம் ஆண்டு தட்டாதெரு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை எனப் பெயர் மாற்றப்பட்டு, க.சிவப்பிரகாசம் தலைமையில் தரம் 1 தொடக்கம் 11 வரையிலான வகுப்புக்களுடன் இயங்கத் தொடங்கியது. 1932ஆம் ஆண்டு பாடசாலையை முழுமையாக அரசே பொறுப்பேற்றது. அதுவரை காலமும் முகாமையாளார்களின் நிர்வாகத்தில் இயங்கிய இப்பாடசாலை அதிபரின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட ஆரம்பித்தது.

அக்காலத்தில் சுமார் 350 மாணவர்கள், 10 ஆசிரியர்களுடன் பாடசாலை இயங்கியது. அயல் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களும் இப்பாடசாலையில் கல்வி கற்றனர். 1965 ஆம் ஆண்டு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான ஆரம்பப் பாடசாலையாக மாற்றப்பட்டது. 1985 ஆம் ஆண்டு தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையான பாடசாலையாக மாற்றம் பெற்றது. பாடசாலையின் நிறுவுநரைக் கௌரவிக்கும் முகமாக, 1983 இல் இளையதம்பி இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயம் எனப் பெயரிடப்பட்டது. 1992 இல் வீரமணி ஐயரால் பாடசாலைக் கீதம் இயற்றப்பட்டது. 30.10.2002,இல் இப்பாடசாலை தனது நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடியது.

இப்பாடசாலையில் க.இரட்ணசபாபதி, இ.நல்லதம்பி, ந.பசுபதிப்பிள்ளை, கா.கணேசதாசன், க.தங்கராசா, கே.செல்வரட்ணம், க.கனகசபை மு.செல்லையா ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். 01.07.2009 தொடக்கம் திருமதி வ.கதிரேசபிள்ளை முதல் பெண் அதிபராகப் பொறுப்பேற்று சிறப்புற கடமையாற்றி வருகின்றார்.

## சாதனைகள்

2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் மாணவன் வ.சோபிகாந் 4ஏ,4சி பெறுபேறு பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார்.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் தொடர்ச்சியான முனனேற்றம் காணப்படுகின்றது.

தமிழ்த் தினம், ஆங்கில தினம், விரைவு கணிதம், சமூக விஞ்ஞானப் போட்டிகளில் இப்பாடசாலை மாணவர்கள் கோட்ட மட்டம், வலய மட்டங்களில் வெற்றி ஈட்டியதுடன் மாகாண மட்டத்தில் சமூக விஞ்ஞானப் போட்டியிலும் பங்குபற்றியது.

2016 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச சபையால் நடத்தப்பட்ட தேசிய இலக்கிய விழாவில் கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி மூன்றாம் இடம் கிடைத்தது.

2016 ஆம் ஆண்டு திருநெல்வேலி சத்திய சாயி நிறுவன அன்பு வார நிகழ்வில் பங்கு பற்றி அதிவிசேட திறமைச் சான்றிதழ்களைப் இப்பாடசாலை பெற்றுள்ளது.

இப்பாடசாலையில் அகில இலங்கை இந்து மாமன்றத்தால் சிவதொண்டர் அணி அமைக்கப்பட்டது. இந்த அணி சைவ பரிபாலன சபை நிகழ்வுகளில் பங்கேற்பதோடு சிறந்த சிவதொண்டர் அணியாகவும் செயற்படுகின்றது.

### திருத்தம்

கடந்த 2017.05.20 இதழில் யா/ வண்ணை. நாவலர் மகா வித்தியாலயத்தின் வரலாறு வெளியானது. அந்தப் பாடசாலையின் அதிபர்களான ந.சிவராஜா 2001- 2006 வரையும் சு.சிவபாதசுந்தரம் 2006 - 2013 வரையும் கடமையாற்றியிருந்தனர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் இவர்கள்? தெரியப்படுத்துங்கள்!

கிடந்த வாரம் மே 17 என்று நினைக்கிறேன். பிற்பகல் 3மணி இருக்கும். வெயில் தகதகத்துக் கொண்டிருந்தது. கல்வியங்காட்டுச் சந்தியைக் கடப்பதற்காகக் காத்திருந்தோம். நல்லூர் பக்கத்திலிருந்து வலு வேகமாக வந்த வான் ஒன்று சாலையைக் கடக்க முற்பட்ட நாய் ஒன்றை மோதிச் சென்றுவிட்ட நிலையில் நாயின் பிணம் தெருவின் நடுவிலே கிடக்கத் தொடர்ந்து வந்த மற்ற வாகனங்களும் அதைச் சம்பல் போட்டுச் சென்று கொண்டிருந்தன. திடீரென அங்கு வந்த இளம் பெண் ஒருவர் தான் வந்த ஸ்கூட்டரை திடீரென நிறுத்திவிட்டு வந்து பக்கத்திலிருந்த பலசரக்குக் கடைக்குச் சென்றார். அங்கே பிளாஸ்ரிக் சாக்கு ஒன்றை வாங்கிக் கொண்டார். அங்கே வந்து நின்று கொண்டு தனக்கு உதவியாக யாராவது வருவார்களா? எனப் பார்த்தவேளை அவருக்குத் தெரிந்த இளைஞன் ஒருவன் அவ்வழியே வந்தார். அவரை மறித்து விவரத்தைச் சொன்னதும் இருவரும் சேர்ந்து அந்த நாயின் பிணத்தை சாக்கில் போட்டு அகற்றிவிட்டு அந்த இடத்தைச் சுத்தம் செய்தனர்.

அதை அந்தச் சந்தியிலுள்ள எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் நிரப்ப நின்ற அனைவரும் பார்த்துக் கொண்டிருந்தனர். இந்தக் காட்சியைத் தற்செயலாகக் காண நேருற்ற சமயம் உடனடியாக அவர்கள் இருவரையும் சென்று அவர்களைப் பாராட்டியதோடு அவர்கள் பெயர் விவரங்களைக் கேட்டோம். தருவதற்குப் பின் நின்றார்கள். மேலும் அவர்கள் பெயர்களையாவது சொல்லுங்கள் என்று கேட்டபோது "பானுகா" தனது பெயர் என்றும் தான் வைத்தியசாலையில் பணியாற்றுவதாகவும் சொல்லி கோப்பாய் பக்கமாகச் சென்றுவிட்டார். அந்த இளைஞனும் அவருடன் அந்த வைத்தியசாலையிலேயே பராமரிப்புப் பகுதியில் பணியாற்றுவதாகவும் சொன்னார்கள். மறு நாள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கச் சென்று கேட்டபோது அவர்கள் பற்றிய விவரம் அறியமுடியாது போய்விட்டது.

அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். எத்தனையோ மனிதர்கள் அந்நிலையைக் கடந்து சென்று கொண்டிருக்கையில், அந்த இருவருக்கு மட்டும் ஏன் அந்த எண்ணம் வந்த்து? ஏன் அவர்கள் அதைச் செய்தனர்? அவர்களை அவ்விதம் செய்யத் தூண்டியது என்ன? அவர்களிடம் இதைக் கேட்க வேண்டும். அவர்கள் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்கள் முன்மாதிரியானவர்கள். இது அவர்களைப் போல சமூகப்பொறுப்புள்ள பலரை உருவாக்க நாம் எடுக்கும் முயற்சிகளில் ஒன்று.

# முச்சக்கரத்தாரர்களின் மூர்க்ககுணங்கள்

அன்று சனிக்கிழமை. அரை நாள் தான் வேலை. வீட்டுக்குப் போவதற்காக யாழ்.பஸ்தரிப்பு நிலையம் வந்தேன். பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்னால் ஆஸ்பத்தரி வீதியிலுள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தில், கொடும் வெயிலிலும் இரண்டு பெரிசுகளை வைத்து வறுத்துக் கொட்டிக் கொண்டிருந்தனர் முச்சக்கர வண்டிச் சாரதிகள். "என்ரை ரேண் இல்லை. அவன்தான் இப்ப ரேண். அங்கை போங்கோ. இஞ்சை வாங்கோ" என்று அவர்களைச் சிப்பிலியாக்கிக் கொண்டிருந்தனர் ஓட்டோச் சாரதிகள். வந்தவர்கள் வயோதிபத் தம்பதிகள். அவர்கள் திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையிலுள்ள அம்மன் கோவிலடிக்குப் போக வேண்டும். "வழமையா அந்த இடத்துக்குப் போறதுக்கு எவ்வளவு குடுக்கிறனியள்" அதில் நின்ற ஓர் ஓட்டோ சாரதி அவர்களைப் பார்த்துக் கேட்டான். "நாங்களென்ன அடிக்கடி போறனாங்களே? இண்டைக்கு ஆஸ்பத்திரிக்கு வந்ததாலை போறம். வெயில் தாங்கேலாமைக் கிடக்கு. அதாலை தான்" என்றார் பெரியவர். "திருநெல்வேலிக்கு எவ்வளவெடா?" ஏதோ தான் புதிதாக வந்ததுபோல மற்றவனை விசாரித்தான் அவன். அவனும் அடுத்து நின்றவனைக் கேட்டான். "போயிட்டு சும்மாதானே வரவேணும். ஹயர் இருக்காதெல்லே. வயசுபோனாக்களாக் கிடக்கு. ஐநூறு வேண்டு" என்றான் அவன். தலையில் கையை வைத்தபடி தள்ளிப்போய் முனியப்ப கோவிலடியிலுள்ள வண்டிகளைக் கேட்டால் அவர்களும் அதே பல்லவியைப் பாடினர். அதற்குக் காரணம் ஆஸ்பத்திரி வீதியில் இவர்கள் முன்பு பேரம்பேசியவன் முனியப்பர் கோயில் தரிப்பிடத்திலுள்ளவனுக்குச் சைகை செய்திருந்தான். பின்னர் அவர்கள் மின்சார நிலைய வீதிக்கு வந்து தெருவிலே நின்ற ஒரு முச்சக்கர வண்டியைக் கேட்டபோது அவன் இருநூற்று ஐம்பதுக்கு உடன்பட்டுக் கொண்டு சென்றான்.

யாழ். மாநகரத்துக்கு உட்பட்ட பகுதிகளிலேதான் முச்சக்கர வண்டிக் காரரின் மூர்க்கத்தனத்தை நீங்கள் அடிக்கடி காணலாம். முதலில் பெரும்பாலானவர்கள் நீங்கள் வாடகைக்கு வண்டியைக் கேட்டதும் ஏதோ சண்டைக்குக் கேட்டது போலத்தான் பேசத் தொடங்குவார்கள். சண்டித்தனமே அவர்கள் முதலீடு எனலாம். கேட்டால் தாங்கள் ஒரு லட்சம் கொடுத்து இந்த இடத்தை வாங்கியிருக்கிறோம். இரண்டு லட்சம் கொடுத்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்லுவார்கள். கொஞ்சம் நீங்கள் அதிகமாகப் பேசினால் அதில் நிற்கின்ற பலரும் கூடிவிடுவார்கள் சண்டைக்கு. அது யாழ்ப்பாணத்திலுள்ள மேல் வர்க்கத்தினருக்கோ அல்லது மேலதிகாரிகளுக்கோ தெரியாது. ஏனெனில் அவர்களுக்கு போக்குவரத்துக்குச் சொந்தமாக செல்வது அரச வாகனம் இருக்கும். பாதிக்கப்படுபவர்கள் ஏழைகள். வசதியற்றவர்கள். முச்சக்கரவண்டிச் சாரதிகள் ஏன் இப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்ற கேட்டதற்கு யாழ்ப்பாணத்துக் கடைக்காரர் பின்வருமாறு பதில் தந்தார்.



அவையள் பெரும்பாலும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவை. அவர் தான் முன்னாலை எல்லாருக்கும் ஓட்டோ கொடுத்தவர். அவர் ஆட்சியிலை இருந்தவரைக்கும் இவையள்தான் இராசாக்கள். எண்டதாலை அந்தப் பழக்கம் தொடருது. அதோடை அவையளிலை கொஞ்சப்பேர் மற்றாக்களின்ரை அனுசரணையோடு திரியிறவை. முந்திப் புலி பிடிச்சவை. இப்ப பூனை பிடிக்கினம். அதாலைதான் இந்தச் சண்டித்தனம்.

எதுவாயினும், இதற்குரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு பொதுமக்களுக்கு விடுதலைப் பெற்றுத் தரவேண்டுமென்று அனைவரும் கேட்டுக் கொள்ளகின்றனர். முடிந்தால் எல்லா முச்சக்கர வண்டிக்கும் மீற்றர் பூட்டுங்கள். எல்லாம் நேராகும்.

# சில்லறைத் தனம்

கிடந்த வாரம் வவுனியாவிலிருந்து பேருந்தில் வந்து யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இறங்கியதும் நம்ம ஆள் ஏதாவது வயிற்றுக்கு இடலாம் என்று கேட்டார். நல்ல சாப்பாட்டுக் கடையாகச் சொல் என்றேன். "மச்சமா? சைவமா?" என்று வினவினார். "நான் வெளியிலை போனால் சைவம்தான்" என்றேன். உடனே வடக்காலுள்ள சைவக்கடை ஒன்றிறைக் காட்டி "அங்கு போகலாம்" என்றார்.

உள்ளே புகுந்து இடியப்பம், வடை, பிட்டு பிளேன்ரீ, ரீ என அவரவர் விருப்பத்துக்கேற்ற மாதிரி வெட்டினோம். பில் தனித்தனியாகப் பெற்றுக் கொண்டோம். எனக்கு வந்தது ரூபா.125. அதே போல மற்றைய பில்லுகளும் தரப்பட்டன.


பணத்தைச் செலுத்தப்போய் ரூபா 150 ஐ காசாளரிடம் கொடுத்தேன். மிகுதி ரூபா.20. உம் 2 அல்பலிப்பின்டே சொக்கிலேட்டையும் அவர் தந்தார். உடனே மேலதிகமாகச் சொக்கலேட் வாங்குபவர் போல அதன் விலையைக் கேட்டேன். ஒரு சொக்கலேட்டின் விலை ரூபா.2. என்றார் கஸியர். அப்போ இரண்டின் விலை ரூபா.4. தானே. அப்பவும் நீங்கள் சரியாக மிகுதியைத் தரவில்லை எனக் காசாளரிடம் சொன்னேன். ரூபா 1 பாக்கியிருப்பதாகச் சொல்லியபோது "இவ்வளவு வசதி செய்து தந்திருக்கிறோம். மயிரிழையிலை கணக்குப் பார்க்கிறியள்" என அவர் புறுபுறுத்தார். மிகுதியைச் சரிவரத்தர விரும்பினால் 3 சொக்கலேட்டைத் தருவதுதான் நியாயம் என்றேன். மேலும் கீழும் பார்த்துவிட்டு 3ஐத் தந்தார்.

ஏனெனில், ஒரு சொக்லேட்டின் சில்லறை விலைதான் ரூபா.2. மொத்தவிலை ரூபா.1.50 இற்கு அண்ணளவாகத்தான் இருக்கும். எனவே ரூபா.5. மிகுதிக்கு 3ஐத் தருவதுதானே நியாயம். ரூபா.5 இற்குப் பதிலாக 2 சொக்லேட்டைத் தரும்போது கடைக்காரருக்கு ரூபா.1 மேலதிக லாபமாகக் கிடைக்கிறது. "இப்படியே மிகுதிக்குச் சில்லறை இல்லை என்று சொக்லேட்டைக் கொடுக்கும்" வியாபாரமே பெரிய வியாபாரம். அதனால் நாளொன்றுக்கு 2-3 தேறும் என்கிறார் நம்மவர். அப்போ மாத வருமானம் லட்சமா? என வாய்பிளக்கிறார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியால் நிரம்புதல்



அதிபர் கோகுலராகவனுடன் ஒளிபெற்ற மாணவன்

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை.

தரம்-5 மாணவன் ஒருவன் படிக்காமல் ஏமாற்றி வந்தான்.ஒருநாள் அதிபர் அந்த வகுப்பு படிப்பிக்கச் சென்றிருக்கிறார்.

அவனை அருகில் அழைத்து வாசிக்க விட்டார்.

தடக்கி தடக்கி வாசிப்பது அவன் வழக்கம்.

அன்று அவன் புத்தகத்தை வாசிக்கும் போதுஅவன் புத்தகத்தை பார்க்கும் விதம் அதிபருக்குச் சந்தேகமாக இருந்தது.

"உனக்கு கண் தெரியவில்லையா?"

அவன் அதிபரை நிமிர்ந்து பார்த்துவிட்டு தொடர்ந்து வாசிக்க முயற்சித்தான்.

திரும்பவும் அதிபர் கேட்டார் உரத்து,

"உனக்கு கண் தெரியவில்லையா?"

"ஓம்" என்றான்

பரிசோதனை செய்து பார்த்தபோது அவனுக்குப் பார்வை கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

"உனக்கு கண் தெரியாது என்று முதலே தெரியுமா? "அதிபர் அக்கறையோடு கேட்டார்.

"தெரியும் ,"

"அப்ப ஏன் யாரிடமும் சொல்லவில்லை "

"சொன்னால் சிரிப்பினம்"

"கடவுளே! உனக்கு எப்ப தெரியும் இப்பிடி பிரச்சினை இருக்கெண்டு? "

"இரண்டாம் வகுப்பில் "

இவ்வளவு காலம் அவன் மிக புத்திசாலித்தனமாக தன் பார்வை கோளாறை மறைத்துக் வந்திருக்கிறான்.

தாய்க்கு கூட அவன் சொல்ல வில்லை.

இப்போது அந்த மாணவனுக்கு கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பாடசாலையின் பழைய மாணவரும், பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளருமான கிருபாகரன் 4500.00 ரூபா பெறுமதியான கண்ணாடியை வாங்க உதவி செய்துள்ளார்.

இனி அந்தச் சிறுவனின் உலகம் ஒளியால் நிரம்பும்.

## நெசவுக்கார

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

தகைமை அறிக்கையின்படி தற்போது எமது நாட்டில் சிறு மற்றும் பெரியளவிலான 962 தொழிற்சாலைகள் செயற்படுவதோடு 8 மாகாண சபைகளுக்குட்பட்டதாக 771 தொழிற்சாலைகள் இத்தொழிலில் ஈடுபடுகின்றன.

இலங்கையில் நெசவு செய்யப்படும் ஆசன விரிப்புக்கள், திரைச்சீலைகள், கட்டில் விரிப்புக்கள், மேசை விரிப்புக்கள், கைக்குட்டைகள், ஆடைகள், கால்துடைப்பான், காப்பெட், சிறுவர்களுக்கான விளையாட்டுப்பொருள்கள் மற்றும் எழுதுகருவிகள் போன்றவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 2014 இல் நெசவு செய்யப்பட்ட துணிகளின் முழு ஏற்றுமதிப்பெறுமதி 1.08 டொலர் மில்லியனாகும்.

2014 ஆம் ஆண்டின் ஏற்றுமதி அபிவிருத்தி குழுமத்தின் தகைமை அறிக்கையின்படி இலங்கையில் ஹேண்ட்லூம் ஆடைகளுக்கு சர்வதேச சந்தையில், ஐரோப்பிய சங்க நாடுகளிலும் (இத்தாலி, ஜேர்மன், ஐக்கிய இராச்சியம், சுவீடன், நெதர்லாந்து, ஸ்பெயின், பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், மாலைதீவு, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், மொரீசியஸ், கொரியா , ஜப்பான், தாய்லாந்து, சுவிற் ஸர்லாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலும் உயர்ந்த கேள்வி நிலவுகின்றது.

இலங்கையில் கைத்தறித் தொழிலா னது உடல் சிரமத்தை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுவரும் வியாபார நடவடிக்கையொன்றாகும். பிரதானமாக மேற்கு, கிழக்கு, வட மேல், தென் மாகாணங்களில் இத்தொழில் பரவிக்காணப்படுகின்றது. கம்பஹா மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள திவுலபிடிய மடம்பெல்லே கிராமத்தில் கைத்தறித்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் வாழ்கின்றனர். இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி குழுமம் மற்றும் நெசவுக்கைத்தொழில் திணைக்களம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை கைத்தறி [illegible]ராமத்தில் உ[illegible]ன கைத்தறி [illegible]

கைத்தொழில் காரணமாக அவர்களுடைய உற்பத்திகளுக்கு சர்வதேச மட்டத்திலான உயர்ந்த கேள்வி நிலவுகின்றது.இக்கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவுப்பயிற்சிப்பாடசாலை மூலமாக இத்தொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்கு நெசவுக்கைத்தொழில் சம்பந்தமான தகுந்த பயிற்சியுடன் நவீன தொழிநுட்பம் மற்றும் உபாய முறைகள் கற்றுக்கொடுக்கப்படும்.இதனால் அப்பிரதேசத்தவர்கள் பலர் தொழில்வய்ப்பைப் பெற்றுள்ளமை மகிழ்ச்சியளிக்கக்கூடிய விடயமாகும்.

புராதன கைத்தறி இயந்திரங்கள் மூலம் நிர்மாணிக்கப்பட்ட பருத்தியாடை ஒன்றின் அழகும் அதிலுள்ள அலங்காரங்களின் உயிர்ப்பும் பல நிறங்களையுடைய பருத்தி நூலாலான அலங்காரங்களின் கலப்பினால் பெறப்படக்கூடிய கவர்ச்சியும் நவீன தொழில்நுட்பத்தைப்பயன்படுத்தி தயாரிக்கப்படக்கூடிய ஆடைகளில் ஒருபோதும் காண முடியாது.

தேசிய ரீதியாக தொழிலாளர்களின் ஆற்றல்களை பலப்படுத்தல், கைத்தறி நெசவுத்தொழிலாளர்களுக்கு அவசியமான தொழிநுட்ப சேவைகளை வழங்குதல், புதியவர்களுக்கு பயிற்சியளித்தல், அறிவுறுத்தல் செயற்றிட்டங்களை மேற்கொள்ளல் போன்றவை தொடர்பிலும் தேசிய கைப்பணிகளுக்கு அரசால் உதவியளிப்பதற்கும், பாரம்பரிய கலைஞர்களின் ஆற்றல்களை தேசிய மற்றும் சர்வதேச சந்தையுடன் தொடர்புபடுத்துவதற்கும், அவர்களின் பாரம்பரிய திறமைக்கு சிறந்த மதிப்பைப்பெற்றுத்தருவதற்கும் , அவற்றை எதிர்காலச் சந்ததியினருக்காக பாதுகாப்பது தொடர்பிலும் பல்வேறு பயிற்சிச் செயற்றிட்டங்கள் தற்போது நாட்டில் செயற்படுத்தப்படுகின்றது.

கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கான அமைச்சு , நெசவுக்கைத்தொழிலமைச்சு, இலங்கை நெசவுக்கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவனங்கள், மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் தேசிய தொழில் அபிவிருத்தி அதிகார சபை ஆகியவை இணைந்து இலங்கையின் கைத்தறி நெசவுக்கைத்தொழிலை பலப்படுத்துவதற்காகவும் அது தொடர்பான பிரச்[illegible] [illegible]ர்வுகளை முன்வைக்கவும் [illegible] மு[illegible]ன்று செயற்படுகின்றன.

## கொக்காவில்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)



ஆற்றில் மணலை அள்ளி எடுக்க வேண்டுமே தவிர, அகழ்ந்தெடுக்கக்கூடாது. ஆனால், இங்கோ மணல் அகழ்ந்தே எடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு மட்டுமல்ல வன்னி முழுவதிலும் மணல் அகழ்தே எடுக்கப்படுகிறது. இது மிகத் தவறானதாகும். இதைக் கண்காணிப்பதற்கு கனிய வளங்களைப் பேணும் திணைக்களமும் சுற்றுச்சூழல் அமைச்சும் உள்ளன. ஆனால், அவர்களின் கண்களிலும் மண் தூவப்படுகிறது. அல்லது பணத்தினால் கண்ணும் வாயும் அடைக்கப்படுகிறது. போதாக்குறைக்கு இங்கிருந்த பாலை, முதிரை, தேக்கு, சமண்டலை, யாவறணை மரங்களும் வெட்டப்படுகின்றன. வீரப்பன்கள் பெருகி விட்டார்கள்.

படையினர் காடுகளில் நிரம்பிக் கிடக்கிறார்கள். அவர்கள் இதைக் கட்டுப்படுத்த மாட்டார்களா? என்று நீங்கள் கேட்கலாம். சில இடங்களில் சில சந்தர்ப்பங்களில் அப்படி நடப்பதுண்டு. அது அந்தப் பகுதிகளில் இருக்கின்ற இராணுவப் பொறுப்பதிகாரியின் குணம் மற்றும் மனநிலையைப் பொறுத்தது. சில இடங்களில் வேலியே பயிரை மேய்வதுமுண்டு.

கொக்காவிலைக் கடந்து போகும்போது அங்கே ஒரு தொலைத் தொடர்புக் கோபுரமும் ஒரு படைமுகாமும் இருக்கின்றன என்றே தெரியும். ஆனால் உள்ளே நடந்து கொண்டிருக்கும் அழிவுகளைப் பற்றி யாருக்கும் பெரிதாகத் தெரிவதில்லை. மேற்கே நிலம் அழிந்து கொண்டிருக்கிறது, மணல், கிறவல் அகழ்வோரால். கிழக்கே காடழிந்து கொண்டிருக்கிறது, படையினரால். நாளை இந்தப் பகுதிகளில் யாருமே எதிர்பார்த்திராத வகையில் ஒரு களமாற்றம், காட்சி மாற்றம் நிகழும். அதற்கான சாத்தியங்கள் அதிகமாகத் தென்படுகின்றன. இடையிலே ஒரு பிரமாண்டமான குடியிருப்பு முளைக்கும். அந்த நாள் வெகு தொலைவில் அல்ல.

இதை கொக்காவில் சந்தியில் பாலைப்பழம் விற்றுக் கொண்டிருக்கின்ற அந்த முதிய மனிதர்களிடம் கேட்டுப்பாருங்கள். அவர்கள் வரலாற்றை எல்லாம் சொல்வார்கள்.

## ஒற்றைத்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அம்மான்".சிறு தோல்விகளைக் கண்டு கலங்கித் தற்கொலை செய்பவர் களும் தம்தோல்விகளால் விரக்தியுறுபவர்களுமான இளம் சந்ததியினருக்கு ஒரு உதாரணம் காட் டக்கூடிய மனவலிமை மிக்க, சலிக்காத உழைப்பாளியான நேர்மைத் தொழிலாள வர்க்க வாரிசுதான் சந்தியாக் கிழவன்.

"ஆனால்... அதிரியார்..?"

"ம்.. எழும்பு......... வீட்டை போ. பொடிச்சி அந்தரப்படுவாள்...." மீண்டும் உலுப்பினான் சந்தியா.

ஒற்றைத் தென்னையில் கையை ஊன்றி எழுந்திருக்கும் அதிரியார் சந்தியாவின் பின்னே தள்ளாடி நடக்கிறான். பன்னிரண்டு மணி வெயில் நெருப்பைக் கக்கிக்கொண்டிருக்கின்றது. ஓடி வரும் மாகிரற் தக்ப்பனைக் கையில் பிடித்து வீட்டுக்குக் கொண்டு செல்கிறாள்.

"அம்மான் சாப்பிடவாருங்கோவன்...."

"வேண்டாம் பிள்ளை. நான் சோறு காய்ச்சினனான். எதிலை போட்டு வந்துதான் சாப்பிட வேணும்." மாக்கிரற்றைப் பார்த்துக் கூறும் சந்தியாக்கிழவன் தவறணையை நோக்கிக் கம்பீரமாக நடக்கிறான்.

மாகிரற் தொலைவில் தெரியும் அந்த ஒற்றைத் தென்னையை வெறிக்கப்பார்க்கிறாள். "அந்தத் தென்னை...... அது....?" எத்தனையோ மழைக்கும், புயலுக்கும் அசையாது நிலைத்து நிற்கும் அத்தனிமரம்.....?

குருநகரில் எதற்குமே அசையாத இரண்டு தென்னைகள் .....!!

ஒன்று அது. மற்றது ....? சந்தியாக் கிழவன்! அவளுக்கு உடல் சிலிர்க்கிறது..

நன்றி - நந்தினி

சேவியர் படைப்புகள். (இதயம் - 1971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## • பார்வைநயம்-25 •

■ கணபதி சர்வானந்தா

# கடன்

இதுவரை எந்தப் பழி பாவமும் இல்லாது வாழ்ந்தாயிற்று. இனியும் ஒரு குறையும் வரக்கூடாத மாதிரிப் பார்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் சுந்தரத்தின் எண்ணமும், பிரார்த்தனையும். அதற்குத் தானே இத்தனை பாடுகள்?

**இ**த்தனையையும் கடந்து வந்தாயிற்று. அவற்றோடு பார்க்கையில் இது ஒன்றும் பெரிதுமல்ல, புதிதுமல்ல. ஆனால், ஏனோ மனம் ஒரு விதத்தில் தடுமாறிக் கொண்டிருந்தது. "நல்லது" என்று செய்ய நினைத்த ஒவ்வொரு தடவையும் ஏதோ ஒன்று தடையாக வந்து வழி மறிக்க மனம் துவண்டு போவது ஏனோ, உண்மைதான். ஆனால் அதை எண்ணி விடயங்களை நகர்த்தாமல் இல்லை. கணவன் இருந்தபோது பட்ட கடனில் செலுத்த வேண்டிய இறுதிப் பங்கைச் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம்தான் இத்தனை மனச்சுமையை ஏற்படுத்தியிருக்கிறது. கடன் தந்தவன் போதையில் வந்து கேட்பதுதான் இன்னும் சங்கடமாக இருக்கிறது. அதுவும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் கேட்குமளவுக்கு, உரத்த தொனியில்...!

சிவன் கோவில் வாசலில் நீண்டகாலம் கடலை வியாபாரம் செய்தவர் சுந்தரம் ஆச்சி. கணவன் பெரிய கடையில் நாட்டாமையாக இருந்தவர். "தனக்குத் துணையாக இருக்கட்டுமே" என்றுதான் கிழவிக்குக் கடலைக் கடையை வைத்துக் கொடுத்தவர். அவர் இருக்கும்போது காரியமில்லை. ஒத்தாசையாக இருந்தார். கடலை வாங்குவது தொட்டு, வறுக்கிறதென எல்லா வித்திலும் அவர் பங்கு அதிகமாயிருந்தபோது கடலை வியாபாரம் இலகுவாக இருந்தது. அவருக்குப் பின் அது பெரும் சிரமமாக, பாரமாக இருந்ததை சுந்தரம் உணர்ந்தபோதும் சில காலத்திற்கு இழுக்க வேண்டியதாயிற்று. எல்லாம் இந்தக் கடனால்தான்.

இருந்தும், அப்போது கடன் கட்டுவது இலகுவான காரியாகமாகத் தென்பட்டது. கடலைக் கடையை மூடிய நாள் தொட்டுத்தான் இந்தச் சிரமத்தை உணர்ந்து கொண்டாள் சுந்தரம். அவளுக்குக் கடையை மூடுவதில் அத்தனை விருப்பம் இருந்ததில்லை என்றாலும், இடையில் ஏற்பட்ட சூழ்நிலையில் அவள் அதை மூடவேண்டியதாயிற்று. ஒருநாள் அவளின் தூரத்து உறவுமுறையான சரோஜா வந்திருந்தாள். " ஆச்சி. கேக்கிறதா குறை நினைக்க வேண்டாம். குடும்பப் பாரத்தாலைதான் கேக்கிறேன். உங்க கடைக்குப் பக்கமா ஒரு கடையை நான் போடட்டுமா?" சுந்தரம் மறுத்துச் சொல்ல முடியாத அளவுக்கு அவள் காரணங்கள் அமைந்திருந்தன. அவள் கெஞ்சலும் கூட அவள் பேச்சுக்குத் துணையாக இருந்தது. சுந்தரம் சம்மதித்து விட்டாள். கடையைத் தொடங்கிச் சரோஜா சற்று மூச்சுவிட்டபோது சுந்தரம் ஓயத்தொடங்கி விட்டாள். இயலாமையும் சேர அவள் கடையை மூடவேண்டியதாய் போயிற்று.

பின்பு அவள் தொடங்கிய "இஞ்சி மிட்டாய்" வியாபாரம் சிறிது கை கொடுக்க நிலைமையைச் சமாளித்துக் கொண்டாள் சுந்தரம். நகரத்து வீதிக் "கடைப்பெடியள்தான்" அவள் வாடிக்கையாளர்கள். இருந்தும் தற்போது சிறிது தளர்வை உணர்ந்து கொண்டாள் சுந்தரம், வயதும் ஒரு காரணமாக இருக்கலாம். தற்போது எந்த வியாபாரத்திலும் அவ்வப்போது போட்டி முளைத்து விடுகிறது. திடீர் திடீரென யாராவது வந்து தொலைத்து விடுகிறார்கள். எத்தனை இரசனையாகச் செய்து கொண்டாலும் "இதைவிட அது பரவாயில்லை. அது அப்படி இருக்கிறது, இது அப்படி இருக்கிறது" என்று குறை கூறுபவர்கள்தான் அதிகம். அதுவும் மனச்சோர்வை தருகின்ற விடயமாகத் தெரிகிறது. சில சமயங்களில் எல்லாவற்றையும் வீசி எறிந்துவிட்டுச் சென்று விட்டால் நிம்மதி என்று எண்ணும்போது அந்தப் பாழாய்போன கடன்காரன் நினைவுக்கு வந்து தொலைத்துவிடுகிறான். எனவேதான் அதைத் தொடர வேண்டியுள்ளது. இதுவரை எந்தப் பழி பாவமும் இல்லாது வாழ்ந்தாயிற்று. இனியும் ஒரு குறையும் வரக்கூடாத மாதிரிப் பார்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் சுந்தரத்தின் எண்ணமும், பிரார்த்தனையும். அதற்குத் தானே இத்தனை பாடுகள்?

இன்று மாலை வருவதாகச் சொல்லியிருக்கிறான் அந்தக் கடன் காரன். அவன் வருவதற்கு முன் காரியமாக வேண்டும். அதற்குத்தானே சுந்தரம் வந்து மணியகாரன் வீட்டுப் படலைக்கு முன் நிற்கிறாள். "ஆர்.. அது?" அந்த விசாலமான படலைக்கு அப்பால் இருந்து ஒரு குரல் கேட்டது. அது மணியகாரனின் மனைவியாகத்தானிருக்கலாம். " ஓம்.. நான் சுந்தரம் வந்திருக்கேன்" பதிலைத் தொடர்ந்து கதவு திறக்கப்பட்டது. அவள் சுந்தரத்தை அழைத்துக் கொண்டு போனாள். "இவதான் எங்க மாமியார். இவவுக்குத்தான் உங்க துணை தேவை. இவவுக்குப் பேச்சுத் துணையாக இருந்தாலே அது பெரிய காரியம்" எனத் தனது கணவனின் தாயைக் காட்டி விட்டுச் சென்றாள் அவள்.

சுந்தரத்திற்கு ஒரு புதிய வேலை கிடைத்திருக்கிறது. இராமசாமிச் செட்டியார் மனைவிக்குத் துணையாக இருக்க வேண்டியது அவள் பொறுப்பு. இறுதிக் காலத்தில் கடவுளாகப் பார்த்து அவளுக்குக் கொடுத்ததாக அந்த வேலை அமைந்திருந்தது. "என்ன? செட்டியார் மனைவி கொஞ்சம் முசுடு. அவ்வளவுதான். சிவன் கோவில் வாசலில் வந்த எத்தனை பேரைச் சமாளித்தவள் அவள். அவளுக்கு இது பெரிய காரியமா, என்ன? லீவுதான் கிடையாது. சமாளித்துக் கொள்ளலாம்" என்றது அவள் மனம்.

வீட்டு வாசல்படி அருகிலுள்ள திண்ணை மீது இருந்த சுந்தரத்திற்குத் தேநீர் கொண்டு வந்தாள் மணியகாரன் மனைவி. கூடவே சுந்தரம் தனது கடனை அடைக்க, வேலைக்கு முற்பணமாகக் கேட்ட பணத்தையும் கொண்டுவந்திருந்தாள். சில மாதங்களில் அது கழிந்துவிடும். அந்தக் கடன் தொல்லையிலிருந்து விடுபடப் போகிறாள் சுந்தரம். சுந்தரத்தின் அடிவயிற்றிலிருந்து பலத்த சத்தத்துடன் ஒரு பெரு மூச்சு வெளிப்பட்டது. அவள் கைகளில் பணம். அவள் அதை எண்ணியபடி நடந்து கொண்டிருந்தாள். கடனற்ற வாழ்க்கை. அதிலும் ஒரு சுகம் உண்டு.

**"கடன் பெற்ற ஆன்மா களங்கப்பட்டுவிடுகிறது" என்று கதை சொல்கிறது ஆன்மிகம்**

## தொடரும்...

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

2015 செம்ரெம்பரிலும் ஒரு மோசமான இயற்கை அனர்த்தம் இடம்பெற்றிருக்கிறது. தொடர்ந்த மழை 2015 செப்ரெம்பர் நடுப்பகுதிவரை ஓயாது பெய்துகொண்டிருந்தது. இதனால் நிலச்சரிவுகளும், வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டு எட்டுப்பேர் மரணமடைந்ததுடன் 07 பேர் வரை காயமடைந்திருக்கிறார்கள். நான்கு மாவட்டங்களில் 7300பேர் பாதிக்கப்பட்டவர்கள் என அடையாளங் கண்டு கொண்டதுடன் 450 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. 151 வீடுகள் முற்றாகச் சேதமடைந்திருக்கின்றன. 344 பேர் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர். நவம்பர் 30 திகதியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பாக பதுளை மாவட்டத்தில் 320க்கு மேற்பட்டவர்கள் வெள்ள நெருக்கடியினால் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். வட மாகாணத்தின் யாழ். மாவட்டத்தில் 52500 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

2014 இல் ஏற்பட்ட தென்மேற்குப் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் அதிவேகக் காற்றுடன் கூடிய மழையினால் ஜூன் 2014 முற்பகுதியில் களுத்துறையில் மட்டும் 378 மி.மீ. மழைவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 11 மாவட்டங்களில் 104,476 பேரைக் கொண்ட 25538 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக் கின்றனர். 1300 வீடுகள் பகுதியாகவும் 288 வீடுகள் முற்றாகவும் சேதமடைந்துள்ளன. இதே நிலையில் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள் தொடர்ந்து வறட்சியில் வாடுவதோடு அங்கு நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

தொடரும் இதுபோன்ற அனர்த்தங்கள் மக்களது இயல்பு வாழ்க்கையைப் பாதித்திருப்பதை மேற்சொன்ன அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. ஒவ்வொரு வருடமும் மே, ஜூன் மாதங்களில் இத்தகைய அனர்த்தங்கள் நடைபெறுகின்றன. பொது நிறுவனங்களும், பொது மக்களும் வீதிகளில் இறங்கி நிவாரணங்களைச் சேர்ப்பதுவும் விநியோகிப்பதுவும் அதற்குப் பின்னர் அவற்றைச் சமூக வலைத்தளங்களில் சமூகப் பொறுப்பென்று விளம்பரப்படுத்துவதுவும் தொடர்கதையாகியிருக்கின்றன. இச்சந்தர்ப்பங்களில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலுள்ள பலர் குளிர்காய்வதாகவும் நம்பப்படுகின்றது.

இதையிட்டு அரச கட்டமைப்புக்களில் மாற்றமேற்படுத்தாதது ஏன்? இது பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நிரந்தரத் தீர்வொன்றை அவர்கள் தாமாகவோ அல்லது அரச உதவி யுடனோ ஏற்படுத்த வழி செய்யாதது ஏன் என மக்கள் கேள்வி எழுப்பத் தொடங்கிவிட்டனர். வருடா வருடம் இந்த நிலை தொடரத்தான் போகிறது என்பதைக் கடந்தகால அனுபவம் சொல்லுகிறது. எனவே அனர்த்தம் தொடர்பான நடவடிக்கைகளும் இப்படித்தான் தொடரப்போகிறது.

மழை பெய்வது இயற்கை. வெள்ளம் வருவது இயற்கை. ஆனாலும் அத்தகைய இயற்கைச் சீற்றங்களை மனித உணர்வுகளைப்போலவே பார்க்க வேண்டும். உணர்வுகள் வழிந்தோட முறையான வடிகால்களை ஏற்படுத்தாதவிடத்து, அமைத்துக் கொடுக்காதவிடத்து அவைகள் மனித உயிர்களைக் காவு கொண்டுவிடும். அதேபோலவே இயற்கையும். அவற்றின் சீற்றத்தை முறையாக வெளியேற்ற வகை செய்யாதவிடத்து அவை பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பது வரலாறு. இது பற்றி அரசுதான் சிந்திக்க வேண்டும். வெள்ளத்தை வெளியேற்றக் கூடிய கட்டமைப்பை அரசு சரி செய்ய வேண்டும். ஆவன செய்யாத பட்சத்தில் வருடா வருடம் இத்தகைய நிலையே தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெசவுக்கார குவேனி

சிங்களத்தில்:
**ஆய்ஷா மயூரம் கசீமா**
தமிழில்:
**ஷரீமா லபீர்**

**நெ**சவுக் கைத்தொழிலானது நூறு வருடங்களையும் தாண்டிய வரலாற்றை உடையதாகக் காணப்படுகின்றது. விஜய மன்னன் இலங்கைக்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் இயக்கர் குலப்பெண்ணான குவேனி நூல் நூற்றுக்கொண்டிருந்ததாக புராணக்கதைகளில் கூறப்படுகின்றது.

கி.பி. ஆறாம் நூற்றாண்டு காலம் வரை நீண்ட வரலாற்றையுடைய இலங்கையில் நெசவுக் கைத்தொழிலானது குடிசைக் கைத்தொழிலாகவே ஆரம்பமாகியுள்ளது. தொழில் புரட்சி காரணமாக கைத்தறி நெசவுக்கைத்தொழில் வெகுவாகப் பாதிப்படைந்ததுடன் 1970 களில் திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு கரங்களால் செயற்படுத்தப்படக்கூடிய உபகரணங்களைக்கொண்டு மேற்கொள்ளப்பட்டு வந்த கைத்தறி நெசவுக்கைத்தொழிலானது அழிவின் விளிம்புக்குச்சென்றமையால், அது பலரின் ஜீவனோபாயத்தைப் பாதிப்பதாக அமைந்தது.

எனினும் இலங்கையில் கைத்தறி நெசவுக்கைத்தொழிலானது பூரணமாக மடிந்துவிடவில்லை. நிகழ்காலத்தில், உள்நாட்டில் நெசவு செய்யும் நம் நாட்டவர் தமக்கே உரிய நெசவுக்கலையொன்றை உருவாக்கிக்கொண்டுள்ளனர். அவர்கள் சம்பிரதாய ரீதியான அலங்காரங்கள், வடிவங்கள் மற்றும் வர்ணங்களை ஒன்றுபடுத்தி கண்கவர் ஆடைகளை நெசவு செய்கின்றனர். பல்லாண்டு காலம் பழமையானதும் பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வரக்கூடியதுமான நெசவுக்கைத்தொழிலின் சிறப்பை சர்வதேசத்துக்கு கொண்டு செல்வதற்காக நம் நாட்டவர் தமது கலைத்திறனை பயன்படுத்தக்கூடிய விதம் மிகவும் அற்புதமானதாகும்.

இலங்கையில் கைத்தறி நெசவுக்கைத்தொழிலானது பல்லாயிரம் வருடங்களையும் தாண்டிய வரலாற்றை உடையது. விஜய மன்னன் இலங்கைக்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் இயக்கர் குலப்பெண்ணான குவேனி நூல் நூற்றுக்கொண்டிருந்ததாக புராணக்கதைகளில் கூறப்படுகின்றது. குவேனி தம்மன்னாவ என்ற வர்த்தக நகரத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணாக இருக்கலாமெனவும், அவள் நூல் நூற்றுக்கொண்டிருந்ததாகக் கூறப்படக்கூடிய விவரணத்தினடிப்படையில் அவள் ஆடைகளை தயாரிப்பதற்கான தொழிற்சாலையொன்றுக்கு உரித்துடைய ஒரு பணவசதிபடைத்த பெண்ணாக இருந்திருப்பாள் என்பதை வரலாற்றில் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

அக்காலத்தில் இயக்கர் குலத்தவர்களிடம் இயந்திர உபகரணங்களை உருவாக்கக்கூடிய திறமை காணப்பட்டதுடன் அவர்களில் ஆண் மற்றும் பெண் இருபாலாரும் தம் அவயவங்களை மறைத்து ஆடை அணிந்திருந்ததாகவும் அறியப்படுகின்றது. இத்தகைய இயக்கர் குலத்தவரின் ஆடை ஒன்று தொடர்பான சான்றுகிடைக்கப்பெற்றுள்ளது. மகாகால சேன எனப்படும் இயக்கர் குல தலைவனின் திருமணம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் நிராயுதபாணிகளாக இருந்த அக்குழுவினரை எளிதாக கொலை செய்த விஜயனும் குழுவினரும் இயக்கர்களின் ஆடைகளை அணிந்துகொண்டதாக மாகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டைய காலத்தில் இலங்கை பூராகவும் பருத்தி நடப்பட்டிருந்ததாகவும், இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், வரலாற்றில் கூறப்படுகின்றது. இலங்கையிலிருந்து பருத்தித்துணியை எடுத்துச்சென்ற ஒரு வியாபாரி தொடர்பாகவும் வரலாற்றுக்கதைகளுடன் தொடர்பான ஓவியக்கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கி.பி.1148இல் தம்பதெனியில் ஆட்சி செய்த புலமைமிக்க பௌத்த மன்னனான பராக்கிரமபாகு மன்னன் ஒரே நாளில் பருத்திப்பஞ்சைப்பறித்து துணியாக நெசவு செய்து அதே தினத்தில் மாலை வேளையில் சிவுற எனப்படக்கூடிய 80 துணிகளை தயாரித்து தானம் செய்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டைய இலங்கையில் எல்லோருடைய வீட்டுத்தோட்டங்களிலும் சில பருத்திச்செடிகள் நடப்பட்டு அதன் மூலம் பெறப்படக்கூடிய பஞ்சால் கிராமிய மக்கள் தமக்குத்தேவையான ஆடைகளைத்தயாரித்துக்கொள்வதற்கு பழக்கப்பட்டிருந்ததாக ரொபட் நொக்ஸ் என்பவர் தனது ஹஎதா ஹெலதிவஹ எனப்படும் நூலில் குறிப்பிடுகின்றார்.

"புடைவை நெய்தல் கைத்தொழிலானது சிங்களவர் மத்தியில் குறைந்தளவான முன்னேற்றத்தையே கண்டுள்ளது. அயர்லாந்து நாட்டின் சில பிரதேசங்களில் காணப்படக்கூடிய முன்னேற்றகரமற்ற நெசவுத்தறிக்கு சமமானதாக அவர்களுடைய நெசவுத்தறி காணப்படுகின்றது. நிலத்தில் அமர்ந்தவாறு அதன் இயக்குநர் அதனை இயக்குவார். அவர் கால்களை தரையில் தோண்டப்பட்ட குழியொன்றில் வைத்துக்கொள்வார். முஸ்லின் எனப்படக்கூடிய வகையைச்சேர்ந்த துணி எமது நாட்டில் நெசவு செய்யப்படுவதில்லை. சாதாரண மக்கள் அணியக்கூடிய திடமான நீண்ட பாவனையையுடைய பருத்தித்துணியைத்தவிர ஏனையவை எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதில்லை". வைத்தியக்கலாநிதி ஜோன் டேவி என்பவரின் இலங்கையின் உள்ளகம் அதன் மக்கள் மற்றும் அத்தீவில் மேற்கொண்ட சுற்றுலா என்ற நூலிலிருந்து பெறப்பட்டது.

அசுர யுகத்தில் இலங்கையில் நெசவுக்கைத்தொழிலுக்கு விசேடமான ஓர் இடம் வழங்கப்பட்டிருந்தது. பருத்திச்செடியிலிருந்து பறித்தெடுக்கப்படும் பஞ்சிலிருந்து நூல் தயாரிக்கப்படும். அத்தகைய நூலைப் பயன்படுத்தி புடைவை நெசவு செய்வதற்காக பல்வேறு நெசவுத்தறி இயந்திரங்கள் அக்காலத்தில் காணப்பட்டன. அவை திறந்த பரப்பொன்றில் அமைக்கப்பட்டிருக்கும். பாரம்பரிய முறையில் நெசவு செய்வோர் கதிரையில் அமரமாட்டார்கள். அவர்கள் நிலத்தில் ஒரு சிறிய குழியைத்தோண்டி தமது இரு கால்களையும் அதில் வைத்துக்கொள்வர். இதன்போது அவர்கள் உயர்ந்த தரையில் அமர்ந்தவாறு இருப்பார்கள் (பெலடியஸ் என்பவரின் இலங்கை பற்றிய புராண நூல்). இத்தகைய இயந்திரங்கள் இந்தியா மற்றும் புரூனையில் காணப்படுகின்றது. தற்போது உடுதும்பர பிரதேசத்தில் யக்தெஸ்ஸாகே என்ற பரம்பரைப் பெயரையுடைய மக்கள் நெசவுத்தறியை பயன்படுத்துகின்றனர்.

இலங்கையின் ஆடைகள் காஷ்மீர் அரசிகள் மத்தியில் பிரசித்தமடைந்திருந்தது. கி.பி. 1500-1600 இற்குமிடைப்பட்ட காலத்தில் உலகம் பூராகவும் புடைவை வகைகளை பகிர்ந்தளிக்கும் மத்திய நிலையமாக இலங்கை காணப்பட்டதாக காஷ்மீர் ராஜ தரங்கணி சாட்சிபகர்கின்றது. 12 ஆம் நூற்றாண்டில் காஷ்மீரில் பிராமண இனத்தவரான கல்ஹான என்பவரால் தொகுக்கப்பட்ட 'ராஜ தரங்கணிய' எனும் நூல் இலங்கையில் மகாவம்சத்தை ஒத்த முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று மூலமாக கருதமுடியும்.

இங்கு குறிப்பிடப்படுவதன் படி எமது நாட்டவரால் பல்வேறு அலங்காரங்களுடன் தயாரிக்கப்பட்ட ஆடைகளுக்கு காஷ்மீரில் கி.பி.5ஆம் நூற்றாண்டளவிலேயே உயர்ந்த கேள்வி நிலவிவந்துள்ளது. அரச குடும்பத்தவர்களுக்கு துணிமணிகளை வழங்கியதன் மூலம் இலங்கைக்கும் காஷ்மீருக்குமிடையிலான பொருளாதார தொடர்பு ஆரம்பித்துள்ளது. கி.பி.515 முதல் 530 ஆம் ஆண்டுவரை வட இந்தியாவை ஆட்சி செய்த மிகிரகுல எனப்படக்கூடிய மன்னன் இந்தியாவையும் இலங்கையும் ஆக்கிரமிப்புச்செய்ததற்கான சான்றுகள் ராஜ தரங்கணியில் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் மிஹிரகுல மன்னனின் மனைவியின் ஹெட்டய எனப்படும் ஆடையே என்றால் நீங்கள் ஆச்சரியமடைவீர்கள். அவள் அணிந்திருந்த ஒரு ஆடையில் தங்க நிறத்தில் அலங்காரம் செய்யப்பட்ட பாதச்சின்னமொன்றைக் கண்டு அவன் ஆத்திரமடைந்துள்ளான். சிலோன் தேசத்தில் அரசனின் பாத அடையாளத்தை ஆடைகளில் பொறிப்பதால் சினமுற்ற அவன் இலங்கைக்கு எதிராக தாக்குதல் மேற்கொண்டதாக கல்ஹான குறிப்பிடுகின்றார்.

1980 களின் பின் எமது நாட்டில் கைத்தறி நெசவு மூலம் தயாரிக்கப்படக்கூடிய அலங்காரங்களைக் கொண்ட புடைவை உற்பத்தி உயர்தரமான உற்பத்தியாக புத்துணர்வு பெற்றுள்ளது. சுற்றுலா வர்த்தகத்தின் வேகமான வளர்ச்சியோடு ஆடைக் கைத்தொழிலை அடிப்படையாகக்கொண்ட தகுந்த சந்தை ஒன்றை அமைக்கவேண்டியேற்பட்டது. தற்போது கைத்தறி நெசவு செய்யப்பட்ட ஆடைகளுக்கு (Handloom) வெளிநாட்டு சந்தையில் மிக உயர்வான கேள்வி நிலவுகின்றது.

உள்நாட்டு சந்தையிலும் கைத்தறி நெசவு செய்யப்பட்ட சேலை, சாரன் போன்ற ஆடைகள் ரூபா 3000 ஐ விட கூடுதலான விலைகளில் விற்கப்படுகின்றது. ஆடை நெசவுக்கைத்தொழிலுடன் தனியார் துறை மட்டுமன்றி அரசும் தொடர்புபட்டுள்ளதுடன் 2015 ஆம் ஆண்டின் ஏற்றுமதி அபிவிருத்தி குழுமத்தின் ஆடை நெசவுக் கைத்தொழிலுடன் தொடர்பான

(18 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அரியாலை

யாழ்ப்பாணம் நகரில் இருந்து கண்டி நெடுஞ்சாலை வழியே சுமார் 4 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பிரதேசமே அரியாலை. முன்னர் இந்தப் பகுதியில் மர அரிவு ஆலைகள் அதிகளவில் காணப்பட்டன. இதனாலேயே (அரிவு ஆலை) அரியாலை எனப் பெயர் பெற்றது.

கல்வி மற்றும் சமூக வளர்ச்சியில் மிகவும் முன்னணியில் நிற்கும் இந்தப் பிரதேசத்தவர்களுக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி), ஸ்ரீபார்வதி வித்தியாலயம், துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், விக்னேஸ்வரா இந்து மகா வித்தியாலயம், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், கிழக்கு அரியாலை ஆரம்பப் பாடசாலை ஆகியன அறிவொளி பரப்புகின்றன.

இன்றளவும் சனசமூக நிலையங்களை திறம்படக் கையாள்வதும் தொடர்ச்சியாக இயக்குவதும் இந்த ஊரின் மிகச் சிறப்பான அம்சமாகும். பெரும்பான்மையாக இந்து மதத்தைப் பின்பற்றும் மக்களைக் கொண்ட இந்தப் பிரதேசத்தில் இராஜஇராஜேஸ்வரி அம்பாள் (பேச்சி அம்மன்) ஆலயம், ஸ்ரீசித்தி விநாயகர், அரியாலை சிவன் ஆலயம், பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில், முத்து வைரவர் ஆலயம், கொட்டுக் கிணறுப் பிள்ளையார் ஆலயம், வெயிலுகந்தப் பிள்ளையார், நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் நாச்சியம்மன், வீரபத்திரருக்கு என ஏராளமான கோவில்களுடன் சென்.மரியா, சென். ஜேம்ஸ், யூதா மாதா தேவாலயம் கிறிஸ்தவ தேவாலயங்களும் உள்ளன.



யாழ். பல்கலைக் கழகத்தை சேர்ந்த பேராசிரியர் மோகனதாஸ், கலாநிதி சோமசேகரம், மருத்துவர் ம.கணேசரட்ணம் போன்ற பல கல்விமான்கள் அரியாலையை சேர்ந்தவர்களே. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிற்றம்பலம் (மன்னார்), கனகரட்ணம், முன்னாள் யாழ். நகர முதல்வர்களான சி.பொன்னம்பலம், சி.காசிப்பிள்ளை, எஸ்.சி.மகாதேவா போன்ற அரசியல்வாதிகளும் இந்த இடத்தைச் சேர்ந்தவர்களே.

ஆயுதப் போராட்ட காலத்தில் இந்த மண்ணின் மைந்தர்களின் தியாகம் போற்றுதற்குரியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளரான பொட்டு அல்லது பொட்டம்மான் என அழைக்கப்படும் சண்முகலிங்கம் சிவசங்கர், பிரிகேடியர் பானு (சிவநாதன் சோமசேகரன்) போன்ற தளபதிகளும் அரியாலையை சேர்ந்தவர்களே. இவர்கள் தவிர ஏராளமான வீரர்கள் தமிழர்களின் உரிமைக்காக தங்களின் உயிர்களை உரமாக்கியிருந்தனர்.

# தொதல்



ஈழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இன்று பிரபல்யம் பெற்றிருக்கும் தொதல் இனிப்பு வகை சிற்றுண்டியாகும். முஸ்லிம்களின் உணவுப் பாரம்பரியத்தில் இதற்கெனத் தனி இடம் உண்டு.

ஈழத்தில் பிரபலம் பெற்ற இந்த சிற்றுண்டி தென்னிலங்கையில் உருவானதாகக் கொள்ளப்படுகிறது. இதனை மலாயர்களை ஈழத்தவர்க்கு அறிமுகப்படுத்தினர் என்போரும் உண்டு. இதேபோல் யாழ்ப்பாணத்திலேயே இந்த உணவு தோற்றம் பெற்றதெனக் கூறுவோரும் உளர்.

யாழ்ப்பாணத்தவர்களால் சர்க்கரைக் களி என அழைக்கப்பட்ட இந்த உணவு சிங்களத்தில் களுதொதல் என அழைக்கப்படுகிறது. தமிழர்கள் சர்க்கரை அல்லது பனங்கட்டியையும் சிங்களவர்கள் கித்துள் கட்டியையும் பயன்படுத்துகின்றனர்.

**செய்முறை**

தேவையான பொருள்கள்

பச்சரிசி 500 கிராம்

தேங்காய் - 2

சீனி - 500 கிராம்

பனங்கட்டி / சர்க்கரை 250 கிராம்

சவ்வரிசி / வறுத்த பாசிப்பயிறு 50 கிராம்

ஏலக்காய், கஜூ அல்லது கச்சான், முந்திரிகை வத்தல் என்பன தேவையான அளவு

பச்சரிசியை ஊறவைத்து இடித்து அரித்து மாவாக எடுத்துக் கொள்ள வேண்டும். தேங்காயைத் துருவி அதன் பாலைத் தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அகன்ற சட்டியில் பச்சரிசி மா, தேங்காய்ப் பால் 6 கப், சீனி, பனங்கட்டி, பாசிப்பயறு இவற்றை ஒன்றாக ஊற்றி இரண்டு மணி நேரம் கிளற வேண்டும்.

பின்னர் 2 கப் தேங்காய்ப் பாலை ஊற்றிக் கலவை திரண்டு அல்வா போன்ற வடிவம் வரும் வரையிலும் கிண்ட வேண்டும்.

பின்னர் ஏலக்காயைப் பொடியாக்கித் தூவ வேண்டும். பின்னர் தேவைப்பட்டால் கஜூ, முந்திரிகை வத்தலை மேலே தூவலாம். கையில் ஒட்டாத பதம் வந்ததும் சட்டியை அடுப்பில் இருந்து இறக்கி ஆற வைக்கவும். நன்றாக ஆறிய பின்னர் துண்டுகளாக வெட்டிப் பரிமாறலாம்.



# படிக்கம்



தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு உலகப் பெருமை மிக்கது. இந்தப் பண்பும் இன்று மங்கி வந்தாலும் வந்தாரை வரவேற்கும் பண்பு இன்னமும் நம்மை விட்டு அகலவில்லை என்பது மகிழ்ச்சிக்குரியது.

விருந்தோம்புவதில் சிறந்த தமிழர்கள் அதற்கு பல வகையான பாத்திரங்களைப் பயன்படுத்தினர். விருந்தினர்கள் விருந்துண்டதும் இருந்த இடத்திலேயே கையைக் கழுவுவதற்காக படிக்கம் என்ற பாத்திரத்தைப் பயன்படுத்தினர்.

தாம்பூலம் தரித்த பின்னர் அந்த எச்சிலை துப்புவதற்கு தாம்பூலப் படிக்கம், சாம்பல் அள்ளுவதற்கென சாம்பல் படிக்கம், தெய்வங்களின் முழுக்காட்டு நீரை சேகரிப்பதற்கான அபிஷேக படிக்கம் என முன்னைய தமிழர்களிடம் பலவகைப் படிக்கங்கள் காணப்பட்டன. படிக்கங்கள் பொதுவாக வெண்கலத்தில் உருவாக்கப்பட்டன.

இன்றைய நவீனத்தில் படிக்கங்கள் எம்மிடையே மறந்து விட்டன. ஆனாலும் அது சார்ந்த பண்பாடுகள் இன்னமும் சிலரிடம் ஒட்டியிருக்கின்றன. மேலும், இன்றைய தமிழர்கள் படிக்கம் என்பதற்குப் பதிலாக கிண்ணம் என்ற சொல்லையே பயன்படுத்தி வருகின்றனர்.



# கருக்கு மட்டை வேலி


காணிகளுக்கு எல்லையாக வேலி அமைக்கும் பண்பு தமிழரிடம் உண்டு. இவ்வாறு வேலி அமைக்கும்போது குறித்த காணிக்குள் நடப்பதை பிறர் அறியாதவாறு அடைத்து தமது தனியுரிமையைப் பேணும் பண்பும் காணப்பட்டது.

வேலிகளை அடைப்பதற்கு பனை மட்டை (கருக்கு மட்டை), கிடுகு, பனை ஓலை, தென்னை மட்டை என்பவற்றை எம் முன்னோர் பயன்படுத்தினர். மட்டைகளை ஒவ்வொன்றாக வைத்து வரிவதே ஒரு கலையாக இருந்தது.

கால மாற்றம் தகரங்களையும், மதில்களையும் எல்லைகளாக்கி விட்டன. எனினும் இன்றும் கிராமங்களின் சில பகுதிகளில் வேலிகளைக் காண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்னங்கள் சூழ் காலமும் ஒரு கமெராக்காரனும்





சிறுவர்களும், ஆடுகளும் விளையாடும் போது நிறைய ஒளிப்படங்கள் எடுத்தேன். நிறைவில், எஞ்சியிருந்த சில சிறுவர்களுடன் நான் எடுத்துக்கொண்ட ஒளிப்படம் ('செல்பி') இது.

இதில் பின்னால் இருக்கும் மூன்று சிறுவர்களும் என் அண்ணனின் பிள்ளைகள். வலது பக்கம் எனக்குப் பின்னே இருக்கும் எனது அண்ணனின் மகனாகிய லின்ரன்.(என்னைப் போல மேலாடை அணிந்திருப்பவர்) முள்ளிவாய்க்காலில் இலங்கை இராணுவத்தினரின் கனரக எறிகணைத் தாக்குதலில், தனது தந்தையோடு படுகொலைக்குள்ளானார். பின்னால் இருக்கும் மற்றைய இரண்டு சிறுவர்களும் (அண்ணனின் பிள்ளைகள்) யுத்தத்தின் கோரப் பிடியில் இருந்து தப்பிவந்து ஐந்தாம் வாய்க்கால் பகுதியில் வசிக்கத்தொடங்கி விட்டனர்.

அவர்களுக்கு இப்போது ஓர் அக்கா இல்லை.(காணாமல் ஆக்கப்பட்டவர்) அவர்களுக்கு ஓர் அண்ணா இல்லை, (லின்ரன்) அவர்களுக்கு அப்பாவும் இல்லை. அந்த உறவுகளை இல்லாமல் ஆக்கிய 'யுத்தம்', அந்த ஐந்தாம் வாய்க்கால் பகுதியில் சத்தமில்லாமல் 'நிலைகொண்டிருப்பதை' நான் பார்த்தேன். யுத்தம் ஓய்ந்த பிறகு பார்த்தேன்... உறவு களை இழந்த மக்கள் மீள்குடியேறிய பிறகு பார்த்தேன்... இந்தப் படத்தில் முன்னால் இருக்கும் மூன்று சிறுவர்களும் இறுதி யுத்தத்தில் தப்பியிருப்பார்களா என்று தெரியவில்லை. அவர்கள் இப்போது எங்கிருக்கிறார்களோ....? நிறைய ஒளிப்படங்களை யுத்தகாலத்தில் இழந்தேன். தப்பிவந்த ஒளிப்படங்களில், எனக்கு முக்கியமானவற்றுள் ஒன்று இது.

இறுதி யுத்தம் உக்கிரமாக நடந்துகொண்டிருந்த நேரம். வலைஞர்மடம் பகுதியில் இருந்த ஒரு தேவாலயத்தின் முன் பதிவாக்கப்பட்ட ஒளிப்படம் இது.

இடம்பெயர்ந்திருந்த மக்களின் குடியிருப்புக்களை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினரின் கனரக ஆயுதங்களின் தாக்குதல்கள் பரவலாக நடந்துகொண்டிருந்தன. விடுதலைப் புலிகளின் கட்டாய ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் மோசமாக நடந்து கொண்டிருந்தன. மக்கள் பலர், தமது கொட்டகைகளை விட்டு வெளியேறி அந்தத் தேவாலயத்தின் சூழலில் தஞ்சமடைந்திருந்தனர்.

இராணுவத்தினரின் கனரக ஆயுதத் தாக்குதல் ஒன்றில் படுகாய மடைந்திருந்த எனது பெரியண்ணாவும் சில நாள்கள் அங்குதான் போய் இருந்தார். அவர் மிகவும் பயந்த நிலையில் இருந்தார். அவரைத் தேற்றவும் அவரது மருத்துவத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் நான் மிகுந்த சிரமப்பட்டேன். யுத்தத்தில் எந்தவகையிலும் சம்மந்தப்படாத வர்களை யுத்தம் எப்படி யெல்லாம் ஆக்கிரமித்து வதைக்கும் என்பதை நான் எனது அண்ணனில் பார்த்தேன். (பிறகு அவர், முள்ளிவாய்க்கால் பகுதியில் இராணுவ எறிகணைத் தாக்குதலில் தனது மூத்த மகனுடன் படுகொலைக்குள்ளானார்.)

அவரைப் பார்க்கவென நான் அடிக்கடி அந்தத் தேவாலயச் சூழலுக்குப் போவேன். அந்தச் சூழலுக்கேயான அவல நிகழ்வுகள் பலவற்றை அங்கிருந்த மக்கள் அறிவார்கள். அந்தச் சூழலில் நிறைய ஒளிப்படங்கள் எடுத்தேன். என்னைப் பார்க்க வந்திருந்த எனது தம்பியுடன் என் அண்ண னைப் பார்க்கப் போயிருந்த ஒரு நாளில், அங்கிருந்த சிறுவர்களை அழைத்து அவர்களோடு உரையாடிக்கொண்டு என் அண்ணனையும் தம்பியையும் பக்கத்தில் இருத்திவைத்துக்கொண்டு நான் பதிவாக்கிய 'சுய ஒளிப் படம்' இது. (இதுவும் ஒரு 'செல்பி' தான்.



இப்படியான பல ஒளிப்படங் களையும் யுத்த காலத்தில் எடுத்திருக்கிறேன்.) இந்தப் படம் எடுத்தபோது கூட நினைத் தேன், இந்தச் சிறுவர்கள் இனி என்ன ஆவார்கள் என்று... இறுதி யுத்தத்தில் இவர்களுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. இப்போது இவர்களில் சிலராவது எஞ்சியிருக்கக் கூடும். எங்கிருக்கிறார்களோ....? என் படங்கள் பலவற்றின் பின்னே பல கதைகள் இப்படியாக...

● அமரதாஸ்








யுத்தம் தீவிரமடைந்திருந்தது. அடிக்கடி 'இருப்பிடத்தை' மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்... ஒரு தற்காலிக இருப்பிடத்தை விட்டு, அடுத்த இருப்பிடம் தேடி இடம்பெயர்ந்து ஓடுவதற்கு இடையில் வலைஞர்மடத்தடியில் பதிவாக்கிய 'சுய படம்' இது. ('செல்பி') நெருக்கடியான பல சந்தர்ப்பங்களில், என்னைக் காவித்திருந்த எனது மோட்டார் சைக்கிளுக்கு என் [illegible] 'சா[illegible]களும்' தெரியும். [illegible] ஒரு இடத்தில் எறிகணைத் தாக்குதல்கள் நடந்துகொண்டிருக்கும் போது, எறிகணைகள் விழும் நேர இடைவெளிகளைக் கணக்கிட்டுக்கொண்டு 'அந்த இடத்தை' ஊடறுத்துக் கடந்திருக்கிறேன், இந்த மோட்டார் சைக்கிளில். (அப்படி ஊடறுத்துக் கடந்தேயாக வேண்டிய அவசிய நிலைமை அப்போது.) அரிதாகக் கிடைக்கக் கூடியதாக இருந்த மண்ணெண்ணெய்தான் அப்போது இதன் எரிபொருள். 'பெற்றோல்' அல்ல. இது, இறுதியில் முள்ளிவாய்க்காலில் கைவிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாகரனை கொச்சைப்படுத்திய நிராஜ்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பும் புலிகளும்

**உணர்வுபூர்வமான பிரியாவிடை**

படையணிகளுக்கான இடையிலான உறவு ஆழமானது. அவர்கள் பிரியும் தருணங்களும் உணர்வுபூர்வமானவை. " நாங்கள் எங்கள் மண்ணுக்குச் செல்லப்போகிறோம். எமது மண்ணில் எமக்கான கடமைகள் காத்திருக்கின்றன. இவ்வளவு காலமும் வன்னி மக்கள் எங்களைத் தங்கள் பிள்ளைகள் போல் நடத்திய அந்த நினைவுகள் எங்களால் மறக்க முடியாதவை.

களத்தில் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக இன்பதுன்பங்களில் பங்கேற்ற நிகழ்வுகள் எம் நினைவில் உள்ளன" என வன்னியில் உள்ள படையணிகளுக்கு ஒரு மடல் மூலம் தெரியப்படுத்தினர் மட்டக்களப்புப் படையணியினர். "போய் வருகிறோம் தோழர்களே" என்ற தலைப்பிலான அந்த உணர்வுபூர்வமான பிரியாவிடை மடல் ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

பதிலுக்கு வழியனுப்பும் மடல் ஒன்று வன்னியிலுள்ள படையணிகள் சார்பில் மட்டக்களப்புப் படையணிகளுக்கு அனுப்பப்பட்டது. அதில் "உங்களது மண்ணை, தாய் தந்தையரை, உற்றார், உறவினர்களைப் பிரிந்து இவ்வளவு காலமும் களத்தில் நீங்கள் போராடினீர்கள். உங்களது வீரத்தையும், தியாகத்தையும் நேரே கண்ணால் கண்டவர்கள் நாங்கள். அவை என்றும் எம்மால் மறக்க முடியாதவை.

இந்தப் பிரிவு தவிர்க்க முடியாததுதான். தேவையைப் பொறுத்துச் சந்தித்துக் கொள்வோம்" என்ற அர்த்தம் காணப்பட்டது. இக்கடிதமும் ஈழ நாதத்தில் பிரசுரமானது. அதன் தலைப்பு "சென்று வாருங்கள் தோழர்களே" என்று காணப்பட்டது. ( இவ்விரு கடிதங்களும் வரிக்கு வரி அப்படியே இங்கு குறிப்பிட வில்லை. அர்த்தமும் உணர்வும் அப்படித்தான் இருந்தன.)

விறாந்தையில் நின்றிருந்தாலாவது ஊகத்திலேனும் வரலாறு தெரிந்திருக்கும். வரலாறு என்பது நடந்து முடிந்தது. அதைத் தனிநபர்களின் விருப்பத்துக்கேற்ப விமர்சனம் செய்வதும் மாற்றமுனைவதும் மகா தவறு.

இன்னொரு விடயம் - அமெரிக்க பழமொழி ஒன்று ஒண்டு. "ஒருவனது வாழ்க்கையைக் கொஞ்சமாவது வாழ்ந்து பார்க்காமல் ஒரு போதும் அம்மனிதனை விமர்சனம் செய்யாதே" (தி இந்து 20.04. 2016.)


கரிகாலன்
ரமேஷ்

திருவிழாக்களில் தவில், நாதஸ்வரக்குழுக்களை அழைப்பதுண்டு. இதற்கான விளம்பரத்தில் யார் பிரபலமானவரோ அவரின் பெயரையே குறிப்பிடுவதுண்டு. தவில் என்றால் தட்சணாமூர்த்தி, கைதடி பழனிமலை, நாச்சிமார் கோவிலடி கணேசன் பெயரால் இக்குழுக்கள் குறிப்பிடப்படும். அதே போல நாதஸ்வரம் என்றால் அளவெட்டி கே.பத்மநாதன், சாவகச்சேரி பஞ்சாபிகேசன் மற்றும் பாலகிருஷ்ணன் பெயரால் அழைப்படுவதுண்டு. சுருதிப் பெட்டி வாசிப்பவரின் பெயரிலோ, தாளம் போடுபவரின் பெயராலோ இக் குழுக்கள் அழைக்கப்படுவதில்லை. நான் இல்லாவிட்டால் இந்த வித்துவான்கள் கச்சேரிசெய்ய முடியுமா என இவர்கள் கேட்பதுமில்லை. ஆனால் அரசியலில் தான் இவ்வாறான நிலைமை உள்ளது. ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த கதையாக கிழக்கிலங்கை பத்திரிகை சங்கத்தினராகிய தாங்கள் உருவாக்கிய கூட்டமைப்பு என்னும் கூடாரத்துக்குள் புலிகள் என்னும் ஒட்டகம் புகுந்து விட்டது என்ற சாரப்பட எழுதுகிறார்கள் - சொல்கிறார்கள்.

நடேசனின் 9ஆவது ஆண்டு நினைவையொட்டி 31.05.2013 அன்று எழுதிய கட்டுரையில் லேக்ஹவுஸ் இரா.துரைரத்தினம் "தமிழ் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் தான் உருவாக்கினார்கள் என பிழையான வரலாற்றை இன்று சிலர் கற்பிக்கின்றனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**பிரபாகரனின் சிந்தனையைக் கொச்சைப்படுத்திய நிராஜ் டேவிட் !**

கடந்த 26.11.2016 அன்று ஐ.பி .சி தொலைக்காட்சி ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்பியது. அதில் கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றி நேயர் ஒருவர் எழுப்பிய வினாவுக்கு பதிலளித்த நிராஜ் டேவிட் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இங்கு பலர் கூறிக்கொண்டு இருக்கிறார்கள் - விடுதலைப் புலிகள்தான் உருவாக்கினார்கள் - தலைவரின் சிந்தனையில் தான் உருவானதென்று. தேசியக் கூட்டமைப்பு உருவாக்க காலகட்டத்தில் நான் அங்கு ஊடகப்பணியை ஆற்றிக்கொண்டிருந்தேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையிலேயே கிழக்கில்தான் உருவாக்கப்பட்டது. மாமனிதர் சிவராம், நடேசன், இரா. துரைரத்தினம், சண்.தவராஜா போன்றவர்களால் உருவாக்கப்பட்டது" என கற்பூரத்தை அணைக்காத குறையாகச் சத்தியம் செய்தார்.

இந்நிகழ்ச்சியானது வேள்வியை நினைவூட்டுகிறது. ஆட்டை அலங்கரிப்பதும், மாலைபோட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்வதும் அழகாகத்தான் இருக்கும். ஆனால் முடிவு என்ன என்பதுதான் முக்கியம். இறுதியில் ஆட்டின் கழுத்தில் வாளை வைத்த பூசாரியின் நிலையில் தான் நிராஜ் டேவிட் நிற்கிறார். அவரைப் பொறுத்தவரை அவரது சாமி இரா. துரைரத்தினம். ஆடு என்பது உண்மை.

இதேவேளை கிழக்கிலங்கையில் இருந்து திருமலை எப்போது விவாகரத்துப் பெற்றது என்பதை இவர் விளக்கவில்லை. 2000தேர்தலில் திருமலையில் தமிழ்ப் பிரதிநித்துவம் இழக்கப்பட்டமையைத் தொடர்ந்து ரூபனைப் பிரபாகரன் அங்கு அனுப்பி வைத்தமை பற்றி இவருக்கு எதுவுமே தெரியாது. ரூபன் - சம்பந்தன் ஐயா சந்திப்பு, 2001 தேர்தல் மூலம் மீண்டும் சம்பந்தன் ஐயா, நாடாளுமன்றம் சென்றமை, தேசியப்பட்டியல் நியமனத்தைத் துரைரெட்ணம் மாஸ்டருக்கு வழங்குமாறு ரூபன் வேண்டிக்கொண்டமை பற்றியெல்லாம் இவருக்குத் தெரியாது .ஆனால் திருமலை மக்களுக்குப் புரியும்.


மட்டு.படையணியின் வெளியேற்றம் தொடர்பாக பிரபாகரன், பொட்டு போன்றோரின் ஆற்றலைக் குறைவாக மதிப்பிட்டமை போன்றே கூட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாகவும் இவரது கருத்து அமைந்துள்ளது. புலிகள் 1994 இல் யாழ்ப்பாணத்தில் இப்பணியை சிவராமிடம் ஒப்படைத்திருந்தனர். அந்தக் காலத்தில் நிராஜ் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்திலேயே பணியாற்றியிருப்பார்.

1980 பின்னர் 2009 வரை தமிழரின் அரசியல் தொடர்பான விடயங்களில் ஏதோ ஒரு வகையில் புலிகள் சம்பந்தப்பட்டிருந்தனர். அவர்களை விடுத்து அரசியல் முன்னெடுப்பு ஒன்றைத் தாங்கள் மேற்கொண்டதாக யாராவது கூறினால் வடிவேலுவின் வசனமொன்றுதான் நினைவுக்கு வரும் - "சின்னப் புள்ளத் தனமால்ல இருக்கு"

அண்மையில் புதிய கட்சியொன்றை ஆரம்பித்து வைத்த கருணா "விடுதலைப் புலிகள் இயக்கத்தால் உருவாக்கப்பட்டதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் இதற்கு நானும் அடித்தளம் இட்டனான்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

கருணா ஒரு துரோகி என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை கூட்டமைப்பின் உருவாக்கத்தில் தனது பங்கு தொடர்பாக கூறியிருந்ததும். ஏனெனில் அது வரலாறு. இந்த இரண்டில் ஒன்றைக் கூட நிராகரிக்க முடியாது.


நிராஜ் டேவிட்



நிராஜ் டேவிட்டும் - லேக்ஹவுஸ் இரா. துரைரத்தினமும் புலம் பெயர் நாட்டுக்குச் செல்லும்வரை பெரும்பாலும் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியிலேயே வாழ்ந்து வந்தனர். இதனால்தான் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான யதார்த்தத்தின் அரிச்சுவடி கூட அவர்களுக்குப் புரியாமல் போயிற்று. இந்த யதார்த்தம் அரசுக்குப் புரியும். போராட்டத்துடன் கலந்திருந்த மக்களுக்கும் தெரியும். இவற்றில் சிலவற்றை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இம்முறை ஐ.பி.எல் போட்டிகளில் மூன்றாவது முறை சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணிக்கு மும்பை இந்தியன்ஸ் இலட்சினை பொறித்த சம்பியன் பெல்ற் ஒன்றை முன்னாள் சம்பியனாகவும் WWE நிர்வாகத்தில் Chief Operating Officer ஆகவும் விளங்கும் றிபிள் எச் சில தினங்களுக்கு முன்னர் வழங்கி ஆச்சரியப்படுத்தி உள்ளார். ஏற்கனவே இம்முறை ஐ.பி. எல் போட்டிகளுக்கு WWE சுப்பர்ஸ்ரார்களான பிக் ஈ மற்றும் கொபி கிங்ஸ்ரன் போன்றவர்கள் வருகை தந்தது வரவேற்பை பெற்றுள்ள நிலையில் WWE போட்டிகளின் மீது இந்திய ரசிகர்களை மேலும் உள்ளீர்ப்பதற்கான ஓர் உபாயமாகவே இது கருதப்படுகின்றது.

தொகுப்பு:
சி.விமலன்





# நிறைவேறும் ஆசை

பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தமீம் இக்பால் மிகுந்த மனமகிழ்ச்சியில் இருக்கின்றார். உதைபந்தாட்ட ரசிகரான தமீம் இக்பாலுக்கு இன்று உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர நாயகனாய் விளங்கும் கிறிஸ்ரியானோ றொனால்டோ விளையாடும் ஒரு போட்டியை யாவது நேரில் பார்த்து விடவேண்டும் என்ற நீண்டநாள் ஆசை இருந்தாலும் நேற்றுவரை அது கைகூடி இருக்கவில்லை. ஆனால் நாளை ஞாயிற்றுக்கிழமை றொனால்டோ பங்குபற்றவுள்ள போட்டி ஒன்றை முதன்முறையாக நேரடியாகப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டே அவர் மகிழ்ச்சியில் இருக்கின்றார்.

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி ஞாயிறு இரவு வேல்ஸ் நாட்டின் கார்டிவ் நகரில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் ஸ்பெயினின் றியல்மட்றிட் அணியும் இத்தாலியின் ஜுவென்ரஸ் அணியும் மோதுகின்றன. தற்போது சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்குபற்றுவதற்காக தமீம் இக்பாலும் இங்கிலாந்திலேயே தங்கி உள்ளார். எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தை தவற விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த தமீம் இக்பால் ஒரு வழியாக 2700 யூரோ கொடுத்து போட்டிக்கான ரிக்கெற்றையும் பெற்றுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் இங்கிலாந்தின் மன்செஸ்ரர் நகரில் ஏற்பட்ட குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்குபற்றும் வீரர்களின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் போட்டி மற்றும் பயிற்சி நடைபெறும் இடங்களைத் தவிர ஏனைய இடங்களுக்கு அநாவசியமாகச் செல்வதை இயலுமானவரை தவிர்க்கவே வீரர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனாலும் தமீம் இக்பால் இந்தச்சந்தர்ப்பத்தில் தனது ஆதர்ஷ நாயகனின் போட்டியை எப்படியாவது நேரடியாகப் பார்த்து விட வேண்டும் என்ற ஆவலில் அன்றைய தினம் போட்டியைப் பார்க்க அனுமதி தருமாறு பயிற்சியாளரான ஹத்துருசிங்கவிடமும் அணி நிர்வாகத்திடமும் கோரி உள்ளார். பங்களாதேஷ் அணிக்கு முதல் போட்டி அவுஸ்திரேலியாவுடன் எதிர்வரும் 5ஆம் திகதியே நடைபெறவுள்ளதனாலும் தமீம் இக்பாலின் மனநிலையைப் புரிந்து கொண்டதனாலும் அவர்களும் இதற்கு மறுப்பெதுவும் தெரிவிக்கவில்லை. ஆதலால் தமீமின் ஆசை ஞாயிற்றுக்கிழமை இரவு எப்படியும் நிறைவேறிவிடும்.




# நட்பின் சங்கமம்

பிறேசில் மற்றும் பார்சிலோனா அணிகளின் முன்னாள் நட்சத்திர வீரரான றொனால்டினோ கடந்தவாரம் பார்சிலோனா அணியினர் தமது சொந்த மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிக்கும் பொழுது முன்னறிவிப்பு ஏதுமின்றி வருகை தந்து வீரர்களுக்கு ஆச்சரியமூட்டியுள்ளார். 2003ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரை பார்சிலோனா அணிக்காக விளையாடிய றொனால்டினோ 2005 ஆம் ஆண்டு, 2006ஆம் ஆண்டு லாலிகா கிண்ணங்களையும் 2006ஆம் ஆண்டு சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தையும் பார்சிலோனா வெல்வதற்கு முதன்மையாய் விளங்கியவர்களில் ஒருவர்.

பார்சிலோனா வீரர்கள் ஸ்பானிய கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையே இடம்பெறும் கோப்பா ரெல் றேயின் இறுதிப் போட்டியில் அலவெல்ஸ் கழகத்தை எதிர்கொள்வதற்காக பார்சிலோனா அணியினர் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே றொனால்டினோ அவர்களைச் சந்தித்தார். இதன்போது "அலவெல்ஸ் அணிக்கு எதிரான போட்டி ஒரு சிறந்த போட்டியாக அமையும். அதிர்ஷ்டம் பார்சிலோனா பக்கமே இருக்கும். எல்லாம் நல்லபடியாக நடக்கும்" எனக் கூறியிருந்தார். அவர் கூறியது போன்றே 3:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றி பெற்று 29 ஆவது தடவையாக சம்பியனைக் கைப்பற்றியது.

# காத்திருக்கும் சவால்

இம்முறை ஐ.பி.எல். தொடரில் பயிற்சியாளராக முதல் முறை அவதாரம் எடுத்த மஹேல ஜெயவர்த்தன மும்பை இந்தியன்ஸ் சம்பியனானதன் மூலம் பலரது கவனிப்புக்கும் ஆளாகி இருந்தார். ஆனாலும் மும்பையின் வெற்றிக் கொண்டாட்டங்கள் நிறைவடைவதற்குள்ளேயே அவருக்கான அடுத்த பயிற்சியாளர் வாய்ப்பும் கிடைக்குமென அவரே எதிர்பார்த்திருக்க மாட்டார். சென்ற வாரம் பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் விளையாடும் அணிகளில் ஒன்றான குல்னா ரைற்றன்ஸ் அணி மகேலவை இரண்டு பருவகாலத்துக்கு தலைமைப் பயிற்சியாளராக நியமித்துள்ளதன் மூலம் இது நிரூபணமாகியுள்ளது. கடந்த வருடம் கிண்ணம் வென்ற டாக்கா டைனமைற்ஸ் அணியில் ஒரு வீரராக மஹேல விளையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து குல்னா ரைற்றன்ஸ் அணியின் நிர்வாக இயக்குனரான காஸி இனாம் அஹமட் : ஐ.பி. எல். போட்டிகளில் மும்பை அணி கிண்ணம் வென்றது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதற்கு மஹேலவின் வழிகாட்டலும் பிரதானமானது. அதனாலேயே அவரை இரண்டு பருவகாலத்துக்கு எமது அணிக்குத் தலைமைப் பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்துள்ளோம். அவரிடமிருந்து எமது அணி வீரர்கள் நிறைய விடயங்களைக் கற்றுக்கொள்வதோடு இந்தத் தொடரில் முன்னேற்றகரமான மாற்றத்தையும் அடைய முடியும் என்று நம்புகின்றோம் ' எனத் தெரிவித்துள்ளார்.

பயிற்சியாளராக மஹேல ஜெயவர்த்தனவின் திறமையிலோ அணுகுமுறையிலோ எந்தவொரு சந்தேகமும் இல்லை. ஆனால் மும்பை இந்தியன்ஸ் அணியில் மஹேல தலைமைப் பயிற்சியாளராக விளங்கினாலும் துடுப்பாட்டப் பயிற்சியாளராக றொபின்சிங், பந்துவீச்சுப் பயிற்சியாளராக ஷேன் பொண்ட் , களத்தடுப்புப் பயிற்சியாளராக ஜொண்டி றொட்ஸ் ஆகியோரோடு சச்சின் டெண்டுல்கரும் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கி இருந்ததனால் மஹேலவின் சுமையின் பெருங்பங்கினை அவர்களும் ஏற்று பணியை இலகுவாக்கி இருந்தார்கள். ஆனால் இத்தகைய கூட்டணி போல் பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் மஹேலவுக்கு ஒரு கூட்டணி வாய்க்குமா என்பது சந்தேகமே. எனவே இந்தத் தொடரில் கடும் சவாலை மஹேல சந்திக்க நேரிடும் என்பது மட்டும் உறுதி.

அதேசமயம் இதுவரை நடைபெற்ற பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் ஐ.பி. எல். தொடரைப் போன்றே ஒரு அணியில் நான்கு வெளிநாட்டு வீரர்கள் மாத்திரமே கலந்து கொள்ள முடியும் என்ற விதி இருந்தது. ஆனால் திறமையான பல வெளிநாட்டு வீரர்களை பெரும் விலை கொடுத்து வாங்கி விட்டு அவர்களை விளையாடும் 11 பேர் அணியில் இடம்பெறச் செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது. இதை நிவர்த்தி செய்யும் முகமாக இம்முறை ஒரு அணியில் 5 வெளிநாட்டு வீரர்கள் பங்குகொள்வதற்கு ஏற்றவாறு விதியில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. பிறீமியர் லீக் தொடர்களை ஒவ்வொரு நாடும் தத்தமது நாட்டில் உள்ள இளந்தலைமுறை வீரர்களை அடை யாளம் கண்டுகொள்வதற்கான களமாகவே ஆரம்பித்தாலும் இன்று அந்த நோக்கத்தைக் கேள்விக்குட்படுத்தி வணிக லாபத்தை கருத்திற்கொண்டு விளையாட்டின் சுவாரஸ்யத்துக்கு முன்னுரிமை கொடுப்பதை வரம் என்பதா? சாபம் என்பதா?




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 03.06.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org